

நவம்பர் - டிசம்பர் 1985 விலை ரூ. 4-00





அண்ணா மாவட்டம் திண்டுக்கல் காந்தி கிராமப் பல்கலைக் கழகத்தில் மாண்புமிகு அறநிலையத் [illegible]
அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்கள் "சமயமும் சமாதானமும்" என்ற தலைப்பில் [illegible]
ஆற்றிய போது எடுக்கப்பட்ட படம்.

முகப்பு

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தின் அழகிய முன்புறத் தோற்றம்

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை 27 | திருவள்ளுவர் ஆண்டு 2016 குரோதன ஆண்டு கார்த்திகை & மார்கழி நவம்பர், டிசம்பர் 1985 விலை ரூ. 4-00 | மணி : 11, 12

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்

உயர்திரு
ஆணையர் அவர்கள்
அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-600034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம் சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா
உள்நாடு ரூ 24.00
வெளிநாடு ரூ 36.00

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில் புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

## பொருளடக்கம்

அண்ணா மாவட்டம் காந்தி கிராமப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ''சமயமும் சமாதானமும்'' பற்றிய அகில உலக இளைஞர்கள் கருத்தரங்கில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய நிறைவு விழாச் சிறப்புரை.

இராஜ இராஜேஸ்வர விஜயம்
—டாக்டர் இரா. நாகசாமி

திருவள்ளுவர் காட்டும் பெரியாரைப் பிழையாமை
—டாக்டர் பொற்கோ

சஷ்டி விரதம்
—திருமுருக கிருபானந்தவாரியார்

கந்தர் சஷ்டிக் கவசம்
—தேவராய சுவாமிகள்

ஆனைக்காவில் அருள் புரியும் அகிலாண்டேசுவரி
—கவிஞர் விசுவநாதன்

திருமயிலை வெள்ளீசுவரர் தல வரலாறு

திருவண்ணாமலைத் தலப்பெருமை

திருவிழாக்களின் உண்மை விளக்கம்
—ஆர். பஞ்சநதம்

அருவிக்கரை ஆலயம்
—சி. பாலுபட்டர்

கிருட்டிணன் தூது
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

''அண்ணா வழியில் ஆர்.எம்.வீ.'' நூல் மதிப்புரை
—செவ்வேள்

அண்ணா மாவட்டம் காந்தி கிராமப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற

# ''சமயமும் சமாதானமும்''

பற்றிய அகில உலக இளைஞர்கள் கருத்தரங்கில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்

திருமிகு **இராம. வீரப்பன்** அவர்கள்

ஆற்றிய நிறைவுவிழாச் சிறப்புரை



சிறப்புமிகு துணைவேந்தர் டாக்டர் அறம் அவர்களே! மரியாதைக்குரிய பெரியவர் டாக்டர் அருணாசலம் அவர்களே! இங்கே வருகை தந்திருக்கின்ற உலகத்தின் பல்வேறு நாடுகளைச் சார்ந்த அறிஞர்களே! பெரியோர்களே! சகோதரிகளே! நண்பர்களே!

## தமிழ் மொழியில் பேசுகிறேன்

காந்திகிராமத்தில் பல்கலைக் கழகத்தினுடைய துணையோடு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் அவர்கள் இங்கே தெரிவித்ததைப் போல, ஒருமிகச் சிறந்த, நாட்டிற்கும் உலகிற்கும்தேவையான ஒரு கருத்தரங்கத்தை-விவாதத்தை உலகத்தின் பல்வேறு நாடுகளைச் சார்ந்த இளைஞர்களைக் கொண்டு நடத்துகின்ற இந்த நிகழ்ச்சியினுடைய நிறைவு நாள் விழாவில் கலந்து கொள்ள வேண்டுமென்று அன்போடு அழைத்த துணைவேந்தர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலகத்தின் பல்வேறு நாடுகளிலே இருந்து வந்திருக்கின்ற இளைஞர்கள் தெரிந்து கொள்வதற்கு ஆங்கிலத்திலே நான் உரையாற்ற வேண்டும். ஆங்கிலத்திலே உரையாற்றுகின்ற அளவிற்கு நான் பயிற்சி பெறவில்லை. ஆனால் என்னுடைய தாய் மொழியான தமிழ்மொழி, உலகத்தின் மிகச் சிறந்த மொழி என்கிற காரணத்தினாலும், தாய் மொழியை மாத்திரம் ஒருவன் தெரிந்துகொண்டால் அவன் உலகத்திலே இருக்கின்ற அத்தனைக் கருத்துக்களையும் தெரிந்து கொள்ள முடியும் என்கின்ற அந்த உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற காரணத்தினாலும் நான் முதலிலே என்னுடைய தாய்மொழியில் இந்த உரையினுடைய தொடக்கத்தை நான் நிகழ்த்திகொண்டிருக்கின்றேன்.

## தாய்மொழியைவிட எந்த மொழியும் சிறந்தது அல்ல

நான் என்னுடைய மொழி சிறந்த மொழி என்று எடுத்துச் சொல்லுவேனேயானால், இங்கே எட்டு நாட்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த சமாதானத்தை நாம் எப்படித்தேடுவது அல்லது அடைவது என்கின்ற முயற்சிக்கு அது ஒரு வகையிலே ஊறு விளைவிப்பதாகும். என்னுடைய மொழி உயர்ந்தது; என்னுடைய நாகரிகம் உயர்ந்தது, என்னுடைய சமயம் உயர்ந்தது; இன்னும் சொல்லப்போனால் என்னுடைய நாடு உயர்ந்தது,என்னுடைய நாட்டு மக்கள் உயர்ந்தவர்கள் என்கின்ற உணர்வுதான் இன்றைக்கு உலகத்திலே அமைதியைக் குலைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, நான் என்னுடைய தாய் மொழியை, என்னுடைய தாய் கற்றுத்தந்த மொழி என்கின்ற அந்த உரிமையோடு சொல்லுகிறேனே தவிர, மகாகவி பாரதி ''யாமறிந்த மொழி

களிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்'' என்று சொல்லியிருந்தாலும், உலகத்தினுடைய பல்வேறு நாடுகளைச் சார்ந்த இளைஞர்கள் கூடிக் கொண்டிருக்கிற இந்த அவையில், அது நீங்கள் தெரிந்து பாராட்ட வேண்டிய ஒன்றே தவிர, 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்பதைப் போல என்னுடைய தாய்மொழியை நானே உயர்ந்தமொழி என்று சொல்லுவது, இங்கே கூடி விவாதித்துக் கொண்டிருக்கின்ற அந்த அடிப்படை இலட்சியத்திற்கே சிதைவை ஏற்படுத்தும் என்று நான் கருதுகின்றேன். ஆகவே நான் எனக்குத்தெரிந்த தாய்மொழி என்கிற உரிமையைத் தெரிவிக்கின்றேனே தவிர, தாய்மொழியை ஒருவன் தெரிந்து கொண்டால், அதிலும் தமிழ் போன்ற தொன்மையான ஒரு தாய்மொழியைத் தெரிந்து கொண்டால், உலகத்திலே இருக்கிற பல்வேறு கருத்துக்களை அவனாலே எடுத்துச் சொல்ல முடியும் என்கின்ற அந்த உணர்வை நம்முடைய நாட்டு இளைஞர்களும் பெற்றுக் கொள்ள வேண்டும். தொடர்புக்காக வேறு பல மொழிகளை நாம் ஏற்றுக் கொள்கிறோமே தவிர, அந்த மொழியை நம்முடைய தாய்மொழியை விட உயர்ந்தது என்கிற அந்த அடிப்படையில் அல்ல என்பதையும் இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு நான் எனக்குத் தெரிந்த தாய் மொழியில் இப்பொழுது இந்தத் தொடக்க உரையை நிகழ்த்திக் கொண்டிருக்கிறேன்.

## சமயம் உலகத்தில் எந்த அளவிற்கு அமைதியை ஏற்படுத்தியிருக்கிறது?

இதற்குப் பிறகு நான் தயாரித்து இருக்கிற சொற்பொழிவை எனக்குத் தெரிந்த ஆங்கிலத்திலே நான் அதை உங்களுக்குத் தெரிவிக்கவும் இருக்கிறேன். அதைப் படிக்கவும் இருக்கிறேன். ஆனால், அந்த சொற்பொழிவினுடைய சுருக்கம் என்பது இந்தக் கருத்தரங்கத்தை, இந்த இளைஞர்களுடைய முகாமை நடத்திக்கொண்டிருக்கின்ற "உலக சமயம்-அமைதி" மாநாட்டை ஒட்டிய கருத்தை நான் இந்தச் சொற்பொழிவிலே சொல்ல இருக்கிறேன். சமயம் உலகத்திலே எந்த அளவிற்கு அமைதியை ஏற்படுத்தியிருக்கிறது? அல்லது சமாதானத்தைஏற்படுத்தியிருக்கிறது என்கிற கருத்தை நான் அந்த ஆங்கிலச் சொற்பொழிவிலே குறிப்பிடுகிறேன். அதற்குப் பிறகு, இறுதியாக இங்கே வந்ததற்குப் பிறகு எனக்கு ஏற்பட்டிருக்கிற உணர்வுகளை, என்னுடைய தாய்மொழியில் எனக்குத் தெரிந்த மொழியில், என்னுடைய கருத்துக்களைத் தங்குதடை இல்லாமல் சொல்லுகிற வாய்ப்பை, தைரியத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிற மொழியில் நான் இறுதியில் சொல்லுவதற்கும் நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டு நான் சொல்லுகிற கருத்துக்களை இறுதியாக ஆங்கிலத்திலே மொழிபெயர்க்க வேண்டுமானால்; நம்முடைய துணைவேந்தர் அவர்கள் மொழிபெயர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நான் என்னுடைய நிறைவுச் சொற்பொழிவை-தயாரிக்கப்பட்டிருக்கிற சொற்பொழிவை இப்பொழுது நான் ஆங்கிலத்திலே, உங்களிடத்திலே படிக்கிறேன்.

Dear Vice Chancellor,

Respected Thiru Dr.Arunachalam, Chairman All India Gandhi memorial Fund, Registrar of University, Distinguised enthusiated delicates, Invitees and friends.

I am happy to be your invitee in this fore noon, in this unique place, and having this opportunity to think about "Religion and Peace".

Think of Religion in India and you will think of the many things that made our vast country a pioneer in the Religious Experience. We recall to mind our timeless quest and tireless endeavour to interpret life and universe on the basis of invisible principles controlling all things-from atomic vibrationsto cosmic happenings in the stars,from individual minds to societies and institutions. There is a saying that we in India judge all things lower in terms of the higher while elsewhere people tend to judge the higher in terms of the lower. While in the West the Scientists are busy solving the mysteries of the atom (and the solution seems to recede farther and farther into a Zoo of ever increasing mumber of subatomic particles), and philosophers try their skills in giving a satisfactory explanation for everything, and religious people increasingly try to make religion a thing of the market place where the religious experience is just one more commodity, in this country perhaps Science and Philosophy and Religion have remained one, as a single quest and study of the one universe they are all talking about. We have a tradition that has resisted fragmentation of any sort in life or knowledge. It has been one unified field of study. It can be broadly called Religion. It is the whole of life, When there is no fragmentation there is no violence. The unity of the mind and understanding will be the automatic condition of peace. In fact Peace is another name for this absence of fragmentation, this unity. The roots of the word RELIGION is also traced back to primitive expressions meaning "to bind, to unite". I think of late there is a growing recognition in the world that Religion understood thus may be the only possible solution to our problems. The spiritual and moral dimensions of life are beginning to receive a fresh look. Intellectuals at the frontiers and limits of Modern Science are increasingly drawn to the image of Lord Nataraja-for none can visualize a better image of Energy than that Nataraja projects-the Energy which Science postulates behind all phenomena.

Beginning with Vedic Hymns, and inspired by the mysterious working of Nature, our poets personified all phenomena. The central theme of the upanishads was ultimate Reality, the one being which was called by varied names. The Sacrifices and Prayers were directed to this Being, India abounded in philosophic speculation, covering the rituals as well as the Self. This search and this speculation were overflowing in our Epics and Puranas, the various philosophical systems, and Jainism, Buddhism, Agamas and Tantras, and above all Saivism from the hoary past. Saiva Siddhantham, perhaps the most ancient system we have, specially holds sway over the hearts of Tamil people. It is a Siddhantham that has been hallowed by Saints like Sambandhar and Appar, Sundarar and Manicka Vachagar, Meykanda Devar and Arulnandi . It has been considered a perfect system, with no dogmatic assertions and where nothing is taken for granted. No earnest inquiry is muffled. Keen observations from daily living are used to present clean solutions to all problems. Western Scholars like William James and Henry Bergson have drawn inspiration from it. It is not otherworldy but most practical. It is not parochial or sectarian but uinversal. Without rigid rules or hard injunctions, it stresses the quintessence of Religious Experience: SAT-CHIT-ANANDAM. This Experience has always been the Tamil Religion- BEING - KNOWLEDGE-BLISS: Praise to the one who is the Being ,Knowledge, Bliss. He is none other than my own self- It is also the universal Self.

How shall I salute this formless Being, the light of my life, indivisible, auspicious, immutable, who fills all with His Self and also fills selves with His Self? I am not conscious of distinctions. And Peace prevails when distinctions disapperar. It is a wisdom continually enriched by further distilling of ancient Tamil Classics-Tholkappiam, Thirukural, Thirumanthiram, Saiva Thirumurais etc.

It is such Peace that we want. But today what is the kind of Peace that is offered, as we open the daily newspapers in this troubled world. 'PEACE THROUGH DETERRENCE'.'PEACE THROUGH ARMS REDUCTION'. People seem to be pursuing Peace along many parallel paths. They are busy comparing military growths, and are hoping that measures like Deterrence and Arms Reduction will eliminate the risk of misundertsnding and war. This is a time when mothers are really worried about their children, their future in a world where peace is made throughly uneasy by the accumulation of weapons, and there is enough stock of weapons to kill all the world's people four times and more. And money continues to be spent on weapons, while The poor patiently wait for their basic needs of living. The affluent societies are also unhappy. They experience a growing vacuum, a growing anxiety. In the midst of all this poverty, degradation of environment, loss of faith in institutions, sense of alienation in youth, rejection of traditional values, and growing insecurity, many people are turning to ever-new cults, drug-induced ecstasies, new kinds of gurus commercialised mysticism, and pseudo-religious recipes marketed through the media.There is a general loss of faith in the Future, because of loss of Faith in humanity's ancient Past. The first Religion, by whatever name we call it, is waiting to be rediscovered for a new unifying heart for us, for a new purpose in our lives, for a renewed vitality in our veins. The illusion of progress is slowly fading. There is a slow return to the oldest and the best. If Peace is the virtue we need most today, as a state of mind, a disposition for benevolence, a confidence, and justice then such Peace is Religion itself. It is the same as MUKTI, same as SURVIVAL OR SALVATION, it is the same as finding our right place in the COSMOS- by being one with it through a total transformation of consciousness.

How do we bring about on a large scale such a transformation of consciousness-this process which is a basic requirement for Peace, and which is basically a religious process? There is no time for a thorough education of the masses in all our philosophical traditions. There is no possibility of involving large sections of them in your research on the nature of Brahman. I am also too impatient to be teaching them all to sit cross-legged with eyes closed for a time everyday of their lives. And they have no time for the answers we ourselves are yet to find for the cosmological questions. It doesn't satsify them to be merely called children of God. It may be beautiful to call each human being a ray of divinity, a wave of consciousness upon the Infinite Ocean of Pure Consciousness-but it doesnot help in practice. I call him the Radiant Immortal Atman. And like Vivekananda I hope that each will find his own Religion that ultimately there will be as many Religions as the number of human beings on Earth. I may serve man in a growing measure and name it service to God. I may see God in the insects and everywhere.

I may say Living is Worship. I may propagate compassion and meditation. All this is Religion, of course, but have I really grasped the essence of Religion?

I must confess that I get some grasp of this when I stand in the presence of someone I know............

When all words cease, and speaking becomes totally unnecessary, there is a strange communication, a peculiar expansion of consciousness in the presence of such a one. It is a transforming encounter you go through .Then nothing matters. You become one with that person and merge with him in the Universal Self. You are not afraid of anything anymore, you feel liberated by his mere presence.

I read in a book that they dropped the Bomb on Hiroshima because they were afraid of audit objections. So much of money had been spent on the scientists and buildings and equipment in making the Bomb,that if it was not going to be used someone

high up would have had to explain and heads would have rolled. So they chose to drop, it, on Hiroshima, when it was unnecessary, when the war was already over, when surrender had already been secured.

It may happen again. It may be from new kinds of fear. It may be from some mentally ill person pressing some button. We have no machinery to control every human being on earth.

But the mere Presence of some people helps, Such people are those who all speak one language. obey one commandment, follow one Religion. It is of Love.

This is a time when the whole country, and perhaps people in several parts of the world, are celebrating the centenary of Swami Sivananda. A Free Hospital is being built at Pathamadai, his birth place, in Tirunelveli District. His favourite prayer was from St. Francis of Assist: "Make me an Instrument of Thy Peace!"

Some pray for Peace.
Some march for Peace.
Some cycle for Peace.
Some speak for Peace.

But perhaps the most important are those who radiate Peace by their mere presence. They are love personified. The world is still existing because they are present. What we all need is not mere dry intellectual understanding of Reality but direct experience-this wordless experience in the presence of such a soul.

I know of such a one.

Tamilnadu is full of feasts and festivals, countless legends, magnificent temples. When I visit, for example the Big Temple of Thanjavur built during the reign of Raja Raja the great about 1000AD rising over 70 metres, standing majestic for 1000 years on a meagre foundation of four feet and capped by a single stone of 80 tons, and built without any binding mortar in the presence of such on awe-inspiring marvel I understand a bit of Religion. There is a sort of a little flash of illumination.

It is the same kind of feeling, only on a much deeper level and grander scale, when I stand in the Presence of some one I told you of. Thirumular, the Saint of Saiva Siddhantham, said

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

It was Love in Action promoted by such a tradition that prompted, among other things, the Nutritious Noon Meal Programme has implemented by our Chief Minister Dr. Puratchi Thalaivar in our state. It is this Presence, this kind of Presence that forms the transforming Religion I spoke to you about.

Authors of learned treatises on Cosmic consciousness tell me that with the further evolution of mankind there will be more and more of such men whose mere presence will keep transforming the world-until in due course every human being is naturally endowed with Cosmic Consciousness. Meanwhile in our own lifetime, for the cause of Peace, let us drink deep of this Presence.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

These lines of Thirumular sum of succinctly Religion and Peace. These lines contain all the Religion and Peace to sustain us. If Religion can be interpreted as a way of life, it is the life of love and compassion. Those of us who are able to feel this in our hearts and translate it into action for fellow beings, are really practising Religion for Peace.

## நம்மாலே புரிந்துகொள்ள முடியவில்லை

நண்பர்களே! நான் தயாரித்த ஆங்கிலச் சொற்பொழிவைப் படித்து விட்டேன். இந்தச் சொற்பொழிவில் சமயத்தைப் பொறுத்தவரை உலகத்திலே அமைதியை அது எப்படி நிலை நிறுத்தியிருக்கிறது என்பதைச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டினேன். இன்றைக்கு இங்கே இளைஞர்கள் பல்வேறு பிரச்சினைகளை ஒவ்வொரு குழுவாக அமர்ந்து விவாதிக்கிறார்கள் என்பதை நம்முடைய துணைவேந்தர்அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். இன்றைக்கு சமயம் உலகத்திலே அமைதியை-நெறியை வளர்ப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் இந்த சமயம் அந்தஅமைதியைச் தோற்றுவித்திருக்கிறதா என்பதும் இன்றைக்குக் கேள்விக்குறியாக இருக்கிறது. சமீபத்திலே இருக்கிற இலங்கை, அன்பையும் கருணையும் அடிப்படையாகக் கொண்ட புத்தமதத்தை அதிகமாகக் கொண்டநாடு. ஆனால் அங்கே தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள்; சாகடிக்கப்படுகிறார்கள் என்பதை எண்ணுகிற நேரத்தில் அந்த புத்தமதத்தினுடைய இலட்சியம் அங்கே நிறைவேறி இருக்கிறதா? சமயம் அமைதியை நிலைநிறுத்தியிருக்கிறதா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இசுலாமிய சமயத்தைச் சார்ந்துள்ள நாடுகள் ஈரானும் ஈராக்கும் அமைதியின்றிப் போரிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. அதைப் போலவே கிருத்துவத்தைத் தழுவுகின்ற நாடுகள் அயர்லாந்தும், இங்கிலாந்தும் போரிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும்போது உலகத்திலே சமயங்கள் அமைதியை உருவாக்கி இருக்கிறதா என்பதை நம்மாலே புரிந்து கொள்ள முடியவில்லை.

## படிப்பு, பண்பாட்டை வளர்த்ததா?

ஆனால் சமயம் என்பது அமைதியை உருவாக்குவதற்காகத்தோற்றுவிக்கப்பட்டதுதான். அந்த அடிப்படையை யாரும் புரிந்து கொள்ளவில்லை என்பதும்...இன்றைக்கு ஆதிக்கவாதிகள் கையிலே எப்படி உலகத்தினுடைய செல்வங்கள் போய் முடங்கிக்கொண்டிருக்கிறதோ அதைப் போல சமயங்களும் இன்றைக்குப் போய் முடங்கிக்கொண்டிருக்கிறதோ என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டி இருக்கிறது. ஆகவே இன்றைக்குக் கல்வியறிவு வளர்ந்தால், படிப்பு வளர்ந்தால் உலகத்திலே அறிஞர்களாகப் பண்பாளர்களாக மனிதர்கள் திகழ்வார்கள் என்பது நாம் கற்றுக்கொண்டிருக்கிற பாடம். ஆனால் எங்களைப் போன்றவர்களுக்கு வருகின்ற சந்தேகம், நம்முடைய பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தர் போன்றவர்கள் தீர்க்க வேண்டும் என்று நாங்கள் கருதுகிற சந்தேகம், இன்றைக்குப் படிப்பவர்களுடைய தொகை ஒருபுறத்திலே வளர்ந்துகொண்டிருக்கிறது. அதே நேரத்திலே பண்பு குறைந்தவர்களுடைய தொ,கையும் இன்னொரு புறத்திலே வளர்ந்துகொண்டிருக்கிறது. இன்னொரு புறத்திலே குற்றவாளிகளும் பெருகிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே படிப்பு என்பது பண்பை நிலைநிறுத்துவதற்குப் பதில், அந்த முயற்சியிலே - அந்த நோக்கத்திலே தோல்வியடைந்து விட்டதா என்பதை நம்முடைய மிகச்சிறந்த கல்வியாளரான பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தர் டாக்டர் அறம் அவர்கள், எங்களுக்கு விளக்க வேண்டும், எடுத்துச் சொல்ல வேண்டும். ஏனென்றால், இன்றைக்குப் படிக்காத பிள்ளைகளைப் பெற்றிருக்கிற பெற்றோர்கள், தன் பிள்ளை படித்தால் கெட்டிக்காரனாக வருவான், அறிஞனாக விளங்குவான், தொழில் செய்வான் என்று எவ்வளவோ தொல்லைகளை ஏற்றுக்கொண்டு, படிக்க வைக்கிறார்கள். அதிலும் இங்கே வந்திருக்கின்ற நாடுகளிலே பலநாடுகள் ஏழைகளாக இருக்கின்ற நாடுகள், வளர்ந்துகொண்டு இருக்கின்ற நாடுகள், வளர்வதற்குப் போராடிக் கொண்டிருக்கின்ற நாடுகள், அதனாலேதான், இந்தியாவை அவர்கள் தேர்ந்தெடுத்து இங்கே நாம் இந்த விவாதங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே வளர்ந்துகொண்டிருக்கிற ஒரு நாட்டினுடைய இளைஞர்கள், படிக்கின்ற நேரத்திலே அவர்கள் எந்தப் பண்பைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதும், அவர்களைப் பண்பாளராக மாற்றுகிற முயற்சி கல்வியிலே இன்றைக்கு ஊட்டப்படுகிறதா என்பதும், இன்றைக்கு ஒரு மிகுந்த கேள்விக்குரிய பிரச்சினையாக இருக்கிறது என்பதை நானும் பெற்றோர்களில் ஒருவன் என்கின்ற அந்த உணர்வோடு பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் வைக்க விரும்புகிறேன்.

இளைஞர்களை எந்த திசை நோக்கி நாம் நடத்திச் செல்லப் போகிறோம் என்பதற்கு நாம் சரியான வழி காட்டியாக வேண்டும். இளைஞர்கள் உணர்ச்சி வசப்படுகிறவர்கள். அவர்களுக்கு எந்தத் துன்பங்களும் வரக்கூடாது எந்தச் சூழ்நிலைகளையும் அவர்களுக்குப் பாதகமாக உருவாக்கி விடக் கூடாது என்பதில் நாம் மிகுந்த அக்கறையோடு இருக்கிறோம். ஆனால் இந்த அக்கறையே இளைஞர்களை அக்கறையற்றவர்களாக மாற்றிவிடுகிறதோ என்கிற கேள்வியும் இன்றைக்கு எழுந்திருக்கிறது. காரணம் இளைஞர்களுக்கு எந்தப் பொறுப்பு எந்த வயதிலே ஏற்படுகிறது? அல்லது எந்தக் காலத்திலே ஏற்பட வேண்டும், எப்பொழுது ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கல்வியாளர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

## அணுகுண்டை வெடித்தது ஏன்?

இன்றைக்கு அணுகுண்டு வெடித்து 40 ஆண்டுகள் ஆகிவிட்டது. அந்தத் துயரமான கொடுமையான நாளை நாம் நினைக்கிறோம். அதற்காக நினைவுத் தூண் எழுப்புகிறோம். இனிமேல் அதைப் போன்ற சம்பவங்கள் நிகழக்கூடாது என்று கண்ணீர் சிந்திக்கொண்டு அதை நினைத்துப் பார்க்கிறோம். ஆனால் சமீபத்திலே ஒரு செய்தி வந்தது. நாமெல்லாம் திடுக்கிடுகின்ற ஒரு செய்தி, அமெரிக்கா அன்றைக்கு அணுகுண்டை வெடிக்காமலே இருந்திருக்கலாம். ஏனென்றால் அணுகுண்டை வெடிப்பதற்கு முன்னாலேயே சமாதானத்திற்கான கால்கோள் நாட்டப்பட்டுவிட்டது. ஜப்பான் சமாதானத்திற்கு இணங்கிவிட்டது. ஆனாலும் அணுகுண்டு ஜப்பான் நகரங்களின் மீது வீசி வெடிக்கப்பட்டது. அந்த அணுகுண்டை ஏன் வெடித்தோம் என்பதற்குக் காரணம் தெரிவித்த அன்றைய அமெரிக்க அரசின் அதிபதி, அந்த அணுகுண்டை வெடித்தில்லையானால், அணுகுண்டை வெடித்ததனால்தான் சமாதானம் ஏற்பட்டது என்று சொல்லவில்லையானால், நிரூபிக்கவில்லையானால் அடுத்து வரும் தேர்தலிலே அவர் தோற்கடிக்கப்பட்டு விடுவார் என்பதனாலும், கணக்கைக் கேட்கக் கூடிய அந்த அதிகாரிகளுக்குப் பதில் சொல்வதற்காகவும், ''எதற்காக இத்தனை கோடிக்கணக்கான ரூபாயை-நாட்டினுடைய செல்வத்தை வீணடித்தீர்கள் என்கின்ற கேள்விக்குப் பதிலளிக்க வேண்டும் என்பதனாலும்தான் அணுகுண்டை அமெரிக்கா அன்றைக்கு வெடித்தது. அந்நாளைய அமெரிக்கத் தலைவர் வெடிக்க வைத்தார் என்கிற செய்தியும், பத்திரிகையிலே வந்திருக்கிறது. நான் அந்தச் செய்தியை உண்மையானது என்று சொல்லவில்லை, காரணம் எந்தச் செய்தி உண்மையான செய்தி என்று இன்றைக்குத் தெரிந்து கொள்ள முடியாத அளவிற்குப் பத்திரிகைகளிலே செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அமெரிக்க

அதிபர் அணுகுண்டை வெடித்ததன் காரணத்தைத் தெரிவித்து வந்து இருக்கும் அந்தப் பத்திரிகை செய்தி உண்மையானது தான்என்று நான் சொல்லவில்லை. அப்படி ஒரு காரணமும் கூறப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் நம்முடைய இளைஞர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## துப்பாக்கியைத் தூக்காதே

ஆகவே உலகத்திலே இன்றைக்கு அமைதி இல்லை. பணம் வந்தால் அமைதி வந்துவிடும் என்று சொல்லப்பட்டது. பணம் வந்தவனிடத்திலேயும் அமைதி இல்லை. படித்தால் அமைதி வந்துவிடும் என்று சொன்னார்கள். ஆனால் படித்தவன் இடத்திலும் அமைதி இல்லை. ஆகவே அமைதியைத் தேடிச் சமுதாயம் எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறது. குறிப்பாக இளைஞர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். இந்திய நாட்டிலே இவ்வளவு பொறுமையாக 70 கோடி மக்கள் உலகம் வியக்கிற வகையிலே ஜனநாயகத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம், நாம் எல்லாம் இன்றைக்கும் வணங்கி கொண்டிருக்கின்ற வணங்கவேண்டிய இந்த நாட்டினுடைய தந்தை உத்தமர் காந்தியடிகளினுடைய தத்துவம் தான் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதனாலே தான், இளைஞர்கள் அமைதியைத் தேடி ஆராய்கின்ற ஓர் கருத்தரங்கத்தை - ஒரு மையத்தை இந்தக் காந்தி கிராமத்திலே நடத்துவதும், அதுவும் தமிழ் மண்ணிலே நடத்துவதும், இந்தப் பல்கலைக் கழகத்திலே நடத்துவதும் மிகவும் பொருத்தமான ஒன்று என்று முதலிலேயே குறிப்பிட்டேன். காரணம் உலகத்திலேயே புதுமையான முறையில் ஒரு விடுதலை இயக்கத்தை நடத்திய ஒரு தலைவர், கத்தியை எடுக்காதே, ஆயுதத்தை எடுக்காதே, துப்பாக்கியைத் தூக்காதே, வெடிகுண்டை வீசாதே என்று வல்லமை பொருந்திய ஏகாதிபத்தியத்தோடு, இராணுவ வல்லமை பொருந்திய ஏகாதிபத்தியத்தோடு எதிர்க்கிறோம் என்பதைத் தெரிந்து கொண்டதற்குப் பிறகும், சத்தியத்தையே ஆயுதமாக வைத்துக் கொண்டு விடுதலைப் போராட்டம் நடத்திய ஒரு வரலாற்று நாயகர் உத்தமர் காந்தியடிகள் ஆவார்கள்.

## காந்தியடிகள் பின்பற்றிய பாதை

அன்றைக்கு விடுதலை பெறவேண்டும் என்பது அவருடைய இலட்சியம். அதையும் உணர்ந்தார்கள். ஆனால் அந்த விடுதலையைப் பெறுவதற்காக நாம் நடந்து செல்லுகிற பாதை அதுவும் முக்கியம். அதையும் அதிகமாக அண்ணல் காந்தியடிகள் உணர்ந்தார்கள். ஆகவே அடைய வேண்டிய இலட்சியத்திற்கு நாம் பின்பற்றக்கூடிய பாதை தவறாக அமைந்துவிட்டால், அந்தத் தவறானபாதையே பின்னாலும் பிறரால் பின்பற்றத்தக்கதாய் அமைந்துவிடக் கூடும் என்பதையும் நம்முடைய காந்தியடிகள் நன்றாகவே உணர்ந்திருந்தார்கள். ஆகவே தான் அமைதி அமைதி அமைதி என்று வாழ்நாள் முழுதும் அவர்கள் சொல்லிக் கொண்டு இருந்தார்கள். காந்தியடிகள் காலத்திலும், புரட்சி நடக்கவில்லையா என்று இளைஞர்கள் சிலர் கேட்கக்கூடும். புரட்சி அன்றைக்கும் நடந்தது. ஆனால் உலகத்திலே நடந்திருக்கிற ஆயுத புரட்சிகளோடு ஒப்பிட்டால், அதற்குப் புரட்சி என்பது பெயரல்ல. உணர்ச்சிமிக்க வாலிபர்கள், சில நேரத்திலே தங்களுடைய உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பாக நடந்த சில கிளர்ச்சிகளே தவிர, அவற்றை புரட்சி என்று சொல்ல முடியாது. ஆகவே புரட்சியை - ஆயுதம் தாங்கிய புரட்சியை அண்ணல் காந்தியடிகள் அன்றைக்கே எதிர்த்தார்கள். அதனாலேதான் 70 கோடி மக்கள் வாழ்கின்ற இந்த நாடு, படிக்காதவர்கள் நிறைந்த நாடு என்று சொல்லப்பட்டாலும், இங்கே வாழ்கின்ற மக்கள் எந்த நேரத்திலே எந்தத் தலைவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்கின்ற மிகச்சிறந்த ஜனநாயகப் பண்பைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதனாலே தான் இந்த நாடு இன்றைக்கும் தலைநிமிர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கிறது. இந்த நாடு சிதறிப் போய் விடும் என்று பலர் கருதினார்கள். பண்டித நேரு அவர்களுக்குப் பின்னாலே யார்? என்று கேட்டார்கள். அதற்குப் பிறகு அன்னை இந்திரா வந்ததற்குப் பிறகு யார் என்று கேட்டார்கள். ஆனால் வலிவுமிக்க ஆற்றல்மிக்க இந்திய மக்கள் படிக்காதவர்களாக இருந்தாலும், நீண்டகாலமாக பண்புமிக்க நிலத்திலே ஊறிய காரணத்தினாலே இவர்கள், நாங்கள் எங்களுடைய தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு ஆற்றலைப் பெற்றிருக்கிறோம். அறிவைப் பெற்றிருக்கிறோம். அதற்கான திறனைப் பெற்றிருக்கிறோம். ''இந்த ஆற்றலையும் திறமையையும் எங்களுக்குக் கல்லூரிகள் கற்றுத்தரவில்லை. பள்ளிகள் கற்றுத்தரவில்லை. பல்கலைக் கழகங்கள் கற்றுத்தரவில்லை. ஆனால் நாங்கள் பிறந்த இந்தபாரத மண் எங்களுக்கு அதைக் கற்றுத் தந்திருக்கிறது என்று கூறுவதைப் போல மக்கள் செயல்பட்டிருப்பதை நாம் கண்கூடாகவே பார்த்திருக்கிறோம்.


## எங்கள் முன்னோர்கள் எவ்வளவு சிறந்தவர்கள்

இன்றைக்கு வானத்தைப் பார்த்தாலே எங்களுடைய விவசாயி மழைவருமா வராதா என்று சொல்லிவிடுவான். மண்ணைக் கையிலே எடுத்துப்பார்த்தாலே இது விளையுமா, விளையாதா என்று சொல்லி விடுவான். இந்த


மண்ணைக் கொண்டு போய் பட்டம் பெற்ற வாலிபர்களிடத்தே கொடுத்தால் அவர்கள் அதனைச் சோதனைக்குத்தான் அனுப்பு வார்கள். ஆராய்ச்சிக் கூடத்திற்குத்தான் அனுப்புவார்கள். ஆனால் இந்த மண்ணிலே பிறந்த விவசாயி, மண்ணைக் கையில் எடுத்துப் பார்த்தாலே இது எவ்வளவு சத்துள்ள மண், விளைகின்ற மண் என்பதைச் சொல்லிவிடுவான். அப்படிச் சொன்னவர்கள் இந்த நாட்டிலே வாழ்ந்து காட்டியவர்கள், வரலாற்றைப் படைத்தவர்கள். அவர்கள் மூவாயிரம் ஆண்டு களுக்கு முன்னாலே கட்டிய கல்லணை இன் றைக்கும் இருக்கிறது. 1000 ஆண்டுகளுக்கு முன்னாலே இராஜராஜன் கல்லிலே எழுப்பிய ஆலயம் இன்றைக்கும் நிமிர்ந்து நிற்கிறது. இவைகள் எல்லாம் உலகத்திலே எங்கள் முன் னோர்கள் எவ்வளவு சிறந்த தொழில் நிபுணர் களாக—பொறியியல் நிபுணர்களாக—கட்டிடக் கலை நிபுணர்களாக வாழ்ந்தார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டுகள். ஆகவே தான் உத்தமர் காந்தியடிகளின் வழியிலே இன்றைக்கு நாம் சமாதானத்தை, அமைதியை வாழ்க்கையாகக் கொண்டிருக்கிற காரணத்தினாலேதான் இன் றைக்கு இவ்வளவு மக்கள் வாழ்கிற காலத்தி லேயும், எத்தனையோ சங்கடங்கள், எதிர்ப்புகள் குழப்பங்கள், போராட்டங்கள் தோன்றினா லும் அவைகளை வென்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

## உங்களுக்குப் பாடமாக அமையவேண்டும்

அதிலேயும் மிகச்சிறந்த அமைதி தவழு கின்ற பூமி தமிழகம் என்கிற பெயரையும் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். ஆகவே இளைஞர்கள் நீங்கள் விவாதிக்கிறபொழுது, சிந்திக்கிற பொழுது, உத்தமர் காந்தியடிகள் உங்களுக்கு ஆதர்ஷ புருஷராக விளங்கவேண் டும். அவர்களுடைய வாழ்க்கை உங்களுக்குப் பாடமாக அமைய வேண்டும். அவர்களுடைய கருத்துக்கள் உங்களுடைய விவாதத்தின் கருப் பொருளாக அமையவேண்டும் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, நான் மீண்டும் பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தரை- மிகச்சிறந்த கல்வியாளராகத் திகழ்கின்ற அந்த அறிஞரையும், மிகச்சிறந்த காந்தியவாதியாக விளங்குகின்ற டாக்டர் அருணாசலம் அவர் களையும், இன்றைய நம்முடைய கல்வி-நாம் இளைஞர்களுக்குக் கற்றுத் தருகின்ற பாடம், பழக்கம், வழக்கம், நடைமுறை சரியாக இருக் கிறதா என்பதை இந்த இளைஞர்கள் மையம் ஆய்வு செய்ய வேண்டும். உலக இளைஞர்கள் இதைப் பரிசீலிக்க வேண்டும். காரணம் பரி சீலிப்பதற்கு ஏற்ற மண்ணிலே நீங்கள் கூடி இருக்கிறீர்கள். இந்த மண்ணிற்கு வருகை தந்த உங்களை மீண்டும் ஒருமுறை வாழ்த்தி வரவேற்று இந்த நிறைவுச் சொற்பொழிவை முடித்துக் கொள்கிறேன் என்பதை அன்போடு அறிவித்து, அமைகிறேன். வணக்கம்.



தஞ்சையில் 23-10-85 அன்று இராஜராஜ சோழன் முடிசூடிய ஆயிரமாவது ஆண்டு நிறைவுவிழாக் கொண்டாட்டத்தின் போது அரங்கேற்றப்பட்ட ''இராஜ இராஜேஸ்வர விஜயம்'' நாட்டிய நாடகத்தை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்கள் பார்த்துப் பாராட்டிப் பேசிய போது எடுக்கப்பட்டப் படம்,




# இராஜ இராஜேஸ்வர விஜயம்


டாக்டர் இரா. நாகசாமி, M.A., Ph.D.

இயக்குநர்,

தொல்பொருள் ஆய்வுத்துறை,

சென்னை—600 028

காட்சி: 1.

தஞ்சைப் பெருவுடையார் வணக்கத்துடன் ஆடல் தொடங்குகிறது. சோழப் பேரரசன் விஜயாலயன் கி.பி. 850ல் தஞ்சாவூரைக் கைப்பற்றி இங்கு 'நிசும்பசூதனி தேவிக்கு கோயில் எடுத்து, அவளது அருளால் சோழ சாம்ராஜ்யத்தை நிறுவினான். அத்தேவியே இப்பொழுது வடபத்ரகாளி என வணங்கப்படுகிறாள். அத்தேவியின் அருளால் 450 ஆண்டுகளுக்கு மேல், சோழ சாம்ராஜ்யம் முத்தமிழிலும், கலைகளிலும் ஈடு இணையற்ற பேரரசாகத் திகழ்ந்தது. அத்தேவியின் வணக்கமும் தொடக்கத்தில் இடம் பெறுகிறது.

காட்சி 2.

அருண்மொழியை வானவன் மாதேவியும், சுந்தர சோழரும் தாலாட்டுகின்றனர். தாலாட்டில் அவனது முன்னோரது பெருமை கூறி அவர்களாகவே அவனை உருவகிக்கின்றனர். மனுநீதிச்சோழன், சிலந்தியாகிப்பின்னர் கோச்செங்கட்சோழனாக பிறந்து சிவபெருமானுக்கு எழுபது மாடக்கோயில் எடுத்த செங்கண்ணான், மாந்தாதா சக்ரவர்த்தி, இமயத்தில் புலி பொறித்து காவிரியாற்றுக்கு அணை வகுத்த கரிகால் பெருவளத்தான், கடலடைத்து இராவணனை சம்ஹரித்த இராமபிரான், புறாவைக் காக்கத் தன் சதையை அளித்த

மாமன்னன் இராஜராஜ சோழன் வாழ்ந்திருந்த காலத்தில் அவன் காண, அவன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தில் நடிக்கப் பெற்றதே "இராஜ இராஜேஸ்வர விஜயம்" நாடகம் ஆகும். காலத்தால் மறைந்துவிட்ட அக்காவியத்தை மீண்டும் புதுப்பித்துப் படைத்திருக்கிறார் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள். தஞ்சைப் பெரிய கோயிலில், இராஜராஜ சோழன் முடிசூடிய ஆயிரமாவது ஆண்டு நிறைவுவிழாக் கொண்டாட்டத்தின் போது 23.10.85ஆம் நாள் அரங்கேற்றப்பட்ட இந்நாட்டிய நாடகம் பொதுமக்களின் அமோக வரவேற்பைப் பெற்றது. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் இராம. வீரப்பன் அவர்களும் 2 மணி நேரம் அமர்ந்திருந்து கண்டு களித்து வெகுவாகப் பாராட்டிய இந்நாட்டிய நாடகத்தின் முக்கிய சில பகுதிகளைத் "திருக்கோயில்" அன்பர்களுக்குப் பெருமையுடன் அளிக்கிறோம்.

பின்னர் நாட்டிய மகளிர் மலர் தூவி ஆடலரங்கத்துக்கு வணக்கம் செலுத்துகின்றனர்.

கட்டியக்காரன் தோன்றி விநாயகப் பெருமானிடம் காப்புக் கூறி அருள் பெறுகிறான்.

ஐங்கரன் காப்பு

(இராகம்-காம்போதி)

உலகெலாம் புகழ்பரப்பும்
ஒப்பரும் தனியைத்தோற்றி
கலைநிலா சடைமேல் பூணும்
கண்ணுதல் கழல்கள் பற்றி
தலைமிசைத்தாங்கி நாளும்
தவமதாய் பரவும் அன்பன்
அருண்மொழிக் காதை கூற
ஐங்கரன் காப்புத்தானே.

சிபிச்சக்கரவர்த்தி ஆகிய சோழர்குல முன்னோர்களது கதைகளைக் கூறி தாலாட்டுகின்றனர்.

அருண்மொழித் தாலாட்டு

(இராகம்-நீலாம்பரி)

சீர்கொண்ட தாமரையாள்
செல்வத் திருவுருவே
பார்எல்லாம் ஒளிபரப்ப
வந்துதித்த வெண்சுடரே
கார்பொழிய கழனியெலாம்
கதிர்விளைத்த காசிபனே
ஆருயிரே இளம்தளிரே
அருள்மொழியே தாலேலோ.

சிந்தனை ஆவினது
சீரிளங் கன்றினுக்காய்
மைந்தனையே தேர்க்காலில்
மாய்த்துகந்த மாமனுவே
பந்தணையாள் பாகனுக்கு
பலமாடம் எடுத்தவனே
குந்தவையின் பின்பிறந்த
கோமகனே! கண்வளராய்

(இராகம்-ஷண்முகப்பிரியா)


மாந்தாதா வாய்வந்து
மண்ணுலகு புரந்தவனே
மாமலையில் புலிபொறித்துப்
புனற்பொன்னி யணைவகுத்தாய்
காகுத்தன் குலத்துதித்துக்
கடலடைத்த கண்மணியே
ஆதித்தன் பின்னவனே
அருஞ்சுடரே தாலேலோ

(இராகம்-கேதாரம்)

மாதேவடிகளான
மழவரையர் மகளார்
ஆதரவுடனளித்த
ஆண்மைக் கழல் பூண்டு
பூதலம் முழுதினையும்
அளக்கவே விழைகின்ற
பாதங்களின் பாங்கு காணீரே
பாவைமீர் வந்து காணீரே.

(இராகம் சாரங்கா)

வேள் புலத்து வேந்தரெலாம்
வீரச்சபதம் விட்டு
தாள் புனைந்து தம்முடைய
தலைமிசை தாங்கிடவே
வாளுடனே வேல்பற்றி
வீரம் விளைவிக்கும்
தோள்கள் இருந்தவா காணீரே
தோகை மயிலனையீர் காணீரே



அருண்மொழிவர்ம னுக்கு அன்னையும் தந்தையும் அருங் கலைகள் கற்பிக்கும் காட்சி.

கானவன் கரத்தி ருந்து
புள்ளுயிரைக் காத்தவனே
வானவன் மாதேவியரின்
உதரத்தில் அவதரித்தாய்
மானவிற் கூர்மாமன்னன்
சுந்தரனின் திருச்செல்வ
காணவினிய எந்தன்
கற்பகமே தாலேலோ

காட்சி 3

சிறு குழந்தைப் பருவத்தில் அருண்மொழிக்கு வாள்வித்தை, யானை ஏற்றம், குதிரை ஏற்றம், தெய்வ வழிபாடு முதலியன கற்றுத்தரப்படுகின்றன.

(இராகம்—காபி)

திருமகளும் நிலமகளும்
தெரிந்தசீர் ஜயமகளும்
ஒருங்கிணைந்து உடன்நிலவ
ஓரிடமே வேண்டிடவும்
பெருமாளும் விரும்பி உடன்
பெற்றினன வந்துகந்த
திருமார்பிருந்தவாகாணீரே
திருந்திழையீர் வந்து காணீரே

(இராகம்-தன்யாசி)

அய்ப்பசித் திங்கள்
சதையநாள் அவதரித்து
ஒப்பிலை இவர்க்குநிகர்
எத்துறையும் என நிறுத்தி

இப்புவியில் புகழ்மலர
இன்னமுத இதழ்விரிக்கும்
செம்பவள வாயினைக் காணீரே
அருண்மொழி வாயினைக்காணீரே

(இராகம்-பைரவி)

மண்முழுதும் ஒருகொற்றக்
குடையின் கீழ் ஒதுங்க
விண்முழுதும் வென்றிபுகழ்
விரைவினில் விளங்க
எண்ணிலா எதிர்வேந்தர்
வாய்ப்புதைத்து ஏவல்கேட்க
கண்விழிக்கும் எழிலினையே
காணீரே
கனங்குழையீர் வந்து
காணீரே.

(இராகம்-மணிரங்கு)

வித்தகக் கோலங்கொண்ட
விண்ணவனை வேதியனை
மத்தகக் கரியின் தோலை
உரித்தெடுத்த உத்தமனைச்
சித்தர்தம் அத்தனை
சென்னியின் மிசைசேர்க்கும்
கைத்தலங்கள் வந்து காணீரே
காரிகையீர் வந்து காணீரே

அனுபல்லவி

ஆதித்தனுடன் கூடி
அன்புடனே ஆடி
யானையுடன் பரி
ஏற்றம் அறிந்திட
—அருண்மொழியே

சரணம்

பொன்னி வளநாட்டின்
பெரும்புகழ் நிலைத்திட
கன்னி வளநாட்டின்
காவலும் பூண்டிட
மண்ணைக் குடிவரை
மாப்படை செலுத்திட
அண்ணனுடன் இணைந்து
இளவர சாற்றிட
—அருண்மொழியே.

காட்சி.4

காஞ்சிபுரத்தில் பொன் மாளிகையில் சுந்தர சோழரும் லோகமாதேவியும் அமர்ந்திருக்கின்றனர். நாட்டிய மகளிர் ராஜபாரம்பரியம் கூறி ஆடுகின்றனர். தஞ்சை கொண்டு, நிசும்பசூதனிக்கு கோயில் எடுத்தவன் விஜயாலய சோழன்; அவன் மகன் ஆதித்த சோழன் காவிரி



நாட்டிய மகளிர்கள்
இராஜப்பாரம்பரியம்
கூறி ஆடிப்பாடும்
காட்சி

(இராகம் -கானடா)

பல்லவி:

அருண்மொழியே வருக வருக
அருள் மொழியே வருக

யின் இரு கரையிலும் கற்கோயில் எடுத்தான். திருக்காளத்திக்கு அருகில் தொண்டைமாணாடு என்ற இடத்தில் இறந்தான். அவன் மகன் பராந்தகசோழன் மதுரையை கைப்பற்றினான். நாடெங்கும் குடவோலை முறையில் ஊராட்சியை ஊக்குவித்தான். அவன் மகன் இராஜா

தித்தன்தக்கோலத்தில் ராஷ்டிரகூடருடன்நடை பெற்ற கடும் போரில் வீரமரணம் எய்தினான். அவர்களது வரலாற்றைக்கூறி ஆடும் நாட்டிய பெண்கள் சுந்தரசோழரை வாழ்த்திடும்போது தூதுவன் இடையில் வந்து அதிர்ச்சி அளிக்கும் ஒரு செய்தியை கூறுகிறான். இராஜராஜனின் அண்ணன் ஆதித்த கரிகாலன் பாண்டியர்களது தூண்டுதலால் வஞ்சனையாகக் கொல்லப்பட்டான் என்ற அச்செய்தியைக் கேட்டதும் மனம் உடைந்து சுந்தரசோழர் இறந்துவிடுகிறார். அவருடன் வானவன்மாதேவியும் இறந்துவிடுகிறாள்.

தூதுவன் உரைத்தல்

(இராகம்-நாதநாமக்கிரியை)

சோழர்தம் குலமே என்றும்
செவியுறாச் செயல் ஒன்றின்று
சூழ்ச்சியால் விளைந்த தன்றே
சொல்லவும் போமோ தேவ!
செழியன் சிரத்தைப் போரில்
சென்டென அடித்த சிங்கம்
வழுதிதன் வஞ்சர் வாளில்
வீழ்ந்துடல் சிதைந்த தந்தோ

சுந்தரசோழர் வருத்தம்

(இராகம்-முகாரி)

பல்லவி:

எங்கு மறைந்தனை
என்னருமை மைந்த
யாங்கண் இயம்புவேன்
எந்தன் உயிர்துடிப்பப
—எங்கு மறைந்தனை

சரணம்

தஞ்சை அரியணையில்
தகவுடனே அமர்ந்து
மணியரசு புரிவாய் என்று
நினைத்திருந்தேன்
பஞ்சமா பாதகர்கள்
வஞ்சணையில் வீழ்ந்து
துஞ்சிடுவாய் எனத்துளியும்
நினைந்திலனே
—எங்கு மறைந்தனை

ஆதித்த கரிகாலா!
அந்தோ மறைந்தனையே
பாதகக் கூற்றத்தின்
பாசத்தில் பட்டனையே
சோதி சுடருருவில்
தோன்ற நினைந்தனையோ
சுரருலகும் ஆள
விரைந்தனையோ மைந்த!
—எங்கு மறைந்தனை

என்று பாடி, சுந்தரச்சோழர் உயிர்விட, உடன் வீழ்ந்து லோகமாதேவியும் உயிர்விடுகின்றாள்.

(இராகம்-பூபாளம்)

தன்கொழுநன் உயிர்விடலும்
தளிர்கரத்தால் தாங்கி
தரைமகளும் சுரமகளும்
அணைவதன் முன் தான் அணைந்து
இன்னுயிரை உடன்நீந்து
இனமகளாய் எழுந்தாளை
வானவன் மாதேவியினை
வாயார வாழ்த்துதுமே.

காட்சி 5

மக்கள் அருண்மொழியை முடிசூடவேண்டுகின்றனர். கண்டராதித்த சோழருக்கும், செம்பியன் மாதேவியாருக்கும் பிறந்த தனது ஒன்றுவிட்ட தாதையான உத்தமசோழரே முடிசூடட்டும் என்று அருண்மொழி தனக்கு வந்த முடியை உத்தமருக்கே அளிக்கின்றான்.


ஆனந்தக்களிப்பு

ஆட்சி வருகுது ஆட்சி வருகுது
ஆட்சி வருகுதைய்யே
ஆட்சி வருகுது ஆட்சி வருகுது
அருண்மொழி ஆட்சிஅய்யே
அருண்மொழி ஆட்சிஅய்யே

துன்பமே இன்றி இன்பம் நிறைந்திட
தோன்றிடும் ஆட்சி அய்யே
அன்புடனே மக்கள் ஆனந்தமாய் வாழ
மலர்ந்திடும் ஆட்சி அய்யே



பொற்கால ஆட்சி
இதுவே என மக்கள்
போற்றி ஆடிப்பாடும்
காட்சி



இராஜராஜன் தந்தி சக்திவிடங்கியெனும் லோகமாதேவியை மணந்து மகிழ்விருக்கையில் அமர்ந்திருக்கும் அழகுமிகும் காட்சி

பண்புடையோ ரெல்லாம் பயமின்றி
இருந்திடும்
மாண்புடை ஆட்சி அய்யே
விண்ணவரெல்லாம் வியந்திடும் வண்ணம்
விரிந்திடும் ஆட்சி அய்யே

கற்றவர் தம்மைப்போற்றிக் களித்திடும்
வித்தக ஆட்சி அய்யே
செற்றவர் தம்மை செருவினில் வீழ்த்திடும்
சீரிய ஆட்சி அய்யே

பாடல்கள் எங்கும் பண்புடன்இசைத்திட
நாடிடும் ஆட்சி அய்யே
ஆலயமெங்கும் ஆடல் மலிந்திட
கூடிய ஆட்சி அய்யே

பக்தியுடன் மக்கள் பரமனைப் பரவிடும்
பாங்குள்ள ஆட்சி அய்யே
உத்தியுடன் நாட்டை உண்மையாய்
உன்னத ஆட்சி அய்யே [ஆண்டிடும்,

செல்வமும் கல்வியும் சேர்ந்து வளர்ந்திட
தேர்ந்திடும் ஆட்சி அய்யே
நல்லவர் எல்லோரும் போற்றிப் புகழ்ந்
துல்லிய ஆட்சி அய்யே [திடும்

இவ்வாறு அருண்மொழியின் ஆட்சியை மக்கள் போற்றிக்கூறி எதிர்பார்க்கின்றனர். ஆனால் அருண்மொழி, உத்தமசோழரே முடிசூடுவார்' என்று கூறி ஆட்சியைத் தியாகம் செய்து விடுகிறார்!

காட்சி 6.

அருண்மொழி தந்திசக்திவிடங்கி என்றும் லோகமாதேவி என்றும் பெயர் பெற்ற தேவியை மணக்கிறான்.

ஊஞ்சல்
(இராகம்-குறிஞ்சி)

தந்தி சக்தி விடங்கி எனும்
வஞ்சி இளங்கொடியே
அந்தமிலா பந்தமுடன்
அருண்மொழியிற் படர்ந்து-ஆடு
ஊஞ்சல்

லோக மாதேவி
உந்தன்தேகசுகம் வேண்டி
மோக மிகவே அணைந்து
போகமது துய்த்திட-ஆடுஊஞ்சல்

மங்களப் பாடல்
(இராகம்-குறிஞ்சி)

சோழகுலதீபனுக்கு
சுந்தரகுமாரனுக்கு
நித்தியவிநோதனுக்கு
நாண் மங்களம்

திருமகளின் தேவனுக்கு
நிலமகளின் நாதனுக்கு
கலைமகளின் கேள்வனுக்கு
நாண் மங்களம்


பொன்னியின் புதல்வனுக்குக்
கன்னியைப் புணர்ந்தவற்குச்
சென்னிகுலச் செல்வனுக்கு
நாண் மங்களம்

தந்திசக்தி விடங்கி யுடை
தளிர்க்கரத்தைத் தரித்தவற்கு
சந்தத் தமிழ் கண்டவற்கு
நாண் மங்களம்
—சோழ குலதீபனுக்கு

(அடுத்த இதழில் முடிவுறும்)

# திருவள்ளுவர் காட்டும் பெரியாரைப் பிழையாமை

டாக்டர் பொற்கோ
பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்.



தவத்தாலும் உயர்ந்த பண்புகளாலும் பெருமைக்குரியவராய் விளங்கும் சான்றோர்கள் முனிவர்கள் ஆகியோருக்கு எந்த வழியிலும் பிழை செய்து ஒரு தலைவன் அல்லது அரசன் பெரியோரின் மனம் நோக நடந்து கொள்ளக் கூடாது.

அரசனுக்கு உள்ளத்தில் பகைமைஉணர்ச்சி கூடாது என்றும் தன்னுடைய பகைவனைப் பெரியவனாக்கி விடுகிற அளவுக்குத் தன்னுடைய இயல்புகளிலும் செயல்களிலும் குறைபாடுகள் ஏற்பட்டு விடக் கூடாது என்றும் பகைவர்களின் இயல்புகளை நன்றாகப் புரிந்து கொண்டு தக்கவாறு செயல்படவேண்டும் என்றும் உட்பகையை நுட்பமாக உணர்ந்து கொண்டு தக்க நேரத்தில் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் தலைவர்களுக்கும் அரசர்களுக்கும் அறிவுரை கூறிய வள்ளுவர் இங்கே பெரியோர்க்குக் கேடு செய்தால் என்ன துன்பம் வரும் என்பதை உணர்த்திப் பெரியோருக்குப் பிழை செய்யாமல் இருக்கும்படி எச்சரிக்கிறார்.

தலைவர்க்கு உரிய மிக முக்கியமான குணம் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் தன் வலிமையையும் காப்பாற்றுதல், அப்படிக் காப்பாற்றும்போது வலிமை வாய்ந்த அரசர்களால் மட்டுமே கேடுவரும் என்று எண்ணிப் பெரியோரை இகழ்ந்து புறக்கணித்து விடக்கூடாது. உலகில் சாதாரணமாக எல்லோரும் பொன்னையும் பொருளையும் அவற்றால் வரும் சுகபோகங்களையும் அவற்றையெல்லாம் நினைத்த மாத்திரத்தில் வழங்கும் பதவியையும் பெரிதாக நினைத்து அலைமோதி தடுமாறிக்கொண்டிருக்கும்போது அவற்றை எல்லாம் திரும்பிக்கூடப் பாராமல் மனித குல வளர்ச்சியில் மிக உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றத்தக்க மனப்பக்குவத்தையும் சிறந்த உள் மன அனுபவங்களையும் மட்டுமே பெரிதாக நினைத்து எய்தி இருக்கிறார்கள் சில பெரியோர்கள். அப்படிப்பட்ட பெரியோர்களிடம் கொலைக்கருவிகளும், படை பலமும் இல்லை என்பதற்காக அவர்களைக் குறைவாக மதிப்பிடக்கூடாது.

தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் தன் வலிமையையும் காத்துக் கொள்ளுகின்ற திறமைகள் எல்லாவற்றிலும் ஒரு தலைவனுக்கு மிகச்சிறந்த திறமையாக அமையத்தக்கது பெரியோரை இகழாமல் இருப்பதுதான். பெரியோரிடம் மரியாதை இல்லாதபோதுதான் அவர்களை இகழ்கிறோம். பெரியாரை நன்கு புரிந்து கொண்டவர்கள் அவரை மதிக்க முடியுமே தவிர இகழ முடியாது.

பெரியோரை உணர்ந்து அவரைப்போற்றி ஒழுக அறியாத தலைவர்களும் அரசர்களும் தீராத துன்பங்களுக்கு ஆளாவார்கள் என்கிறார் வள்ளுவர்.

விரும்பிய நேரத்தில் தவறு செய்த தலைவர்களையும் அரசர்களையும் தண்டிக்க வல்ல

ஆற்றல் பெற்ற பெரியாருக்கு ஒருவன் தான் கெட்டுப் போக வேண்டும் என்று விரும்பினால் கேடு செய்யலாம். அதாவது பெரியாருக்குப் பிழை செய்தவன் துன்புற்று அழிந்துபோவது உறுதி என்கிறார் வள்ளுவர்.

நாம் துன்பம் செய்தாலும்கூட அதைத் தாங்கிக்கொண்டு நமக்குத் திரும்பவும் துன்பம் செய்யாத பெரியோர்கள் உலகில் உண்டு. நம் முடைய தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் அளவு வலிமை பெற்ற ஒருவர் நம்மைத்திருப்பி தாக்கினால் நம்முடைய நிலைமைஎன்னவாகும் என்பதையும் நாம் உணர வேண்டும். உற்ற துன்பத்தைத் தாங்கிக்கொண்டு தன் மனத்தை பக்குவப்படுத்தி மலைபோல உயர்ந்து நிற்கும் பெரியார் ஒருவருக்குக்கேடு செய்வது என்பது மரணத்தை வலிந்து அழைத்துக் கொள்ளுவது போலவே ஆகும்.

தவத்தால் வல்ய பெரியாரை ஒருவன் மதித்து நடந்துகொள்ளுவது மிகவும் முக்கியம். அதே போலத் தன்னைவிடப் பல மடங்கு வலிமை உடைய தலைவரையும் அரசரையும் மதித்து நடப்பதும் முக்கியம்.

ஒருவன்மேல் தீமூட்டிச் சுட்டாலும்கூட ஒருகால் அவன் தப்பித்து கொள்ள வாய்ப் புண்டு. ஆனால் பெரியாருக்குப்பிழை செய்தவன் அழிவிலிருந்து தப்பிக்க முடியாது. பெரியாரின் மன இயல்பு தீயைவிட வல்லமை வாய்ந்தது என்பதைத்தான்

''எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப்பிழைத்தொழுகு வார்''

என்ற குறள் மூலம் வள்ளுவர் நமக்குத்தெளிவு படுத்துகிறார். ஒரு அரசன் அல்லது தலைவன் தனக்கு அமைந்த சுகபோக வாழ்க்கையையும் தன்னைச் சுற்றியுள்ள எடுபிடிகளையும் பாது காப்புப் படைகளையும் தனக்குக் கிடைத்துள்ள மிகப்பெரிய செல்வத்தையும் எண்ணி இறு மாந்து எக்களித்துத் தவமும் சால்பும் நிறைந்த பெரியோர்க்குப்பிழை செய்து அவருடைய கோபத்துக்கு ஆளாகி விடுவானாயின் அவ னுடைய சுகபோக வாழ்க்கையும் அவனிடம் உள்ள எடுபிடிகளும் பாதுகாப்புப் படைகளும் பெரும் செல்வமும் ஆகிய இவையெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். தவத்தினாலும் சால்பினாலும் உயர்ந்த பெரி யோர்களின் சீற்றத்திலிருந்து அவனைத் தப்புவிக்க ஒன்றுமே வந்து பயன்படாது.

தங்களிடம் உள்ள வாழ்க்கை வசதிகளை யும், ஆள்வலிமை பொருள் வலிமை ஆகிய வற்றையும் எண்ணி அதனால் செருக்குற்று அரசர்கள் அல்லது தலைவர்கள் சில நேரங் களில் பெரியோரைச் சரியாக மதிப்பிட முடி யாமல் போவது உண்டு. அவர்களின் செருக்கு அவர்களின் கண்ணை மறைத்து அறிவைமழுங்க வைக்கும். அப்படிப்பட்ட செருக்கு அவர்கள் மனதில் தலைதூக்காமல் இருக்கும் வகையில், அவர்களின் வசதிகளும் வலிமையும் சான் றோர்களின் கோபத்துன் முன் எம்மாத்திரம் என்ற குறிப்பில்

''வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்
தகைமாண்ட தக்கார் செறின்?''

என்று கேட்கிறார் வள்ளுவர்.

நிலையில் திரியாது அடங்கி நின்று மலை போல உயர்ந்து விளங்கும் பெரியோர்களை ஒருவன் குறைவாக மதித்து அவர்க்குப் பிழை செய்வானாயின் அவன் நின்றது போல் நின்று தன் குடியோடு திடீரென்று கெட்டழிந்து மாய் வான் என்கிறார் வள்ளுவர். இவற்றால் எல் லாம் வள்ளுவர் நமக்கு எதை உணர்த்துகிறார்? செல்வர்களும் தலைவர்களும் பொருள்களை யும் வாழ்க்கை வசதிகளையும் ஆள் வலிமையை யும் பெருக்கி எல்லோரும் காணும்படி புறச் செல்வங்களால் தம் திறமையை வெளிப்படுத்து கிறார்கள். புறச்செல்வங்களை இப்படி பெருக்குவது போலவே அகச்செல்வங்களைப் பெருக்கி வேந்தர்க்கெல்லாம் வேந்தராய்அந்த மில் இன்பத்து அரசாளும் வேந்துகளும் உண்டு. அந்த வேந்துகளின் ஆற்றல் தலைவர்களின் ஆற்றலையும் அரசர்களின் ஆற்றலையும் விட எண்ணிறந்த அளவு உயர்ந்தது. இந்த உண் மையையெல்லாம் படிக்கும்போதும் கேட்கும் போதும் சிலருக்கு வியப்பாகவும் இருக்கலாம். இந்த உண்மையை உணரத்தக்க வாய்ப்புவரும் போது தவமும் சால்பும் நிறைந்த பெரியோரின் பெருமை விளங்கும். அப்போது வள்ளுவரின் பெருமையும் தானே விளங்கும்.

புற உலகச் செல்வங்களையும், புற உலக வீரச்செயல்களையும் பொருட்படுத்தாமல் இடைவிடாமல் அக உலக நோக்கினராய் இருந்து அகப்பகைகளை வென்று செயற்கரிய செய்த பெரியோர்களைத் தலைவர்களும் அரசர்களும் அச்சங்கலந்த பணிவோடு முயன்று புரிந்து கொள்ளவேண்டுமே தவிரப் புறக் கணிக்கக்கூடாது.

உலகப்பெரு நோக்கில் சிறந்த கொள்கை களையே பாதையாக்கி அந்தப் பாதையில் நடந்துவரும் பெரியோர்கள் சீற்றம் கொண் டால் அந்தச் சீற்றத்துக்கு காரணமாய் அமைந் தவன் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் அவன் அந்தப் பதவியில் இருந்து கீழே விழுந்து அழிய நேரும். அப்போது அந்த அழிவிலிருந்து அவனை யாராலும் காப்பாற்ற முடியாது. அவ னோடு தொடர்பு உடையவர்களால் அவனுக்கு துன்பம் வந்தபோது ஓடிவந்துஉதவக் கூடியவர் களாய், வலிமை மிக்க சார்பாளர்கள்கூட மிகப்

பல பேர் இருக்கலாம். ஆனால் தவமும் சால்பும் மிகுந்த பெரியோர்களின் கோபத்தின் முன்னால் அவர்களாலும் ஒன்றும் செய்யமுடியாமல் போய்விடும். ஆகவே தவமும் சால்பும்நிறைந்த பெரியார்க்குப் பிழை செய்யாதிருப்பது பொதுவாக எல்லோருக்கும் நல்லது. சிறப்பாக அரசர்களுக்கும் தலைவர்களுக்கும் அது முக்கியமான கடமை என்றே சொல்லலாம்.

இடுக்கணும் அழிவும் வந்த காலத்துஉடனிருந்து உதவி வாழ்வளித்துக் காக்கத்தக்க ஆற்றல் பெற்ற பெரியோர்களையே சரியாகப் புரிந்து கொள்ளாமல் அவர்கள் சீற்றம் கொள்கின்ற அளவுக்கு ஒரு அரசன் அல்லது தலைவன் அவர்களுக்குப் பிழை செய்துவிட்டால் அவனுக்கு வேறு பாதுகாவலோ புகலிடமோ இல்லை. ஆகவே தலைவர்களும் அரசர்களும் பெரியாரைப் பிழையாதிருப்பதோடு பெரியாரைப் போற்றி ஒழுகவேண்டும்.

"எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப்பிழைத்தொழுகு வார்"

என்ற குறள் மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்தி நாம் நெஞ்சில் வைத்துக்காக்கத்தக்கது.

---

## பன்னிரு திருமுறைகளைத் தெரிந்து கோள்வோம்

| | |
|---|---|
| திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய 384 பதிகங்கள் | முதல் மூன்று திருமுறைகள். |
| திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய 313 பதிகங்கள் | 4, 5, 6 திருமுறைகள் |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய 100 பதிகங்கள் | ஏழாம் திருமுறை |
| மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் | எட்டாம் திருமுறை |
| திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி காட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பதின்மர் அருளிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு | ஒன்பதாம் திருமுறை |
| திருமூலதேவர் அருளிய மூவாயிரம் திருமந்திரங்கள் | பத்தாம் திருமுறை |
| திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரதேவர், கல்லாடனார், கபிலதேவர், பரணதேவர், இளம்பெருமானடிகள், அதிரா அடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பிகள் ஆகிய பன்னிருவர் அருளிய 40 பிரபந்தங்கள் | பதினோராம் திருமுறை |
| சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் ... | பன்னிரெண்டாம் திருமுறை |

---

## எல்லாம் ஈசன் செயல்

கடந்த கால வாழ்க்கையினைக் கொஞ்சம் எண்ணிப் பார்ப்போமா! ஒன்றின் மேல் ஆசைகொண்டு வருந்தி வருந்தி வேண்டியிருப்போம். ஆனால் அது கிடைத்திருக்குமா என்றால் கிடைத்திருக்காது. மற்றொன்றை நமக்கு வேண்டுமென நினைத்துக் கூட பார்த்திருக்க மாட்டோம். வேண்டுமானால் ''இந்தப் பாக்கியம் நமக்கு எங்கே கிட்டப் போகிறது'' என்று விரக்தியாக விசனப் பட்டிருக்கவும் கூடும். ஆனால் அதை விடவும் கூட சிறந்த பாக்கியம் ஒன்றை நம் முயற்சி ஒன்றும் இல்லாமலே நாம் பெற்றிருக்கவும் கூடும். இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? நம் கையில் ஒன்றுமே இல்லை. எல்லாம் ஈசன் செயல் என்பது தெளிவாகிறது அல்லவா! இதைத் தான் ஔவையாரும்

''ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்-ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்'' —(நல்வழி-27)

என்று அன்றே பாடியிருக்கிறார்.

துன்பத்திலும் இன்பத்திலும் துணைநிற்கும் இப்பாடல் மனச்சாந்திக்குப் பயன்படும் அல்லவா! மனனம் செய்து மனத்தில் இருத்துங்கள்!.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

# சஷ்டி விரதம்

திருமுருக கிருபானந்தவாரியார்



உலகத்திலே சிறந்த செல்வம் படைத்தவர் சிலரும் வறுமையாகிய தீயின்மேல் கிடந்து வாடுகின்றவர் பலருமாக இருக்கின்றனர். இதற்கு என்ன காரணம்?

இறைவனை நினைத்து நல்ல விரதங்களை நோற்றவர் சிலர். விரதங்களை நோலாதவர் பலர். முற்பிறப்பில் நல்விரதமிருந்து இறைவனை வழிபட்டவர் இப்பிறப்பில் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வில் வாழ்வார்கள். அல்லாதவர் நல்குரவில் ஆழ்ந்து அல்லல்படுவர். இதனைத் தெய்வ புலவராகிய திருவள்ளுவர் தெரிவிக்கின்றனர்.

இவர்பலர் ஆகிய காரணம் நோற்பார் சிலர்பலர் நோலா தவர்.

''இரைதேடுவதோடு இறையுந்தேடு'' என்று பாம்பன் சுவாமிகள் கூறுவார். ஆகவே மனிதப் பிறப்பெடுத்த நாம் இப்பிறப்பை நமக்குத் தந்த தலைவனைக் குறித்து விரதங்களிருந்து வேண்டுதல் வேண்டும்.

எளிதிலே அருள்புரியும் மூர்த்தி கலியுக வரதராகிய கந்தக் கடவுள், தலையாய தேவாதிதேவர்க்கெல்லாம் தலையாய தனிப்பெருந்தலைவர்-'மாலயனுக்கு அரியான், மாதவரைப் பிரியான்' என்பார் அவரைப்பற்றி அருணகிரிநாதர். முருகப்பெருமானை நினைந்து நல்விரதங்களை யாற்றி வழிபாடு செய்தோர் எல்லா நலன்களையும் எளிதிற் பெறுவர்.

முருகவேளுடைய விரதங்களுள் தலையாய விரதம் கந்த சஷ்டிவிரதம் ஆகும்.

சிவபெருமானுடைய விரதங்கள் எட்டு. அவற்றுள் தலையாயது சோமவார விரதம். அந்தஅஷ்ட விரதங்களுள் ஒன்று தீபாவளி விரதம். இறைவன் ஜோதி வடிவானவன்.

''மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்''
''திருவையா றகலாத செம்பொற் சோதி''
''ஆதியும் அந்தமில்லா அருள் பெருஞ்சோதி''
''தீப மங்கள சோதி நமோநம'

என்பனவாதி தமிழ் வேத வசனங்களால் அறிக.

ஆகவே சிவபெருமானை உள்ளன்புடன் நினைத்து வரிசையாக விளக்குகளை வைத்து வழிபடுகின்ற விரதம் தீபாவளி.

தீபம்—விளக்கு, ஆவளி—வரிசை.

விளக்குகளை வரிசையாக வைத்துச் சிவபெருமானைத் தீபாவளியன்று வழிபட வேண்டும். இதன் பெருமையும், நோற்கும் முறையும் உபதேச காண்டத்தில் நன்றாக உரைக்கப்பட்டிருக்கின்றது. இவ்விரதத்தை உமையம்மையார் நோற்றனர்.

நரகாசுரனைக்கொன்ற காரணத்தால் கொண்டாடப்படுவது தீபாவளி என்பது பிழை. ஒரு அசுரனைக் கொன்றதற்காக ஒரு கொண்டாட்டம் இருக்க முடியாது. அப்படியானால் இரணியன், இராவணன், இடும்பன், பகன், சலந்தரன், அந்தகன் முதலியஅரக்கர்களைக்கொன்றதற்கும் கொண்டாட்டம் இருக்க வேண்டும். ஆகவே நரகா

சூரனை வதைத்ததற்கும் தீபாவளிக்கும் தொடர்பு இல்லை என உணர்க.

தீபாவளி ஐப்பசித் திங்கள் தேய்பிறை சதுர்த்தசி திதியில் விரதம் இருக்க வேண்டும். அன்று உபவாசமாக இருந்து சிவபெருமானை வழிபட வேண்டும்.

மறுநாள் அமாவாசை யன்று பாராயணஞ் செய்யவேண்டும்.

அதற்கு மறுநாள் வளர்பிறை பிரதமை யிலிருந்து கந்தசஷ்டி விரதம் தொடங்க வேண்டும்.

பிரதமையன்று அதிகாலை எழுந்து நதியாயின் நீரின் எதிர்முகமாக நின்றும், கிணறு, குளங்களாயின் வடதிசை நோக்கி நின்றும், தண்ணீரில் அறுகோணம் வரைந்து அதில் சடாக்கர மந்திரத்தை எழுதி, இடையே பிரணவத்தை எழுதி, அத்தண்ணீரைச் சிவகங்கையாகப் பாவனைபுரிந்து அதில் முழுக வேண்டும்.

பின்னர் கரையேறி, தோய்த்து உலர்ந்த தூய ஆடைகளையுடுத்து அநுட்டானம் புரிந்து, முருக வேள் திருக்கோயிலுக்குச் சென்று மலர் இட்டு விதிப்படி வலம் வந்து, திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் அநுபூதி இவைகளை ஓதி உள்ளம் உருகி ஒருமையுடன் வழிபட வேண்டும்.

இவ்வாறு ஐந்து நாட்கள் நோற்றபின் ஆறாவது நாள் சஷ்டியன்று, முன் கூறியபடி நீராடி, சிறப்பாக ஜபதபங்களைச் செய்ய வேண்டும். அதிக பாராயணஞ்செய்து சிந்தனை முழுவதும் செவ்வேள் திருவடிக்கே செலுத்த வேண்டும். அன்றிரவு ஆறு காலங்களில் முருகன் திருவுருவத்திற்கு ஆயிரத்தெட்டு மந்திரங்களால் அருச்சனை புரிய வேண்டும். உறங்காமல் உணர்வுடன் குழைந்த உள்ளத்துடன் துதித்து வடிவேலிறையை வழிபடவேண்டும்.

மறுநாள் சப்தமி திதியன்று நீராடி வழிபாடு முடித்த பின் ஆறு அடியார்க்கு அன்னம் வழங்கி உணவு கொள்ள வேண்டும். அன்று பகலில் உறங்கக்கூடாது.

ஆறுநாட்களிலும் பூரண உபவாசமிருக்க முடியாதவர்கள், ஐந்து நாட்கள் பால்பழமுண்டு சஷ்டியன்று முழுஉபவாசமாக இருக்க வேண்டும்.

இதுவும் மாட்டாதவர்கள் ஐந்து நாட்கள் உச்சிவேளையில் இறைவனுக்குநிவேதித்த உணவையுண்டு இரவு பட்டினியாக இருந்து, ஆறாவது நாள் மிகவும் அன்புடன் உபவாசமாக இருந்து வழிபடவேண்டும். ஐந்து நாட்களிலும் படுக்கையில் படுக்கக் கூடாது. தூய பட்டு விரித்து அதன் மீது படுத்து இதயத்தில் முருகனை நிறுத்தி அகக்கண்ணால் நோக்கி தியானித்த வண்ணமாகவே உறங்கவேண்டும்.

இவ்வாறு சஷ்டிவிரதம் இருந்தோர் மகப்பேறு முதலிய எல்லா நலன்களையும் எளிதிற் பெறுவர். இவ்விரதத்தைப் பற்றிக் கந்த புராணத்தில் கூறுமாறுங் காண்க.

''வெற்பொடும் அவுணன் தன்னை வீட்டியதனி
வேற் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர்
யாரும்
சொற்படு துலையின் திங்கள் சுக்கில பக்கந்
தன்னில்
முற்பக லாதியாக மூவிரு வைகல் நோற்றார்.''

முருகவேள் முழுமுதற் கருணை முன்னிற்க.

## திருமுருகாற்றுப்படை பிறந்த வரலாறு

கற்கிமுகி என்ற ஒரு பூதம், இறைவழிபாட்டை மனம் ஒன்றிச் செய்யாத ஆயிரம் பேரை ஒருங்கே விழுங்க விரதம் பூண்டு அவ்வாறே வழிபாட்டை முறையாக ஆற்றாத 999 பேரைப் பிடித்து ஒரு குன்றினுள் அடைத்து வைத்திருந்தது. நக்கீரர் திருப்பரங்குன்ற முருகனைத் தொழ வந்தவர், சரவணப் பொய்கையில் நீராடி, அதன் கரையிலிருந்த ஆலமரத்தின் அடியில் அமர்ந்து பூசை மேற்கொண்டார். அப்பொழுது ஆலிலையொன்று மரத்திலிருந்து கீழே விழுந்து நிலத்தில் பாதியும் நீரில் பாதியுமாக இருந்தது. நீரில் விழுந்த பாதி மீனாகவும், நிலத்தில் விழுந்த பாதி பறவையாகவும் மாறி ஒன்றையொன்றை இழுக்க அதனைப் பார்த்து அதிசயித்த நக்கீரர் இறைவழிபாட்டில் வழுவினார். உடனே நக்கீரரையும் பிடித்துக் கொண்ட கற்கிமுகி பூதம், ''கணக்கு சரியானது; இனி ஆயிரம் பேரையும் ஒன்றாக விழுங்குவோம்' என்று எண்ணி நீராடச் சென்றது.

அவ்வேளையில் நக்கீரர் மனமுருகிப் பாடியதே பத்துப்பாட்டில் முதல் பாட்டாக விளங்கும் திருமுருகாற்றுப்படை. திருமுருகாற்றுப்படை இயற்றி நக்கீரர் முருகனைத் தொழ, ஆயிரம் பேரை ஒருங்கே உண்ண ஆசைகொண்டிருந்த பூதம், முருகனுடைய அருள்வேலுக்குப் பலியாகி மாண்டது. திருமுருகாற்றுப்படை பாடிப் பரவுவார் வினையறுக்க, மீண்டது.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration D.pt.

# கந்தர் சஷ்டிக் கவசம்

தேவராய சுவாமிகள்

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன்அடி நெஞ்சே குறி.
துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்
நெஞ்சில்
பதிப்போர்க்கு செல்வம் பலித்து-கதித்தோங்கும்
நிட்டையும் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டிக் கவசம் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்க என்றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவர் நித்தம் வருக
சிரகிரி வேலனார் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹ வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
அசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரோளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும், தனிஒளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும்நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும், பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச்சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்,
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி



டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோத னென்று
உன்திரு வடியே உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்உயிர்க் குயிராம் இறைவா காக்க
பன்னிரு விழியால், பாலனைக் காக்க
அடியேன் வதனம், அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டு நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேள் காக்க
கன்னம் இரண்டு கதிர்வேல் காக்க
என்இளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர்இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேள் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்ட குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடைஇரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக,
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை, முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து, கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரைஇருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம், வலாஸ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்மராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்பச் சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
சண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும், நீள்முடி மண்டையும்
பாவைகள் உடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும், ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப்போக்கும்
அடியனைக்கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாள் என்னைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட, அகண்டு புரண்டிட
வாய்விட் டலறி, மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டுக்
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு, செக்கு, செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணல்எரி
தணல்எரி தணல்எரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரிவயப் போத்தொடு நாயும்
எலியும் கரடியும் இனி தொடா தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விடங்கள் கடித்துயர் அங்கங்கள்
ஏறிய விடங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோவும்
வாதம் சயித்தியம் வலிப்புப்பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச்சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும், என்னைக் கண்டால்
நில்லாது ஓட, நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும், எனக்கு உறவாக
ஆணும்பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துறவாக
உம்திரு வடியை ஜெபிக்க உன்நாமம்

சரவண பவனே, சைலொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுரபவனே! பவம்ஒழி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா! குகனே! கதிர்வே லவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா கடம்பனை,
இடும்பனை அழித்த இனியவேல் முருகா!
பழனிப்பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தில்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான்உமைப் பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தைமுருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உம்பதம் பெறவே உம்அருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைகுரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள், எத்தனைபிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளைஎன் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுஉன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சம்என்ற அடியேன் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி

நேச முடன்உம் நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்கா தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மற்றவர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்ட லட்சுமிகளுள்
வீரலட் சுமிக்கு விருந்து உணவாகச்
சூர பத்மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு, உவந்த முதளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள, எந்தன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே!
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

# ஆனைக்காவில் அருள்புரியும் அகிலாண்டேசுவரி

**கவிஞர் எதிரொலி விசுவநாதன்**

அன்னை அகிலாண்ட வல்லியே!—உன்
அற்புத கோலத்தைக் கண்டுநான்—என்
தன்னை இழந்ததைச்சொல்லவோ!—ஒரு
சாரமும் இல்லாமல் வாழ்ந்தவன்—உன்
மின்னல் கருவிழிப் பார்வையில்—பட்டு
மேன்மைகள் ஆயிரம் பெற்றதை—இங்
கென்ன வகையிலே சொல்லுவேன்?—புவி
யாவும் இயக்கிடும் அன்னையே!

கன்னியென மறைபேசிடும்—ஆனைக்
காவில் வளர்கின்ற தேவியே!—உனை
எண்ணிட இன்னல்கள் மாய்ந்திடும்—மனம்
இன்ப உணர்வினில் தோய்ந்திடும்! என்
சின்னத்தனம் என்ற சேற்றிலே—நீ
செந்தா மரையெனத் தோன்றினாய்!—உனை
என்ன வகையிலே வாழ்த்துவேன்?—புவி
யாவும் இயக்கிடும் அன்னையே!

சுற்றிச் சுழலும் பல்லண்டங்கள்—உன்
தூய புகழினைப் பாடிட—மனம்
பற்றி எரித்திடும் ஆசையில்—நான்
பாசவலையினில் வீழவோ—ஆய்ந்து
கற்றுப்படித்ததைத் தேர்கையில்—நெஞ்சம்
கண்ட பலன் நீ அல்லவோ—எல்லாப்
பற்றும் விடற்குன்னைப்பற்றினேன்—இந்தப்
பாரை இயக்கிடும் அன்னையே!

தொட்டிலில் தவழ்ந்துபின்கட்டிலில்—இன்பம்
துய்த்துவிளையாடிக் கொட்டிலில்—ஒரு
மட்டில்லாத துன்பத்தொட்டியில்—இன்னும்
மயங்கி மயங்கி நான் களிப்பதா?—பாசி
பட்டுக்கொண்டே நான் குளிப்பதா?—உன்
பாதம் அடைந்தும் நான் நோவதா?—தேகக்
கட்டை சாய்வதன் முன்னமே—என்றன்,
கட்டை அவிழ்த்திடும் அன்னையே!

கண்ணீர்ப்பெருகும் இவ் வேளையிலே—என்
கண்கள் கயலென ஆகுதே!—ஈன
எண்ணம் வளர்மனக் கல்லறையில்—இன்று
எத்தனையோ மலர் பூக்குதே!—தோல்
பண்ணிய மெய்எனும் பாத்திரத்தை—தினம்
தோத்திரம் செய்தே துலக்கிடுவேன்—எனக்கு
அந்நியம் இல்லாத ஆரமுதே—இந்த
அகிலம் இயக்கிடும் அன்னையே!

உன்சந்நிதி முன்னிலை யாகவே—நான்
சர்வ பரித்தியாகம் செய்கிறேன்!—தினம்
தின்று படுத்து விழித்திடும்—வாழ்வைத்
தேடி விரும்பி நான் தேயவா?—நீ
அன்று கவி மழை பொழியவே—காள
மேகத்திற்கே அருள்செய்தனை!—எனக்
கென்று வரந்தர உள்ளமோ?—இந்த
ஏழைபடும்பாடு கொஞ்சமோ!

# திருமயிலை வெள்ளீசுவரர் தல வரலாறு

## தல வரலாறு

பல்லூழிக் காலத்திற்கு முன் வேதாரண்யம் எனனும் திருமறைக்காட்டுச் சிவாலயத்தில் நள்ளிரவில் எரிந்து கொண்டிருந்த விளக்கின் திரியை தூண்டிவிடுவார் இல்லாமையால் அணையும் தருவாயில் இருந்தது. அப்பொழுது அந்த விளக்கில் உள்ள நெய்யைப் பருகுவதற்கு எலி ஒன்று வந்தது. நெய்யைப் பருகும்போது தீபத்தின் திரியை மூக்கால் நகர்த்திவிட்டது. அதனால் விளக்கு ஒளிவீசி எறியத் தொடங்கியது.

தன்னை அறியாமலே அந்த எலி விளக்கொளியை தூண்டியதாயினும் சிவபரஞ் சுடர் அதனை மறுபிறப்பிலே அசுரர் குல அரசன் மகனாக, மாவலிச் சக்கரவர்த்தி என்னும் பெயருடன் பிறக்குமாறு அருள் செய்தார். பேராற்றலையும் மண்ணுலகத்தையும், விண்ணுலகத்தையும் கட்டி ஆளும் அரசுரிமையையும் அடைந்த மாவலிச் சக்கரவர்த்தி தான் பரமசிவத்தின் பாத கமலங்களை அடைவதே பிறவிப்பயன் என்று தெரிந்து பெரிய வேள்வி ஒன்றைச் செய்தார்.

அந்த வேள்வியின் முடிவில் ''யார் எதைக் கேட்டாலும் வழங்குவேன்'' என்று பறை சாற்றினார். திருமால் வாமன வடிவினராக வேள்விச் சாலையை அடைந்தார். தமது திருவடிகளால் மூன்று அடி மண்ணை தானமாக வழங்க வேண்டும் என்றார். மாவலியும் களங்கமற்ற மனத்துடன் மூன்றடி மண்ணை வழங்குவதாக வாக்களித்தார்.



ஆனால் வந்தவர் ''யாசகர் அல்லர், அசுர குலத்தை அழிக்கவந்த திருமாலே'' என்பதை அசுரகுல குருவான சுக்கிராச்சாரியார் அறிந்தார்.

''இவன் யாசகன் அல்ல. மூன்றடிமண் வேண்டுமெனக் கோருவது மாயம்'' என்று மாவலியை தானம் செய்ய ஒட்டாது தடுத்தார்.

உண்மை நிலையை மாவலி தன் தவவலிமையால் அறிந்தார். ஆயினும், ''என் அறவாக்கினை மீறேன்'' என்று தாரைவார்த்து தானம் கொடுக்கக் கெண்டியை தூக்கினார். அக்கணமே சுக்கிராச்சாரியார் வண்டுருவம் கொண்டு தண்ணீர் வரும் கெண்டியின் மூக்கு வழியை அடைத்தார். திருமால் சுக்கிராச்சாரியாரின் சூழ்ச்சியை தெரிந்து தர்ப்பைப் புல்லினால் கெண்டியின் வழியை அடைத்துக் கொண்டிருந்த வண்டைக் குத்தினார். தானம் தடையின்றி முடிந்தது. மாவலியும் அறம் வழுவா தாற்றிய பெருமைக்கேற்ப பெரும் பதவியைப் பெற்றார்.

தர்ப்பைப் புல்லினால் குத்தப்பட்டமையால் சுக்கிராச்சாரியாரின் கண்கள் குருடாயின. எனவே, அவர் அந்த முக்கண்ணனாகிய சிவபெருமான்தான் இழந்த கண்களை தரவல்லவர் என்று திருமயிலைக்கு வந்தார். சுக்கிரன் குளம் என்னும் (தற்போது சித்திரக்குளம் எனப்படும்) புண்ணிய தீர்த்தத்தை உருவாக்கினார். சிவபெருமானை இலிங்க வடிவில் குருந்தை மரத்தின் கீழே எழுந்தருளச் செய்து பல்லாண்டுக் காலம் முறைப்படி சுக்கிராச்சாரியார் பகவானை வேண்டினார்.

கருணைக் கடலாகிய சிவபெருமான் சுக்கிரனின் பக்திக்கு மனம் இறங்கி, இழந்த கண்களை மீண்டும் வழங்கி அருளினார்.

வெள்ளி என்னும் சுக்கிரன் பூசித்த தலம் ஆகையால் ஸ்தல மகிமையை விளக்கும் வகையில் உட்கோயில் ஒன்று வெள்ளீஸ்வரர் ஆலயத்தில் வடகிழக்கில் இருக்கிறது. அங்கே குருந்தை மரத்தடியில் சிவபெருமான் இலிங்க வடிவில் எழுந்தருளி இருப்பதையும், வடக்கு நோக்கி சுக்கிரன் வணங்கியவாறு இருக்கும் திருக்கோலத்தையும் கண்டு களிக்கலாம். ''சுக்கிரேஸ்வரர் கோயில்'' என்று குறிப்பிட்டிருப்பதையும் அங்கு காணலாம். சுக்கிரேஸ்வரர் அருளினால் தான் கோரியது பெற்ற பக்தர் ஒருவரால், சுக்கிர பகவானுக்கு முன் மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

## தக்கயாகப் பரணி பாடப்பட்ட வரலாறு.

'கவிச்சக்கரவர்த்தி' எனச்சிறப்பிக்கப்படும் ஒட்டக்கூத்தர் 'தக்கயாகப் பரணி' பாடியதற்குக் காரணமாக ஒரு வரலாறு கூறப்படுகிறது. குடந்தை வீரசிங்காதன மடத்தில் தங்கியிருந்த வீரசைவ சங்கமர் ஒருவர் தேவாரம் பாடிப் பிச்சையேற்று வாழ்ந்து வந்தாராம். அவர் ஒருநாள் பழையாறையில் முகாமிட்டிருந்த ஒட்டக் கூத்தர் வீட்டின் முன் நின்று தேவாரம் பாடிப் பிச்சை கேட்டபோது, அவர் பாடிய தேவாரப் பாடலுக்குப் பொருள் வினவினாராம் ஒட்டக்கூத்தர். பொருள் கூறத்தெரியாமல் சங்கம அடியார் விழிக்கவே, சினம் கொண்ட கவி ஒட்டக் கூத்தர், தம் கைத்தடியால் ஓங்கி அடிக்க, சங்கம அடியார் சுருண்டு விழுந்து மாண்டு போனாராம். இந்நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட சங்கம அடியார்கள் பலர் ஒட்டக் கூத்தரைத் தாக்க வர, அருகிலிருந்த காளிக் கோயிலுக்குள் நுழைந்து ஒட்டக்கூத்தர் தாளிட்டுக் கொண்டார். தன்னைக் காக்க வேண்டிய ஒட்டக்கூத்தர்முன் தோன்றிய காளிதேவி ''சங்கம அடியார்களின் போற்றுதலுக்குரிய வீரபத்திரர் மேல் நூல் ஒன்று பாடுக'' என்றருள் செய்ய, அவ்வாறே ஒட்டக் கூத்தரும் ''தக்கயாகப் பரணி''யை ஓர் இரவில் பாடிச் சங்கம அடியார்களின் கோபத்தை மாற்றினார் என்று கூறப்படுகிறது. ஆயின் இவ்வரலாறு உண்மையானது அன்று என்றும் ஆராய்ச்சி அறிஞர்கள் மறுத்துக் கூறுகின்றனர்.



கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்

# திருவண்ணாமலைத் தலப்பெருமை

உண்ணாமுலை உமையாளொடும்
உடன்ஆகிய ஒருவன்
பெண் ஆகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ஆர்ந்தன அருவித்திரள்
மழலைம்முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே

—திருஞானசம்பந்தர்

### தலத்திருநாமங்கள்

இப்பிரசித்தித்தலம், முத்திபுரி, தலேச்சுரம், சிவலோகம், சுத்த நகரம், கௌரிநகரம், சோணாசலம், சோணகிரி, சோணாத்ரி, அருணாசலம், அருணகிரி, அருணாத்ரி, அனற்கிரி, திருவருணை, திருவண்ணாமலை என்னும் பல திருநாமங்களைத் தாங்கி விளங்குகின்றது. இதற்கு ஞான சேகரம் என்ற விசேடமான பெயரும் உண்டு.

### தலச்சிறப்பு

இத்தலம், ஆறு ஆதாரத்தலங்களுள் மணிபூரகத்தலமாகவும், பஞ்சபூதக் தலங்களுள் நடு நாயகமான அக்நித்தலமாகவும், முத்தித்தலங்கள் நான்கனுள் நினைத்த மாத்திரத்தில் முத்தி நல்க வல்லதாகவும், நடு நாட்டுச் சிவத் தலங்கள் இருபத்திரண்டனுள் சிறப்புடைய ஒன்றாகவும், மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகப் பொருந்தியதாகவும், ஞானத்தபோதவர்க்கு உறைவிடமாகவும் அமைந்துள்ளது.

மஹா சிவராத்திரியின் தோற்றுவாய் கொண்டதும், தேவிக்கு இடப்பாகம் அளித்ததும் இத்தலத்தின் தனிப்பெருஞ் சிறப்புக்களாகும்.

''ஆதி நெடுமால் அயன்காண அன்றுபரஞ்
சோதிச் செழுஞ்சுடராய்த் தோன்றுமலை
—வேதம்
முழங்குமலை சிந்திப்போர் முன்னின்று
முத்தி
வழங்குமலை அண்ணா மலை''

''சத்திக்கு ஒருபாகம் தான்கொடுத்து நின்ற
மலை
முத்திக்கு வித்தாய் முளைத்தமலை-எத்
திசையும்
போற்றுமலை போற்றிப்புகழ்வார் ஏழு
பிறப்பை
மாற்றுமலை அண்ணா மலை''.

—குரு நமசிவாயர்.

இன்னும் இருக்வேதம், அதர்வணவேதம், சரப உபநிடதம், சூத சங்கிதை, உருத்திர சங்கிதை, பாஸ்கர சங்கிதை, சிவ மஹா புராணம், சிவ ரஹஸ்யம், கந்தபுராணம், பெரிய புராணம், அருணாசலபுராணம், தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய அரிய நூல்கள் இத்தலத்தின் வியத்தகு மரபினை எடுத்துரைக்கும்.

### மூர்த்தி திருநாமங்கள்

இங்கு கோயில் கொண்டருளும் மூர்த்தியின் திருப்பெயர்கள் புராணங்களில் பலவாகப் கூறப்பெற்றுள்ளன.

பிரசித்தமாக விளங்குவது : ஸ்ரீ அருணாசலேசுவரர்'' ''ஸ்ரீ அண்ணாமலையார்''

தேவியின் திருநாமம் : ஸ்ரீ அபீத குசநாயகி ''ஸ்ரீ உண்ணாமுலையம்மை''

தல விருட்சம் : வகுளம் (மகிள மரம்) ஆலமரம் எனவும் உரைப்பர்.

### இலிங்கோற்பவம்

படைத்தற் கடவுளாகிய பிரமனும், காத்தற் கடவுளாகிய திருமாலும் தாந்தாமே பெரியரென்ற அகங்காரங்கொண்டு தம்முட் பிணக்குற்ற காலை, முழுமுதற் பொருளாகிய, சிவபெருமான், அவர்கள் முன்பாக ''ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் ஜோதிப்'' பிழம்பாகத்தோன்றி, தமது அடியையேனும் முடியையேனும் கண்டு வந்தவர் பெரியராவார் எனத் திருவாய் மலர்ந்தருளவும், திருமகள் மார்பன் வராக வடிவங்கொண்டு ஆழ்ந்து ஆழ்ந்து குடைந்து சென்றும், ''பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்'' காண இயலாது சோர்ந்து திரும்பினார். அன்ன உருத்தாங்கி ஆகாயத்தே உயர உயரப் பறந்தும், ''வேதப் பொருள் முடிவாம் போதார் புனை முடியை'' நண்ணுதற்கியலா நான்முகன் தயங்கி நிற்கையில், ஆங்குற்ற தாழம்பூ ஒன்றினைக் கண்டு அதன்பால் தனது விருத்தாந்தத்தை விளம்ப, கங்கைநீர் மல்கும் திங்களார் சடையினின்றும் நழுவிய தான், நாற்பது ஆயிரம் ஆண்களாக கீழ்நோக்கி வந்து கொண்டிருப்பதும், ''பிறையணி முடியைக் காண்டல் பிரமனே! எவர்க்கும் ஆகா'' எனவும் தாழம்பூவால் கூறக் கேட்ட பிரமன் தனது முயற்சி விடுத்துத் தனக்காகப் பொய்யுரை யொன்று புகலவேண்டித் தாழைமலரைச் சம்மதிக்கச்செய்து, திருமாலிடம் சென்று தாம் சோதி மணி முடி கண்டதாக உரை செயலும், முற்றுணர்ந்த சிவபெருமான் பொய்யுரை செய்த பிரமனுக்குப் பூலோகத்தில் ஆலயம் அமையாதாவதென்றும், கரவுரை செய்த கைதை (தாழம்பூ) தமக்கு ஆகாதாவதென்றும் சாபமிட்டனர். பங்கயத்தானும் பாம்பணையானும் தங்கள் அகங்கார இருள் அகலப்பெற்றவராய், தன்னிகர் இல்லாத்தனிப் பெருஞ்சோதியைப் பரவிப் பணிந்து பிரார்த்திக்க, அவர்களின் பிரார்த்தனைக்கு இரங்கிய பெருமானார் சிவலிங்கத்திருவுருக் கொண்டு அமர்ந்தனர் என்ப. இதனை,


''என்னிகர் எவரும் இல்லென்று இருவரும்
இகலும் எல்லை
அன்னவர் நடுவு தோன்றி அடிமுடிதெரியா
தாகி
உன்னினர் தங்கட்கு எல்லாம் ஒல்லையில்
முத்தி நல்கித்
தன்னிகர் இன்றி நின்ற தழற்பெருஞ்
சைலம் கண்டார்.''

(உற்பத்தி காண்டம்-வழிநடைப்படலம்-11)

''அரியும் யானும்முன் தேடும் அவ்அனற்கிரி
அனல
கிரியெனும் நின்றதால் அவ்வொளிகிளர்ந்த
இரவதே சிவ ராத்திரி யாயினதுஇறைவற்
பரவி உய்ந்தனர் அன்னதோர் வைகலில்
பலரும்''

(தட்சகாண்டம்-அடிமுடிதேடு படலம்-96)

என, கந்தபுராணம் முழங்கும்.




அண்மையில் திருவாரூர் தியாகராசப் பெருமான் திருக்கோயிலுக்கு வருகை புரிந்த மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்கள் கோயில் திருப்பணியை விளக்கிப் பத்திரிகையாளருக்குப் பேட்டி அளித்த போது எடுக்கப்பட்ட படம்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept.




அருள்மிகு உண்ணாமுலையம்மை



அருள்மிகு அருணாசலேசுவரர்

இவ்வரலாறே இலிங்கோற்பவத்தின் தோற்றமாகும். கிருதயுகத்தில் அக்நி மலையாகவும், திரேதயுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபர யுகத்தில் பொன் மலையாகவும், கலியுகத்தில் கல் மலையாகவும் மாறிற்று என்பர்.

### தேவி இடப்பாகம் பெற்றது

ஓர் கால் உமா தேவியார் விளையாட்டாக எம்பெருமானுடைய திருக்கண்களைப் புதைக்கவே, அக்கணம் பிரபஞ்ச மெங்கணும் பேரிருள் சூழலாயிற்று. அப்பேரிருள் வசப்பட்ட ஜீவகோடிகளின் துன்பத்துக்கு ஆற்றாராய், அப்பாபம் தீர்க்கவேண்டித் தேவியார் காஞ்சிமாநகரம் சேர்ந்து பிருத்வியால் இலிங்கம் அமைத்துப்பூசனை புரிந்துவரும் நாளில், பத்தராய்ப் பணிவார்க்குப்பதம் அளிக்கும் பரமன் தோன்றி ''திருவருணையை அடைந்துதவமியற்றித்தமது இடப்பாகம் பெறு''மாறு அருளிச்செய்தனர்.

அவ்வண்ணமே பார்வதி தேவியார் அருணாசலத்தை அடைந்து, பவழக்குன்று மலையில் பர்ணசாலை அமைத்து, கௌதம முனிவரின் உதவியால் கடுந்தவம் புரிந்து வருகையில், ஆசையால் அறிவு அழிந்து அட்டகாசம் புரிந்து நின்ற அசுரர் தலைவனான மகிடாசுரன் என்பானை மர்த்தனம் செய்து, மன்பதை உய்யக் கார்த்திகைத் திங்களில் பெருவிழா நடத்திப்பௌர்ணமியோடு கூடிய கிருத்திகைப்பிரதோஷ காலத்தில் மலைமேல் ஜோதி ஸ்வரூப தரிசனம் கண்டு எல்லையிலாக் களிப்பெய்தி எம்பெருமானாரின் இடப்பாகம் பெற்று அமர்ந்தனர்.

### தீப தரிசனம்

வருடந்தோறும் இங்கு நடைபெற்றுவரும் திருக்கார்த்திகை தீபப் பெருவிழாவின் பத்தாம் நாளாகிய தீப தரிசன தினத்தன்று, பிரதோஷ காலத்தில், அர்த்த நாரீஸ்வர மூர்த்தி எழுந்தருளிக் காட்சிகொடுத்து, அவ்வேளையில் மலையின் உச்சியில் ஜோதி ஸ்வரூபம் காட்டலும், அதே சமயத்தில் ஆலயத்துள் பஞ்சமூர்த்திகளுக்குத் தீபாராதனை செய்தலும் வழக்கமாக நடைபெற்று வருகின்றன.

''கார்த்திகைக்குக் கார்த்திகைநாள் ஒருசோதி
மலைநுனியிற் காட்டா நிற்போம்
வாய்த்த அந்தச் சுடர்காணில் பசிப்பிணியில்
லாதுஉலகின் மன்னி வாழ்வார்
பார்த்தவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிரும்அது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தில் இருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம்'' என்றார்.

—அருணாசல புராணம்.

### அருணையைத் தரிசித்த அருந்தவத்தோர்

குமரவேள் தாருகாசுரனை வதம்செய்து தெற்கு நோக்கி எழுந்தருளிய காலத்து, திருவண்ணாமலையைத் தரிசித்த வரலாறு, கந்த புராணத்துள் காணக் கிடைக்கின்றது.

திருஞானசம்பந்தப் பெருமான் இப்பதி அடைந்து, இரு திருப்பதிகங்கள் பாடித் ''தங்கு விருப்பில் வீற்றிருந்தார்'' என்பது பெரிய புராணத்தால் அறியலாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் இங்கு எழுந்தருளி மூன்று திருப்பதிகங்கள் இயற்றினர். இதனை ''பண்ணார் பதிகத்தமிழ் பாடிப் பணிந்து பரவிப்பணிசெய்தார்'' என்னும் சேக்கிழார் பெருமானின் திருவாக்கால் அறியலாம்.

மாணிக்கவாசகப் பெருந்தகை இத்தலத்தில் பல காலம் தங்கினார் என்பதை ''திருவெம்பாவை'' ''திருவம்மானை'' ஆகிய பாமாலைகளும் திருவாசகத்தில் காணப்பெறும் திருவண்ணாமலை பற்றிய ஏராளமான குறிப்புகளும் நன்கு உணர்த்துவதாகும்.

சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள், நக்கீரர், கபிலர், பரணர், பட்டினத்தார் ஆகியவர்களும் திருவண்ணாமலையைத் தரிசித்திருத்தல் கூடுமென்று கருதலாம். அவர்களுடைய பாடல்களில் இத்தலம் பற்றிய குறிப்புகள் நிறையக் காணக்கிடைக்கின்றன.

### வச்சிராங்கத பாண்டியன்

இவர் புரவி மீதமர்ந்து வேட்டையாடி வருங்கால் ஒரு புழுகு (புனுகு) பூனையைக் கண்டு அதனைத் துரத்த, அப்பூனை அண்ணாமலையினை அடைந்து வலம் வந்து விழுந்து இறந்தது. பாண்டியன் ஏறிவந்த குதிரையும் கூடவே விழுந்து இறந்துவிட்டது. இரண்டும் உடனேஇரு வித்தியாதரர்களாகமாறித்தாங்கள் இருவரும்பூனையாகவும் குதிரையாகவும் பிறக்க நேர்ந்ததும், திருவண்ணாமலையை வலம் வந்த விசேடத்தால் சாபம் நீங்கப்பெற்றதும் கூறினர். இது கேட்ட பாண்டியன் அரசுரிமையை தமது புதல்வனான இரத்தினாங்கதனிடம் ஒப்புவித்தான். அவன் அண்ணாமலை நாதருக்கு அழகிய திருப்பணிகள் ஆற்றியும் வலம் வந்தும் தேவேந்திர பதவி பெற்றான் என்று புராணம் கூறும்.

### வல்லாள மஹாராஜன்

இரப்போர்க்கு இல்லை யென்னாது வாரி வழங்கும் வள்ளற்கொடியுடைய வல்லாள மஹாராஜன் என்னும் மன்னன் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு அறநெறி வழாதுஆட்சிசெலுத்திவரும் நாளில், மன்னனது

நீதி வழுவா நெறிமுறையின் உறுதியினை சோதிக்கத் திருவுளம் கொண்ட அண்ணாமலை யண்ணல், அடியவர் வடிவந்தாங்கி அரசவைக்கு எழுந்தருளினார். அடியவர் விஜயத்தால் ஆனந் தப்பெருக்கடைந்த அரசன், அடியார்பாதம் பணிந்து, வந்த காரியத்தை உரைத்தருள வேண்டலும்


''உன்னையாம் கருதிவந்தது ஓதுவம்
உருஇல் மாறன்
பன்னும்ஐங் கணையால் இன்று படுத்திடும்
துயரை மாற்றக்
கன்னியைநல்கில் கீர்த்தி கடல்ஏழும்
வழங்கும்'' என்றார்

—அருணாசல புராணம்

அரசன் ஏவலாளர்களை அனுப்பி அன் றிரவு அடியவருடன் இருக்கத்தக்க ஓர் கணிகை மாதை அழைத்து வருமாறு பணித்தனன். மங்கையோர் பாகம் கொண்ட மாதேவரின் லீலா விலாசத்தால் அன்றைய தினம் அருணை யம்பதியிலுள்ள பரத்தையர் அனைவரும் பிறர் வயப்பட்டிருந்தமையால் அரசன் அழைப்புக்கு இயைந்திலர். அடியவரின் விருப்பம் நிறை வேற்ற இயலாது அரசன் அடைந்துள்ள அள விலாத்துயரங்கண்ட இளைய ராணி சல்லமா தேவி என்பவர் அரசன் திருவுளம்கொண்டால் அரசனின் அடைக்கலமான தன்னுடைய சரீ ரத்தைக்கொண்டு அடியவர்க்களித்த வாக்கை நிலை நிறுத்தலாமென்றனள். ''இல்லை யென் பது இல்லை'' என்னும் தமது எழிற் கொடி தாழாது வழிகாட்டிய தன் அருந்துணைவியின் மாண்பினை வியந்து மன்னன் அகமிக மகிழ்ந்து அனுமதியளித்தனன்.

இரவு பஞ்சணை சேர்ந்த சங்கமர், தூங் காமல் தூங்கும் துயிலில் ஆழ்ந்தவராய் இராப் பொழுதின் பெரும் பகுதி கழியவே ''வேந்தனா ருரைத்த வாய்மை வீண்பட லாகா'' தென் றஞ்சிய அரசியார், அடியவர் துயில் நீக்கும் பொருட்டாக அவரது திருவடிகளைத் தீண்ட லும், அக்கணம் அடியவரின் திருமேனி உருக் கரந்து பச்சைப்பசுங் குழவியாகிப் பால சூரியன் என விளங்கியது.

அரசனும் அரசியும் ஆனந்தப் பெருக்கு டையவராய் பிள்ளைக் கலி தீர்க்கப்பெருமானே எழுந்தருளிவந்த தங்கள் பாக்கியத்தை வியந்து குழந்தையை வாரி அணைத்த வேளை யில், மார்புறத்தழுவிய மதலை மார்பகத்தே காணாது மாயமாய் மறைந்தது. சதிபதிகள் இருவரும் தங்கள் துர்ப்பாக்கியத்தை நினைந்து



மேதகு குடியரசுத் துணைத்தலைவர் திருமிகு ஆர். வெங்கட்டராமன் அவர்கள் மதுரைக்கு அண்மையில் வருகை தந்த பொழுது அருள்மிகு மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் தக்கார் திரு V. N. சிதம்பரம் அவர்கள், பிரசாதம் வழங்கிக் கௌரவித்தபொழுது எடுக்கப்பட்ட படம்.

வருந்தலும் அண்ணாமலைப் பெருமாள் ஆகாய வீதியில் வெள்விடைமேல் தோன்றி, அரசே ''உமது பற்றற்ற பக்தி நிலையினை உலகுக்கு உணர்த்தும் பொருட்டாகவே யாம் அடியவர் வேடம்தாங்கி வந்தோம்.

''நற்புதல்வன் வேண்டும்என நாடியிருந் தாய்உனக்குப்
பொற்புதல்வன் என்னநாம்போந்தனமே- சொற்பயன்ஈது
என்ன இனிதே அறம்இயற்றி இப்புவியில்
மன்ன! இனிவாழ்வாய் மகிழ்ந்து''

''மைந்தன்இலை என்ற மனக்கவலை தீர்த் திடுவாய்
அந்தம்உறில் எந்தன் அடிஅடைவாய்; வந்து உனக்கு,
நாம்உத் தரகிரியைநன்கு இயற்றுவோம்'' என்றான்;
மாமுத்தர் அன்பில் வருவான்.

—துரைவடிவேலனார்

இதற்கிணங்க வருடந்தோறும் வல்லாள மஹா ராஜனுக்கு ஈமக்கடன் செய்யும் பொருட்டாக, ஸ்ரீ அண்ணாமலை யண்ணல் மாசி மாத மக நட்சத்திரத்தில் பள்ளிகொண்டா பட்டுக்கு எழுந்தருளி உத்திரகிரியை நடாத்தும் உற்சவம் இன்றும் நடைபெற்று வருகின்றது.

### ஸ்ரீ அருணகிரிநாதர்

திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, திருவகுப்பு முதலியன அருளிச் செய்த செந்தமிழ்ச் சந்தக்கவிராஜரான அருண கிரிநாதர் சரித்திரம் பலவாறாக வழங்கப்பட்டு வருகின்றது. இவருடைய முற்பிறப்பு, தாய் தந்தையர், பருவகால நிகழ்ச்சிகள் குறித்துக் கருத்து மாறுபாடுகள் உள்ளன. எனினும் இம் மகான் திருவருணையில் அவதரித்தவரென்ப தும், முருகப் பெருமானுடைய திருவருட்கடாட் சம் பெற்றுப்பல பாடல்கள் இயற்றினரென்ப தும் யாவரும் ஒப்பமுடிந்த ஒன்றாகும்.

இவருடைய காலம் பதினைந்தாவது நூற் றாண்டின் மத்திய பகுதி என்பது, திருவண்ணா மலையில் அரசுபுரிந்த பிரபுடதேவமாராயர் காலத்தில் ஆஸ்தான கவிஞராயிருந்த சம்பந் தாண்டான் என்னும் தேவி உபாசகருடன் வாதிட்டு வென்ற நிகழ்ச்சியைக் கொண்டு அறி யலாம்.

வாழ்க்கையில் சலிப்பெய்தி அறுமுகப் பெருமானின் அருட்பேற்றை நாடித்தவங்கிடந் தும் அவனருள் பெறாமையால், அருணகிரி நாதர் இவ்வாலயத்தின் ஓங்கி வளர்ந்த கோபு ரங்களுள் ஒன்றாகிய வல்லாள மஹாராஜன் கோபுரத்தின் மீதேறித்தன்னை அர்ப்பணித் துக்கொள்ளும் வேளையில், முருகவேள் தோன்றி அருணகிரிநாதரை ஆட்கொண்டரு ளித்தம்மைப் ''பாடும் பணியே பணியா''கச் செய்துவரக் கட்டளையிட்டனர் என்ப.

வேலவர் தாமே ''முத்தைத்தரு'' என அடியெடுத்துக் கொடுத்து தீட்சைசெய்த வரலாறும், தலங்கள் தோறும் யாத்திரை சென்று அற்புதத்திருப்பாடல்கள் இயற்றிய வரலாறும், பிரபுட தேவமாராயருக்கு கம்பத் தில் கந்தவேள் காட்சி காட்டிய வரலாறும் இவருடைய தனிச்சரித்திர வரலாறுகளில் விரி வாகக் காணத்தகும்.

### குகை நமசிவாயர் - குரு நமசிவாயர்

சில நூற்றாண்டுகட்கு முன் இப்பதியில் குகை நமசிவாயர் என்ற திருநாமம் பெற்ற சைவப்பெரியார் அற்புதமான சித்திகள்பெற்று விளங்கினார்.

இவருடைய சீடர், குரு நமசிவாயர். இவர் தாம் இருந்தவிடத்திருந்தே ஞானக்கண் ணால் பல காட்சிகள் காணும் திறமை மிக்கவ ராயிருந்தார். தமது குருதேவரின் ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு தில்லைத்தலம் சேர்ந்து, ஆனந்தக் கூத்தருக்கு அழகிய திருப்பணிகள் ஆற்றிக்கட்டளைகள் பலவும் ஏற்படுத்தினர்.

### மலை, குகைகள், தீர்த்தங்கள்

இங்கு வானுற ஓங்கி வளம்பெறவிளங்கும் மலையினை ஸ்ரீ அண்ணாமலை யண்ணலின் புனிதத்திருவடிவாகவே மக்கள் போற்றி வணங் குவர்.

இதன் உச்சி, கடல் மட்டத்திற்கு மேல் 2,668 அடி உயரமுள்ள தெனக் கணிக்கப்பெற் றுள்ளது. இதன் நாற்புறமும் நன்கு செப்ப னிடப்பெற்ற கப்பிரோடு அமைந்து, கிரிவலம் வருவோர் சிரமமில்லாது இராப்பகல் எந்நேரத் திலும் எளிதில் வரக்கூடியதாக உள்ளது. இதன் சுற்று எட்டு மைல்கள் ஆகும்.

மலையைச் சுற்றி எண் திசைகளிலும் அஷ்டலிங்கங்கள், அஷ்டநந்திகள் ஆகியனவும், முந்நூற்றறுபதுக்கு மேலான தீர்த்தங்களும், பல மண்டபங்களும், ஆசிரமங்களும் உள்ளன.

மலைப்பிரகாரத்தில் சக்கரதீர்த்தம், அக்நிதீர்த்தம், பாண்டவதீர்த்தம், சேஷாத்திரி ஸ்வாமிகள் சமாதி நிலையம், ஸ்ரீ ரமணா சிரமம், பாலிதீர்த்தம், சிம்மதீர்த்தம், யமதீர்த்தம், சோணநதி, உண்ணாமுலைதீர்த் தம், வருண தீர்த்தம், கௌதமர் ஆசிரமம், அடி அண்ணாமலை ஆலயம், மாணிக்கவாசகர் ஆலயம், அசுவினிதீர்த்தம், ஸ்ரீ ஈசான்ய ஞான தேசிகர் சமாதி நிலையம், ஸ்ரீதுர்க்கையம்மன்

ஆலயம், அதனுள் கட்க தீர்த்தம், பவளக் குன்று ஆகியவை உள்ளன.

மலையின் மத்திய பாகத்தில் ஸ்ரீகந்தாசிரமம், விருபாட்ச குகை, குகை நமசிவாயர் ஆலயம், மாமரத்துக்குகை, சடைச்சாமி குகை, அருட்பால் குகை முதலியனவும் பாததீர்த்தம், முலைப்பால்தீர்த்தம் முதலிய தீர்த்தங்களும் உள்ளன.

வருடத்தில் இருமுறை (கார்த்திகை, தை மாதங்களில்) ஸ்ரீ அண்ணாமலைப் பெருமான் கிரி வலம் எழுந்தருள்வார்.

மலையின் உச்சியில் கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை தினத்தில் ஜோதி தரிசனம் காட்டப்பெறும். பெரிய செப்புக்கொப்பரை ஒன்றில் நெய், கற்பூரம், வஸ்திரம் ஆகிய வற்றைக்கொண்டு தீபமிடப்பெறும், தீபத்திற்கு வேண்டிய நெய் முதலியன தேவஸ்தானத்தின் கண்காணிப்பில் சுத்தமானதாகச் சேகரித்து வைக்கப்பெறும். பிரார்த்தனையாளர்களும் பக்தர்களும் தேவஸ்தானத்தில் உரிய அளவு பணம் செலுத்தி சிப்பந்திகள் மூலமாக நெய், கற்பூரம், வஸ்திரம் ஆகியன திட்டப்படி மலைக்கு அனுப்பித் தீபத்தில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்வர்.

அண்ணாமலையை நாடி வந்து தன்னிகரில் சித்திபெற்ற தவசிரேஷ்டர்களுக்கு அளவில்லை. அவர்களில் விருபாட்சதேவர், ஈசான்ய ஞானதேசிகர், சேசாத்திரி ஸ்வாமிகள், ரமண மகரிஷிகள் ஆகியோர் குறிப்பிடத்தக்கோராவர்.

மலையின் மத்திய பாகத்திலும், அடிவாரத்திலும் குகைகள், ஆச்ரமங்கள், தீர்த்தங்கள் நிறைய உள்ளன. அவைகளில் இன்றும் சாதுக்கள் வாசம் செய்து வருகின்றனர்.

**ஆலய அமைப்பு**

இங்குள்ள திருக்கோயில் நமது நாட்டின் மிகப்பெரிய திருக்கோயில்கள் சிலவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பழைமையின் அடிப்படையில் புதுமையின் ஒளி வீசுவதை இவ்வாலயத்தின் சிற்ப ஓவியங்கள் நன்குபுலப்படுத்தும். இக்கோவில் சுமார் 24 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் அமைந்துள்ளது.

ஆறாம் பிரகாரம் என்று கூறப்படும் வெளிப்பிரகாரத்தில் உள்ள திருமதில் மிக உயரமாகவும், கனமாகவும், உறுதியாகவும், கருங்கல்லினால் கட்டப்பெற்றுள்ளது. திருமதிலின் மத்தியில் நான்கு பக்கங்களிலும் நான்கு உயரமான கோபுரங்கள் வானோங்கி விளங்குகின்றன. கிழ்த்திசையிலுள்ள பெரிய கோபுரம் (ராஜகோபுரம்) 11 நிலைகளுடன் 217 அடி உயரம் உள்ளது. இதன் அடி நிலை 135 அடி நீளமும், 98 அடி அகலமும், கொண்டதாகும். தெற்குத்திசையிலுள்ள பெரிய கோபுரத்தைத் திருமஞ்சனக்கோபுரம் என்றும், மேற்குத்திசையிலுள்ள பெரிய கோபுரத்தைப் பேய்க்கோபுரம் என்றும், வடக்குத்திசையிலுள்

## பொய்சாட்சி சொல்லும் பலன்

யார் ஒருவர் நெஞ்சறிய பொய்சாட்சி சொல்லுவார்களோ அவர்கள் வீட்டிலே பேய்கள் வந்து வாசம் செய்யும். வெள்ளெருக்கம் பூ பூக்கும்., பாதாள மூலியெனும் கொடி படரும். மூதேவி தனக்குப் பொருத்தமான இடம் என்று தங்கி நிரந்தரமாக வாழ்வாள்., பாம்புகளும் அவர் வீட்டில் வந்து குடியிருக்கும். ஆகவே பொய்சாட்சி சொல்லல் ஆகாது என்று கூறும் ஔவையாரின் நல்வழிப் பாடலை நெஞ்சில் நிறுத்துங்களேன்!

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்கம் பூக்குமே
பாதாள மூலி படருமே— மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை. (23)



ளதை அம்மணி அம்மாள் கோபுரம் என்றும் வழங்குவர்.

இராஜ கோபுரத்தின் உள்பாகத்தில் வலப் புறமாக அமைந்திருப்பது ஆயிரக்கால் மண்டபம். இடதுபுறம் காணப்படுவது கம்பத்து இளையனார் திருச்சந்நிதி. இதன்மூலத்தானம், வளைகாப்பு மண்டபத்தின் வடகிழ்ப்பாரிசக் கம்பத்தில் அமைந்துள்ளது. இஃது ஸ்ரீ அருணகிரிநாதர் பிரார்த்தனைக்கு இரங்கிப்பிரபுடதேவ மாராயருக்குக் கருணைக் கடவுள் கந்தப் பெருமான் கம்பத்தில் காட்சியருளிய இடமாகும்.

இச்சந்நிதியின் தென்புறமாக நாற்புறமும் திருமாளப் பத்தி மண்டபத்துடன் அமைந்திருப்பது 'சிவகங்கை' என்னும் புண்ணிய தீர்த்தம். இதன் வடமேல் திசையில் காணப்பெறுவது 'சர்வ சித்தி விநாயகர் சந்நிதி. சிவகங்கையின் கீழ்ப்புறமாகவும் தென்புறமாகவும் காணப் பெறுவது ஐந்தாம் பிராகாரம்.

சர்வ சித்தி விநாயகர் சந்நிதியின் வடபால் ஆயிரக்கால் மண்டபத்தின் தென்மேற்குத் திசையில் இருப்பது 'பாதாள லிங்கேசுவரர்' சந்நிதி. இங்கு ஸ்ரீ ரமணமஹரிஷிகள் 'பலகாலம் தங்கித்தவமியற்றினர். இச்சந்நிதி திருவண்ணாமலை ஸ்ரீமதி பெரோசா தலையார்கான் அம்மையாராலும், சென்னை ஸ்ரீ ஜே.ஹெச்.தாராபூர் அவர்களாலும் புனர் நிர்மாணம் செய்யப் பெற்று 14.5.1949ல் முன்னாள் இந்திய கவர்னர் ஜெனரல் சக்கரவர்த்தி இராஜகோபாலாச் சாரியார் அவர்களால் திறந்துவைக்கப்பெற்றது.

பெரிய நந்தியின் எதிரில் காணப்பெறுவது "வல்லாள மஹாராஜன்" கோபுரம். ஸ்ரீ அருணகிரி நாதர் இக்கோபுரத்தின் மீதேறித் தமது ஊனுடலை நீக்கிக்கொள்ள எத்தனித்த காலையில் ஸ்ரீ முருகப்பெருமான் அவர் முன் தோன்றி காப்பாற்றி யருளினார். இதன் வடபால் இருப்பது ஸ்ரீ கோபுரத்து இளையனார் சந்நிதி.

"அடல் அருணைத் திருக்கோபுரத்தே
அந்த வாயிலுக்கு
வடஅருகிற் சென்று
கண்டு கொண்டேன்"

என்று அருணகிரிநாதர் ஆனந்தக் களிப்பெய்தியது இவ்விடமே. இங்கு ஸ்ரீ அருணகிரிநாதருடைய மூலவிக்கிரஹமும் உத்ஸவமூர்த்தியும் உள்ளன. கோபுரத்தின் தென்பாரிசத்தில் தோன்றுவது ஸ்ரீ கல்யாண சுந்தரேசுவரர் சந்நிதி.

வல்லாள மஹாராஜன் கோபுரத்தின் உள்பகுதியில் வலது புறமாக வனப்புடன் திகழ்வது "சத்திவிலாசசபா மண்டபம்"இங்கு சமய சம்பந்தமான சொற்பொழிவுகள் நடைபெறும். இதன் மேல்புறம் உள்ளது புரவிமண்டபம். கோபுரத்தின் தென்பால் உள் மதிலைச் சார்ந்திருப்பது காலபைரவர் சந்நிதி. இங்குள்ள மூர்த்தி இணையற்ற வீராவேசத்துடன் ஜ்வாலிப்பது காணத்தக்கதாகும். அருகில் அமைந் திருப்பதுவே "பிரம தீர்த்தம்" என்னும் புண்ணியத்தடாகம். இதன் மேல்பாரிசத்தில் தொடங்குவது நான்காம் பிராகாரமாகும். இப் பிராகாரத்தின் கிழ்த்திசையில் காணப் படும்பிர

வியாசர் ஒரு செம்படவப் பெண்ணின் மகன் அல்லவா?
மார்க்கண்டேயர் ஒரு ஜாதிவிலக்கம்
செய்யப் பெற்றவர் மகன் அல்லவா?
மண்டோதரி ஒரு தவளையால்
பெற்றெடுக்கப் பட்டவள் அல்லவா?
நீங்கள் சொந்தம் என்று கொண்டாடும்
அகஸ்தியர் ஒரு வேடனல்லவா?
துருவாசர் ஒரு சக்கிலி அல்லவா?
காசிபர், ஒரு கொல்லன் அல்லவா?
மகான் கௌண்டின்யர் ஒரு நாவிதர் அல்லவா?

மேற்கண்டவையெல்லாம் மூன்று உலகங்களாலும்
அங்கீகாரம் செய்யப் பெற்ற உண்மையல்லவா!
'கீழான பிறப்பு' என்பதைப் பற்றி உலகம்
எண்ணுவதைப்போல் கடவுள்
ஒருபொழுதும் எண்ணுவதில்லை
ஆகையால் உண்மையான 'சிவபக்தனே'
உயர்குடிப் பிறப்பினன் ஆவதற்குரிமை உடையவன்
பெருந்தகாய் கூடல சங்கம தேவா!

—மகான் பசவர்



தான கோபுரம் ''கிளிக்கோபுரம்'' என்று வழங்கப்பெறும். இக்கோபுரத்தின் மீதும் கோபுரத்தின் முதல் நிலையிலும் கிளியின் உருவம் அமைந்துள்ளது. இஃது ஸ்ரீ அருணகிரி நாதர் கிளி வடிவந் தாங்கிப் பாரிஜாத மலர் கொண்டு வந்த காலத்துத்தாம் விட்டுச்சென்ற தமது திருமேனியைக் காணாது கிளிஉருவாகவே இருந்து ''அநுபூதி'' பாடியருளிய வரலாற்றை நினைவுறுத்துவதாகும்.

கிளிக்கோபுரத்தின் உட்புறம் எதிரில் தோன்றும் 16 கால் மண்டபம் எனப்படும் காட்சி மண்டபத்தில், கார்த்திகை தீபத்திரு நாள் மாலையில் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி மலையை நோக்கி நிற்க, ஏககாலத்தில் தீப தரிசனக்காட்சி நடைபெறும். இம்மண்டபத்தின் எதிரில் மேல்புறமாக துவஜஸ்தம்பமும், பரணி தீபம் வைக்கும் அகண்ட தீப ஸ்தம்பமும் காண லாம்.

இது மூன்றாம் பிராகாரமாகும். இப்பிரா காரத்தில், ஸ்ரீ சம்பந்த விநாயகர் சந்நிதி, மகிழமரம், திருக்கல்யாண மண்டபம், ஸ்ரீ அருணகிரி யோகீசுவரர் சந்நிதி, தேவி உண்ணா முலையின் திருச்சந்நிதி, யாகசாலை, காளத்தி லிங்கேசுவரர் சந்நிதி, ஏகாம்பரேசுவரர் சந்நிதி, ஜம்புலிங்கேசுவரர் சந்நிதி, பிடாரி-சப்தகன்னி மார் சந்நிதி, சிதம்பர லிங்கேசுவரர் சந்நிதி ஆகியவற்றைக் காணலாம்.

இப்பிரகாரத்தில் உள் மதிற் சுவர்களில் ஏராளமான பழமையான கல்வெட்டுகள் காணப் பெறும்.

ஸ்ரீ அண்ணாமலைப்பெருமான் திருச்சந் நிதியின் பிரதான வாயிலில் உள்ள ஸ்ரீஅதிகார நந்தீஸ்வரரைத் தரிசித்து உள்ளே சென்றால் ஆங்கு இரண்டாம் பிரகாரத்தில் சிவசேத்திரத் திற்குரிய சகல மூலவர்களும், உத்ஸவமூர்த்தி களும், சமயாசாரியர்களும், நாயன்மார்களும், ஸ்ரீ ருக்மிணி சத்யபாமா சமேத ஸ்ரீ வேணு கோபால ஸ்வாமியும் காட்சியளிப்பர்.

இதன் மேல்பத்தியான முதற் பிராகாரத் தில் ஸ்ரீ தெட்சிணாமூர்த்தியும், சண்டிகேசுவர ரும் விளங்குவர்.

இருதய ஸ்தானமாக விளங்கும் கர்ப்பக் கிருஹத்தில் ஸ்ரீ அண்ணாமலைப் பெருமான் லிங்காகார வடிவத்தில் அருட்காட்சியளிக் கின்றார்.

இரண்டாம் பிரகாரத்தில் வடதிசையில் உள்ள வைகுண்ட வாயில் வழியாகத்தேவியின் திருச்சந்நிதி சேரலாம். சந்நிதி முன்னுள்ள துவஸ்தம்ப மண்டபத்தில் நவக்கிரகமூர்த்திகள் விளங்குவர்.

தேவி சந்நிதியில் உள்ள மகா மண்டபத் தூண்களில் அஷ்ட லட்சுமிகள், ருத்ர துர்க்கை, மஹா சக்தி, மஹா சரஸ்வதி, சித்தி விநாயகர், கார்த்திகேயர், காலாந்தகர், வீணாதரர், வீர பத்திரர் ஆகியோர் கண்கொள்ளாக் கலைத் திறத்துடன் காணப்பெறுவர்.

கர்ப்பக்கிரஹத்தைச் சுற்றிய பிராகாரத் தில், ஸ்ரீ பராசத்தியம்மன், பரிவார மூர்த்தி கள், கண்டசத்தி ஆகியவர் காட்சியளிப்பர். ஸ்ரீபராசத்தியம்மன் சந்நிதியின் வடபுறத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் அருளிய ''திருவெம்பாவை''ப் பாடல்கள் சலவைக் கல்லில் பொறிக்கப் பெற்றுப் பதிக்கப் பெற் றுள்ளன.

கர்ப்பக்கிருகத்தில் திரிபுவனேசுவரியான தேவி உண்ணாமுலை, திவ்ய மங்கள ஸ்வரூபி யாகப் பேரெழிலுடன் பிரகாசிக்கின்றாள்.

—————

## தெய்வம் பொறுக்கும் செயலாமோ?

சாதி இரண்டலால் வேறுளதோ—ஔவைத்
தாயின் உரையும் மறந்தீரோ
ஆதி இறைவன் வகுத்ததுவோ—மக்கள்
ஆக்கிய கற்பனை தான்இதுவோ ?

நாயனார் வந்த திருக்குலத்தை—உயர்
நந்தனார் வந்த பெருங்குலத்தைத்
தீய குலமெனத் தள்ளுவரேல்—அது
தெய்வம் பொறுக்கும் செயலாமோ?

—கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

# திருவிழாக்களின் உண்மை விளக்கம்

R. பஞ்சநதம், திருச்சி

''உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன், அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்''

(பெரியபுராணம்)

ஆதியந்தங் கடந்த பரம்பொருளாகிய இறைவன் உலகத்திலுள்ள பல உயிர்களுக்கும் அருள் செய்யும்வண்ணம் தன் கடந்த அருவநிலையிலிருந்து இறங்கி இப்பூவுலகில் ஆங்காங்குள்ள பல தலங்களில் அருவுருவத் திருமேனியான சிலலிங்க வடிவங் கொண்டும், உருவத் திருமேனியான பல மூர்த்திகளின் வடிவங் கொண்டும் எழுந்தருளியிருந்து அன்புடன் வழிபடும் அடியார்களுக்குஅருள் செய்து வருகிறான். கோயிலில் எழுந்தருளியுள்ள மூலப்பெருமானுக்கும் மற்ற மூர்த்திகளுக்கும் நித்திய வழிபாடாகிய பூசனைகளும், திருவிழாக்களாகிய சிறப்பு வழிபாடும் நடைபெற்று வருகின்றன. தினப்பூஜையைப் பூசனை என்றும், நித்தியம் என்றும், திருவிழாக்களைச் சிறப்பு என்றும், நைமித்திகம் என்றும் கூறுவர் ஆன்றோர். ''சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல்' என்று வள்ளுவரும் கூறியுள்ளார். நித்திய பூஜையில் ஏற்படும் குறைகளைப் போக்கவே நைமித்திகங்களாகிய திருவிழாக்கள் ஏற்படுத்தப் பெற்றன.

திருவிழா-மஹோத்ஸவம் என்பன ஒரே பொருளைத் தரும் சொற்கள். திருவிழாக் காலங்களில் சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் (சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரம், திரோபவம், அனுக்கிரகம்) என்னும் ஐந்து தொழில்களை—பஞ்சகிருத்தியங்களைத் தம் பொருட்டில்லாமல் உயிர்களின் பொருட்டேநடத்தியருளுகின்றான். மஹோத்சவம் என்ற சொல்லுக்கு மக-பெரிய, உத்-உயர்வான, ஸவ-சிருஷ்டி முதலிய காரியங்கள் எனப் பிரித்து, திருவிழாவானது ஐம்பெரும் தொழில்களை அறிவுறுத்தும் குறியாகும் என்பர் ஆன்றோர். சிறப்பு நூல்களாகிய காரணாகமம், காமிகாகமம், வாதுளாகமம் முதலிய ஆகமங்களில் ஒவ்வொன்றைப் பின்பற்றி ஒவ்வோர் கோயிலில் ஒவ்வோர் விதமாகத் திருவிழாக்கள் பத்து நாட்களிலும், அதற்கு மேற்பட்ட நாட்களிலும் நடந்து வருகின்றன. திருவிழா நாட்களில் கொடியேற்றம் முதல் கொடியிறக்கம் வரையில் உற்சவ மூர்த்திகளில் சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் முதலிய மூர்த்திகள் பற்பல வாகனங்களில் அமர்ந்து வீதிகளில் உலாவந்து காட்சிதருவர். கோயிலுக்கு வர இயலாதவர்களும் இருந்த இடத்திலிருந்தே மூர்த்திகளைத் தரிசிப்பர்.

பெறுதற்கருமையான மனிதப் பிறவி நமக்கு வாய்ப்பாகக் கிடைத்தது. ''வாய்த்தது நந்தமக்கீதோர் பிறவி மதித்திடுமின்'' என்று நாவரசர் கூறுகிறார். ''இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ'' என்கிறார் மற்றொருவர். இந்த மனிதப் பிறப்பில் அடையவேண்டிய முக்கியமான இரண்டு பயன்களைப் பற்றிச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். ஒன்று சிவனடியார்களுக்கு அமுதளித்தல் மற்றொன்று, பெருமானுக்கு நடைபெறும் திருவிழாக்களைக் கண்டு தரிசித்தல்.

''மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு
கண்டார்தல்
உண்மையா மெனின் உலகர் முன்வருகென
உரைப்பர்

இப்பாடல், திருஞான சம்பந்தர் திருமயிலையில் எலும்பைப் பெண்ணாக்கிய பூம்பாவைப் பதிகத்தின் சாரமாகும். இதில் பெருமானுக்கு நடைபெறும் திருவிழாக்களைக் கண்டு அனுபவித்தலை ஓர் முக்கிய பயனாக வற்புறுத்துகிறார். பூம்பாவைப் பதிகத்தின் ஒவ்வோர் பாடலிலும் ஒவ்வோர் திருவிழாவைத் திருஞானசம்பந்தர் சுட்டிக் காட்டுகிறார். 'ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்—தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்' முதலியன. மேலும் ''மானுடப்பிறவி தானும் வகுத்தது மனவாக்காயம் ஆனிடத்தைந்து மாடும் அரன்பணிக்காக அன்றோ'' என்று சிவஞான சித்தியார் என்னும் நூல் கூறுகிறது.

திருவிழா தொடங்குவதற்கு முன்தினம் சுத்தமான புற்றுமண் எடுத்து வந்து நவதானியங்களை முளைக்க வைத்துக் கொடியேற்றித் தினந்தோறும் காலை மாலை நேரங்களில் நெய், சமித்து முதலியன கொண்டு யாகம் செய்து பல வாகனங்களில் பஞ்சமூர்த்திகளையும் எழுந்தருளச் செய்வர்.

திருவிழாக்களின் சடங்குகளுக்கும், பல வாகனங்களில் மூர்த்திகள் எழுந்தருளி வருவதற்கும் பற்பல தத்துவங்களை ஆங்காங்கு பல நூல்களில்

## ஆலய நிர்வாக அதிகாரிகளின் கவனத்திற்கு

உங்கள் நிர்வாகத்திலுள்ள ஆலயங்களின் சிறப்பை அழகிய எளிய நடையில் ''திருக்கோயில்'' இதழுக்கு எழுதி அனுப்புங்கள். அவற்றிற்குப் பொருத்தமான ஓவியங்களையும் புகைப்படங்களையும் அச்சுக் கட்டைகளையும் அனுப்பி வைத்தல் அவசியம். அவை உடன் 'திருக்கோயில்' இதழில் வெளியிடப்படும். இவ்வகையில் எல்லா நிர்வாக அதிகாரிகளும் சிறந்த ஒத்துழைப்பைத் தருமாறு வேண்டுகிறோம். (தல புராணங்களையும் அனுப்பலாம்.)

ஆன்றோர் கூறியுள்ளனர். அவைகளைத் தழுவிச் சில உண்மைகள் கோயிலுக்கு வருவோர் தெரிந்து கொள்ளும் வண்ணம் சுருக்கமாகக் கூறப்படும்.

கொடியேற்றத்திற்கு முன்னாளில் புற்றுமண் எடுத்து வந்து நவதானியங்களைத் தெளித்து முளைக்க வைக்கப்படும். மண்ணெடுத்தலுக்கு ம்ருத் சங்கரஹணம் என்றும், முளை தெளித்தலுக்கு அங்குரார்ப்பணம் என்றும் பெயர்.

**கொடியேற்றம்**

(*துவஜாரோகணம்*) ரிஷபத்தின் (காளை) வடிவம் எழுதப் பெற்ற படத்தை-கொடியைக் கொடிமரத்தில் கயிறு கொண்டு மேலே ஏற்றுவது. கொடி, தர்மத்தின் வடிவமாகவும், ஆத்மாவின் வடிவமாகவும், கொடி மரம் பதியின் வடிவமாகவும், கயிறு பாசத்தின் வடிவமாகவும் கூறப்படும். தர்மத்தையும், உயிர்களையும் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு உயர்த்துவது. மும்மலங்களில் கிடந்துழலும் உயிர்களைக் கீழ்நிலையிலிருந்து மேல் நிலைக்கு ஏற்றுதல் என்பர்.

''திரிமலத்தே குளிக்கும் உயிர் அருள் கூடும்படி
கொடி கட்டினனே''—(கொடிக்கவி)

''ஊர்தி வால்வெள்ளேறே சிறந்த சீர்கெழு
கொடியும் அவ்வேறென்ப''—(புறநானூறு)

இவ்வாறே முருகன் கோயிலில் சேவற்கொடியும் திருமால் கோயிலில் கருடக்கொடியும் ஏற்றப்படும்.

**கற்பக விருட்சம்**

தேவலோகத்திலுள்ள ஐந்து மரங்களில் ஒன்று. நினைத்தவற்றைத் தரக்கூடியது. அம்மரத்தின் அடியில் பெருமான் அமர்ந்து காட்சி தருவர். கற்பகமரம் போன்று பெருமானும், அடியார்கள் நினைத்தவற்றை அருள்வன் என்பது குறிப்பு. தேவலோகஞ் செல்லாமல் இருந்த இடத்தில் கிடைக்கும் படியான பேறு,


''கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக்
கண்ணாரக் கண்டேன் நானே
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்''
—அப்பர்

''கற்றவர்விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை''
(திருவிசைப்பா)

**பூதவாகனம்**

நிலம், நீர், நெருப்பு, காற்று, விசும்பு என்னும் ஐந்து பூதப் பொருள்களாகவும், ஐம்பூதங்களின் பரிணாம உருவான உடலை இயக்குகின்றவனாகவும், காயத்தை ஆரோகணிப்பவனாகவும் இறைவன் விளங்குகின்றான் என்பதை உணர்த்தும் இறைவனுக்குப் பல பூதகணங்களும் உண்டு.

''இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமா யட்டமூர்த்தியாகி
பெருநலமுங் குற்றமும் பெண்ணும்ஆணும்
பிறருருவும் தம்முருவுந் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே''.



பூதவாகனத்தில் மயிலை அருள்மிகு வெள்ளீஸ்வரர் பவனிவரும் திருக்காட்சி

''ஊனாகி உயிராகி அதனுள் நின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய்
நின்றாய்
நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டாநின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றியூராய்
திருவானைக் காவிலுள்ள சிவனேஞானம்
ஆனாயுன் பொற்பாதம் அடையப்பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என் செய்
கேனே''
—திருநாவுக்கரசர்

**கைலாச வாகனம்**

சிவபெருமான் உறையுமிடம் திருக் கைலாசம். மனம் வாக்கு காயங்களுக்கு அப்பாற்பட்டது. கைலையின் பெருமைகளைப் பெரிய புராணத்தில் சேக்கிழார் அழகாகக் கூறியுள்ளார்.

''அண்ணல் வீற்றிருக்கப் பெற்றதாதலின்
நண்ணும் மூன்றுலகும் நான்மறைகளும்
எண்ணில் மாதவஞ் செய்யவந்தெய்திய
புண்ணியம் திரண்டுள்ளது போல்வது''
—பெரியபுராணம்

திருநாவுக்கரசரும் வடகைலையைப் பார்க்கச் சென்று முடியாமல் பெருமானருளால் ஓர் குளத்

தில் மூழ்கித் திருவையாற்றில் தோன்றிக் கைலாச காட்சியை—உயிர்களெல்லாம் சக்தியும் சிவமுமாக விளங்குவதைக் கண்டார். தென்னாட்டில் திருக் காளத்தி - திரிசிராமலை - திருக்கோணமலை முத லிய தலங்கள் தென் கைலாயத் தலங்களாகவிளங் குகின்றன. இத்தகைய பெருமைகளையுடைய கைலாயமலையை - ஆணவமே உருவான இராவ ணன் தூக்க முயன்றான். சிவபெருமான் தனது பாதத்தின் மெல்விரலால் அழுத்தவே, பல காலம் வருந்திக் கதறி அரற்றிப் பின்னர் சாமகானம் பாடிச் சிவபெருமானை மகிழ்வித்துப் பல பேறு களைப் பெற்றான். இதனைத் திருநாவுக்கரசர் தாம்பாடிய ஒவ்வோர் பதிகத்தின் இறுதிப் பாட் டில் இராவணனுக்கு அருள் செய்த முறையைக் கூறியுள்ளார். கொடியவராயினும் தன்னை அன் புடன் வழிபட்டால் நலம் பெறுவர் என்பது குறிப்பு.

''விலங்க லெடுத்துகந்த வெற்றியானை
விறலழித்து மெய்ந்நரம்பால் கீதங்கேட்
டன்று
இலங்கு சுடர்வாள் கொடுத்தார்போலும்
இன்னம்பர்தான் தோன்றி யீசனாரே'
(திருநாவுக்கரசர்)

கைலாய மலையைக் குறித்துத் திருநாவுக்கர சர் தனித்திருத் தாண்டகங்களும் பாடியிருக்கிறார்.

''கயிலை மலையானே போற்றி போற்றி''

**ரிஷப வாகனம்**

சிவபெருமான் ரிஷபத்தின்மேல்—காளையின் மேல் அமர்ந்து காட்சி தருவர். சர்வ சம்மார காலத்தில் எல்லாப் பொருள்களும் அழிய, தரும தேவதை —அறக்கடவுள் தான் அழியாதிருக்கும் பொருட்டுத் தூய வெண்மையான காளையின் உரு வெடுத்துப் பெருமானிடம் தன்னை வாகனமாக ஏற்றுக்கொள்ள வேண்டியது. அவ்வாறே பெரு மானும் காளையை வாகனமாகக் கொண்டார். காளையின் மேல் வருவது தருமத்தின் அடிப்படை யில் பெருமான் விளங்குகிறான் என்பதைக் குறிக் கும். அருள் பெற்ற ஆன்மாவுக்கறிகுறியாகவும் ரிஷபம் விளங்குகிறது. அறவடிவான ரிஷபம் பெரு மானுக்கு வாகனமாகவும், கொடியாகவும் விளங் குகிறது. மேலும் பெருமானை நோக்கியிருக்கும் நந்தியும் காளைவடிவம். சுற்றுமதிலில் உள்ள ரிஷ பங்களெல்லாம் பல அறங்களின் நடுவில் பெரு மான் விளங்குவதைக் குறிக்கும். அறவடி வான காளை, கிருதயுகம் முதலிய நான்கு யுகங்களிலும் முறையே, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்றுமாகிய கால்களையூன்றித் தருமத்தின் தன்மையைக் காட் டுவதாகவும் ஆன்றோர் கூறுவர். அடியார்களுக்கு அருள் செய்யும் போதெல்லாம் பெருமான், அம் மையப்பனாக விடையின்மேல் காட்சிதருவன். இத் தகைய பெருமைகளைக் கொண்டிருப்பதால் திரு விழாக்களில் ஐந்தாம் நாளில் ரிஷப வாகனக் காட்சி சிறப்பாய்ப் போற்றப்படுகிறது.

''மட்டுவார் குழலாளொடு மால்விடை
இட்டமாவுகந்தேறும் இறைவனார்
கட்டுநீத்தவர்க் கின்னருளே செயும்
சிட்டர் போலும் சிராப்பள்ளிச் செல்வரே''
—(திருநாவுக்கரசர்)

''மாட்டூர் அறவா மறவாதுன்னைப் பாடப்
பணியாயே''
—(சுந்தரர்)

''நடைமலிந்த விடையோடு கொடியுந்
தோன்றும்''
—(அப்பர்)

**யானை வாகனம்**

ஆணவத்தின் குறியாகவும், அடக்கமுடியாத ஐந்து இந்திரியங்களின் (மெய், வாய், கண், மூக்கு செவி) குறியாகவும் கூறுவர் ஆன்றோர். பெரு மான் யானைமீது அமர்ந்து வருவது ஆணவத்தை யும், இந்திரியங்களையும் அருளென்னும் அங்குசத் தால் அடக்குவதைக் குறிக்கும் என்பர். பெருமான் யானைத் தோலையும் மேலே போர்த்துள்ளான்.

''மன்றவர் அடியார்க் கென்றும் வழிப்பகை
களிறேயன்றோ'
(பெரியபுராணம்)

''உரன் என்னும் தோட்டியான் ஓரைந்துங்
காப்பான்
வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து''
(திருக்குறள்)

''இந்திரியக் குஞ்சரத்தை ஞான இருங்கயிற்
றால்
சிந்தனைத் தூண் பூட்டிச் சேர்த்தியே-
—பந்திப்பர்
இம்மைப்புகழும் இனிச்செல் கதிப்பயனும்
தம்மைத் தலைப்படுத்து வார்''
(அறநெறிச்சாரம்)

மேலும் யானை, தன் பாகன் காலால் ஏவுந் தொழில்களைத் தலையால் அறிந்து செய்யும். அதுபோல் உயிர்களுக்குப் பரிபாகனாயுள்ள இறை வன், திருவடி ஞானத்தால் அறிவிக்கும் குறிப்பு களை அறிந்து பணி செய்ய வேண்டும் என்ற குறிப் பையும் உணர்த்துவதாகக் கூறுவர். 'காலால்இட்ட வேலையைத் தலையாற் செய்வது' என்னும் பழ மொழியும் வழங்குகிறது.

''கருத்தழி கடமிறங்குகவுட்கரி வலிந்துபற்றி
திருந்துபு தன்காலேவுஞ் செயல் செயக்
கொள்வதன்றி
ஒருத்தர் வந்தறிந்து தானே உறவு கொண்
டிடுவதுண்டோ

## எப்படி வணங்க வேண்டும் ?

அட்டாங்க வணக்கம்: உடலிலுள்ள தலை, இரண்டு கைகள், மோவாய், கால்கள் இரண்டு, காதுகள் இரண்டு ஆக எட்டு அங்கங்களும் நிலத்தில் படுமாறு வணங்குவது அட்டாங்க வணக்கமாகும். ஆண்கள் வணங்கும்போது இவ்வாறு வணங்குதல் சிறப்பு.

பஞ்சாங்க வணக்கம்: தலை, கைகள் இரண்டு, முழங்கால்கள் இரண்டு ஆகிய ஐந்து அங்கங்களும் நிலத்தில் படுமாறு வணங்குவது பஞ்சாங்க வணக்கமாகும். பெண்கள் வணங்கும்போது இவ்வாறு வணங்குவதே சிறப்பு.

தெரிந்திடி லடியனேனின் திருவடிக் கத்
திறத்தேன்''
(பிரபுலிங்கலீலை)

**திருக்கல்யாணம்**

உலகத்துயிர்கள் இன்பவாழ்க்கை நடத்த வேண்டி, சிற்றின்பத்தைக் கொண்டே பேரின்பத்தையடைய வேண்டி, உயிர்களுக்குப் போகத்தை அருளவேண்டி யாவற்றையுங் கடந்த பெருமானுக்குத் திருமண விழா நடத்தப்பெறுகிறது. சிவமாகிய பரம்பொருள் சக்தியுடன் சேராவிடில் உலகில் ஒன்றும் நடைபெறாது. ''சிவமெனும் பொருளும் ஆதி சத்தியொடு சேரின் எத்தொழிலும் வல்லதாம் இவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிதரிதெனா மறை உரைக்கும்'' என்று ஆன்றோர் கூறினர். உயிர்கள் சக்தியும் சிவமுமாக விளங்குவதைத் திருநாவுக்கரசர் திருவையாற்றில் கண்டார்.

ஒவ்வோராண்டிலும் பெருமானுக்குத் தவறாமல் கல்யாணம் நடந்தபோதிலும் சிவன் பிரமச்சாரியென்றும், சக்தி கன்னிகையென்றும் அழைக்கப்படுகிறார்கள்.

''போகியாயிருந்துயிர்க்குப் போகத்தைப்புரிதல்
ஓரார்
யோகியாய் யோகமுத்தி உதவுதல் அதுவும்
ஓரார்'
-சிவஞானசித்தியார்

''தென்பாலுகந்தாடும் தில்லைச்சிற்றம் பலவன்
பெண்பாலுகந்தான் பெரும்பித்தன்
காணேடீ,
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்
தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ
—திருவாசகம்


மேலும் ''உயிரெலாம் கன்னி'' என்றபடி உயிர்கள் பெண்களாகச் சொல்லப்படும். ஓர் கொடி கொழு கொம்பைத் தழுவி நிற்பதைப்போல், உயிர்களும் ஆன்ம நாயகனான பரமனைச் சேரவேண்டும். பக்தியில் பக்குவப் பட்ட உயிர்களாகிய பெண்களைப் பெருமான் ஏற்றுக் கொண்டு திருவருள் செய்கிறான் என்பதையும் திருமணச் சடங்கு அறிவிக்கிறது.

''காவிக்கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்
தருள்வாய்
தாவிக்குல மயில்வாகனனே, துணைஏதுமின்றி
தாவிப்படரக் கொழுகொம்பிலாத தனிக்
கொடிபோல்
பாவித் தனிமனம் தள்ளாடிவாடிப் பதைக்
கின்றதே''
(கந்தர் அலங்காரம்)

''கொம்பரில்லாத கொடிபோல் அலமந்தனள்
கோமளமே
வெம்புகின்றேனை விடுதி கண்டாய்''
(திருவாசகம்)

**நந்தி வாகனம்**

அதிகார நந்தி என்றுங்கூறுவர். இவர் நான்கு தோளும், மான், மழு, திரிநேத்திரம் முதலிய அடையாளங்களையுடைய சிவசொரூபப் பதவி பெற்ற விஞ்ஞானகலருள் முதல்வர். திருக்கைலையில் வாயில்காவலராக விளங்குபவர். நந்தி தேவரின் மூலமே சிவதரிசனம் செய்யவேண்டும். கையில் பிரம்புகொண்டு கூட்டத்தை விலக்குவார்.



நந்திவாகனத்தில் மயிலை அருள்மிகு வெள்ளீஸ்வரர்
பவனிவரும் திருக்காட்சி

''வந்திறையடியிற்றாழும் வானவர் மகுடகோடி
பந்தியின் மணிகள்சிந்த வேத்திரப்படையாற்
றாக்கி
அந்தியும்பகலுந் தொண்டர் அலகிடுங்
குப்பையாக்கு
நந்தியெம்பெருமான் பாத நகைமலர் முடி
மேல்வைப்பாம்''
—(திருவிளையாடற்புராணம்)

**குதிரை வாகனம்**

விலங்குகளில் வேகமுடையது குதிரை. யந்திரங்களுக்கும் குதிரை வேகம் என்று சொல்லப்படும். மனம்அதிவேகமுடையதாதலால் குதிரைக்குஇணையாகக் கூறுவர். குதிரையின் வேகத்தை அடக்குவது போல மனக் குதிரையையும் அடக்கவேண்டும். இக்காலம் யந்திர காலம். யந்திரக் கருவிகள் வேகமாய் செல்வதுபோல மனமும் வேகமாய்ச் செல்கிறது. பெருமான் அவ்வேகத்தை அடக்குகிறான். ஞானிகளும் மனதை அடக்குகின்றனர். ''வாகனமாகிய மனப்பரியேறிய மாதவத்தோர்'' என்று சான்றோர்கள் போற்றப்படுகின்றனர். குதிரை வாகனத்தன்று வேடர்பறி உற்சவம் நடத்தப்படுகிறது. வேடர்கள் நகைகளைப் பறிப்பதுபோல ஐம்புல வேடர்கள் மனதைப் பறித்துக்கொள்கிறார்கள். அவ்விதம் பறி போகாமல் பெருமான் காக்கிறான்.

''வேகங்கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க''.
—(திருவாசகம்)

மேலும் இடைகலை, பிங்கலை, சுழுமுனை வாயிலாகச் சுவாசத்தை நிறுத்திச் செய்யும் பிராணாயாமத்தைக் குறிக்கும் என்றும் கூறுவர். சேரமான் பெருமான் நாயனார் குதிரை மேல் ஏறிச்சென்று சுந்தரருடன் கைலாயம் அடைந்தார் என்பது வரலாறு.

## திருத்தேர்

சிவபெருமான் முப்புரத்தை எரித்தபோது தேரில் சென்று அசுரர்களைக்கொன்று தேவர்களை காத்தார் என்பது வரலாறு. தேவர் எல்லோரும் தேரின் பல அங்கங்களாய் நின்று தொண்டு புரிந்தனர். பூமியைத் தேராகவும், சூரிய சந்திரர்களைச் சக்கரமாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும் கொண்டான். சிவபெருமான் பல போர்க் கருவிகளுடன் சென்று முப்புரங்களையும் சிரித் தெரித்து தேவர்களையும் முனிவர்களையும் சாப்



பாற்றினார். அல்லோரைப் போக்கி நல்லோரைக் காக்குந் தன்மையைத் தேர்விழா குறிக்கும்.

> ''வரியரவு நாணாக்கோத்து நினையாதார் புர
> மெரிய
> வளைத்த மேருச்சிலையானை—(அப்பர்)

இனிச் சிவபெருமான் உட்பகையாகிய ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையும் சுட்டெரித்ததாகவும் கூறுவர்.

> ''அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்
> முப்புரஞ் செற்றனன் என்பர்கள்மூடர்கள்
> முப்புரமாவது மும்மலகாரியம்
> அப்புரம் எய்தமை யாரறிவாரே''
> —(திருமந்திரம்).

எனவே மும்மலச் சேட்டையினின்றும் விடுவித்து ஆன்மாக்களைக் காப்பாற்றுதலையும் இவ்விழா குறிப்பிக்கும்.

## நடராசர் புறப்பாடு

திருவிழாக்களில் படைப்பு முதலிய ஐந்து தொழில்கள் நடைபெறுவதைக் குறிக்க நடராஜபெருமான் (ஆடல் வல்லார்) எழுந்தருள்வார். இவர் திருவுருவத்தில் ஐந்து தொழில்களைக் குறிக்கும் அடையாளங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். படைப்பு—உடுக்கையிலும், காத்தல்-அமைந்த கரத்திலும், அழித்தல்-அக்கினியிலும், மறைத்தல்-ஊன்றிய பாதத்திலும், அருளல்-தூக்கிய திருவடியிலும் அமைந்திருப்பதைக் காணலாம்.

> ''தோற்றம் துடியதனில் தோயும் திதி
> அமைப்பில்
> சாற்றிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமா
> ஊன்று மலர்ப்பதத்தில் ஊற்றதிரோதம்முத்தி
> நான்ற மலர்ப்பதத்தே நாடு''
> —உண்மைவிளக்கம்

## தீர்த்தவாரி

பரிசுத்தப்படுவது; உத்சவரோ, அஸ்திர தேவரோ ஆறு அல்லது திருக்குளத்திற்குச் சென்று தீர்த்தங் கொடுக்கும் அபிஷேகம் நடைபெறும். தீர்த்தவாரியின் போது எல்லோரும் சென்று நீராடி புறத்தும் அகத்தும் பரிசுத்தம் அடையச் செய்வர். தீர்த்தன் என்று பெருமானும் வழங்கப்படுகிறான்.

> ''மாதேவா மாதேவா என்று வாழ்த்தி
> நீராண்ட புரோதாயம் ஆடப்பெற்றோம்''
> (திருநாவுக்கரசர்)

(புரோதாயம்-சுத்திக்காகச் செய்யும் ஸ்நான விசேஷம்)

## தெப்ப விழா

அழகாய் அலங்கரிக்கப்பெற்ற தெப்பத்தில் பெருமான் தேவியுடன் எழுந்தருளிக் குளத்தில் பலமுறை சுற்றிவந்தும் மைய மண்டபத்திற்குச் சென்றும் காட்சி தருவன். தெப்பத்தில் தேவார பாராயணமும் இன்னிசைகளும் நிகழும். காண்போர் கண்குளிர உள்ளங்குளிரக் கண்டு தரிசித்து மகிழ்வர்.

பிறவிக்கடலில் வீழ்ந்து கரைகாணாது உழலும் உயிர்களை அருளாகிய தெப்பத்தில் ஏற்றி முத்தியாகிய கரையில் பெருமான் சேர்க்கிறான் என்பதை அறிவிப்பதாக ஆன்றோர் கூறுவர். பிறவிக் கடலில் இக்கரையிலிருந்து பக்தி என்னும் புணைகொண்டு பரமனைச் சாரவேண்டும் என்பதைக் குறிப்பதாகவும் கூறுவர். பிரளய காலத்தில் அடியார்களைக் காப்பதற்குப் பெருமான் தோணியப்பராகத் தோணியுடன் சிரபுரமாகிய சீர்காழிப் பதியில் வீற்றிருக்கிறான்.

> ''உருமாறிப் பிறப்பென்னும் கடல்வீழ்ந்து
> கரைகாணாது
> உழலும் மாக்கள்
> கருமாறி அருட்தெப்பம் தனிலேற்றி முத்திய
> தாம்
> கரையிலேற்றும்
> பெருமான்தாம் என்பதனை உலகுணர்த்த
> ஆண்டுதோறும்
> பிறங்கும் தெப்பத்
> திருநாளைக் கொண்டசெயல் கண்டுணர்ந்து
> வாழ்மின்கள்
> சிறந்துநாளும்—''(பழம்பாடல்)

''கத்தித் திரிபிறவிச் சாகரத்துள் ஆழாமே
பத்தித் தனித்தெப்பம் பார்வாழத் தந்தபிரான்''
''பிறவினும் பொல்லாப் பெருங் கடலைநீந்த
துறவியெனும் தோற்றோணி கண்டீர்—நிறை
யுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்''
—(நம்பியாண்டார்நம்பி)

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடி சேராதார்'' —(திருக்குறள்)

பிட்சாடனர் புறப்பாடு

பலிதேர் பகவன், பலிகொளும் பரமன் என்றும், இரவாடும் பெருமான் என்றும், உத்தமர் என்றும் அழைக்கப் பெறுவர். தாருகவனத்திலுள்ள முனிவர்களுக்குச் சிவபக்தியை உண்டாக்கக் கருதி பெருமான் பிட்சாடன வடிவத்துடன் சென்றான். முனிவர்கள் பல பொருள்களை யாகத்தின் மூலம் உண்டாக்கிப் பெருமான் மீது ஏவினர். பெருமான் அவைகளை அடக்கியாண்டு சிலவற்றை அணிந்து கொண்டான். முடிவில் முனிவர்கள் பெருமானிடம் பக்திபூண்டு வழிபட்டனர். பிட்சாடனர் வடிவத்தில் மானுக்குப் புல் அளிப்பதை ஆன்மாவுக்கு ஞானோபதேசம் செய்யும் ஞானமுத்திரையாகக் கூறுவர். பெருமான் அடியார்களுடைய, அன்புப் பலியை ஏற்கின்றான் என்பது குறிப்பு. பிட்சாண்டார் கோயில் என்ற ஓர் தலமும் திருச்சி ஜில்லாவில் உள்ளது.

''காரார் கொன்றைக் கண்ணிசூடிக்
கபாலங் கையேந்திக் கணங்கள் பாட
ஊரூரிடும் பிச்சைகொண் டுழலும்
உத்தமராய் நின்ற ஒருவனார்''—(அப்பர்)

முடிவுரை

இவ்வெளியீட்டில் குறிப்பிட்டுள்ள திருவிழாக்கள் பெரும்பாலும் திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலிலும், பிற கோயில்களிலும் நடைபெறுவதைத் தழுவி எழுதப் பட்டன. இதில் கூறப்பெற்ற விளக்கங்களே முடிந்த முடிபு என்று கூறுவதற்கில்லை! இவைகளும் ஒருவாறு பொருந்தக் கூடும் என்ற எண்ணத்தில் முன்னோர் கருத்துக்களைத் தழுவி எழுதப்பட்டன. இவற்றின் விரிவுகளைச் சிவாகமங்களிலும் அகோர சிவாச்சாரியார் இயற்றிய கிரியாக்கிரம ஜோதி முதலிய நூல்களிலும் காண்க.

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே,
சூழ்க வையகமும் துயர் தீர்கவே''
—(திருஞானசம்பந்தர்)

''தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''.

## இறைவன் தாயான வரலாறு

காவிரிப் பூம்பட்டினத்தில் இரத்தின குப்தன் என்ற வணிகன், இறையருளால் ஓர் புதல்வியைப் பெற்று இரத்தினாவதி எனப் பெயரிட்டு சீரும் சிறப்புமாய் வளர்த்து வந்தான். இரத்தினாவதிக்கு திருமணப்பருவம் வர, அவளை திரிசிராமலையில் வாழும் தனகுப்தனுக்கு மணம் செய்து கொடுத்தான்.

திரிசிராமலை செவ்வந்தி நாதரை நாள் தவறாமல் வணங்கி வழிபட்டு வந்த இரத்தினாவதி கர்ப்பவதி ஆனாள். மகப்பேறு காலம் நெருங்கிக் கொண்டிருப்பதை, அவள் தன் தாய்க்குத் தெரிவிக்க, தாயும் திரிசிராமலை நோக்கிப் புறப்பட்டு வந்து கொண்டிருந்தாள். ஆனால் காவிரியாற்றில் பெருக்கெடுத்தோடிய வெள்ளம், நேரத்தில் மகளுடைய வீடு வந்து சேரமுடியாமல் தாயைத் தடுத்துவிட்டது.

பிரசவ வேதனையால் துடிதுடித்துக் கொண்டிருந்த இரத்தினாவதி, செவ்வந்தி நாதரைத் துதித்தபடியே இருக்க, செவ்வந்திநாதரே அவளுடைய தாய்வடிவில் வந்து வேண்டிய சிகிச்சைகள் செய்து பிரவசத்தை அருகிலிருந்து சுகப்பிரசவம் ஆக்கினார். பிறந்த ஆண் குழந்தையை இரத்தினாவதி தன் தெய்வத் தாயுடன் கொஞ்சிக் கொண்டிருக்க, அவளுடைய உண்மையான தாயும் வீடு வந்து சேர்ந்தாள்.

இருதாயருள் யார் உண்மைத்தாய் என தெரியாமல் இரத்தினாவதி விழிக்க, தாயாக வந்த செவ்வந்தி நாதர் உடனே மறைந்து ஆகாயத்தில் இடப வாகனத்தில் காட்சி கொடுத்தார் திரிசிராமலை செவ்வந்திநாதர், தாயுமான சுவாமிகள் ஆன இந்தத் தெய்வீக வரலாறு, திக்கற்றவர்க்குத் தெய்வம் துணையாவதை உள்ளம் தித்திக்க எடுத்துரைக்கிறதல்லவா!

# அருவிக்கரை ஆலயம்

## (திருக்குற்றாலம் கோயில் தல வரலாற்றுச் சுருக்கம்)

சி. பாலுபட்டர்

தென்றல் புறப்படும் தென் பொதிகையை தன்னகத்தே கொண்ட திரிகூட மலையில் அமைந்தது திருக்குற்றாலம். தேன் அருவிதிரை எழும்பி வானின் வழி ஒழுகி வற்றாத வட அருவியாக பொங்குமாங்கடலில் சங்கமித்து 'சிவமது கங்கை' யாகப் பேரருவியாக பூவாய்ச் சிதறும் புனித இடம் குற்றாலம். ''உற்றார் யார் உளரோ? உயிர்கொண்டு போகும்போது குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு உற்றார் யார் உளரோ?'' என திருநாவுக்கரசர், இறைவன் குற்றாலநாதரை உற்றாராகப் பேசிய சொற்றவன் குற்றாலநாதர் ஆடல் அமர்ந்த இடம் குற்றாலம்.

'கொம்பார் பூஞ்சோலை குறும்பலா மேவிய கொல்லேற்றண்ணல் நம்பான் அடி பரவும் நான் மறையான்' எனத் திருஞான சம்பந்தரால் தமிழகத்திலேயே தலவிருட்சத்திற்கு (கோயில் புனித மரத்திற்கு) பதிகம் பாடப் பெற்றுள்ள குறும்பலாநாதர் உள்ள இடம் குற்றாலம்.

சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமானும் ''மலைசாரற் குருமணிகள் வெயிலெறிக்கும் குற்றாலம் சென்றடைந்தது'' சேக்கிழார் பெருமானால் கூறப்படுகிறது.

மணிவாசகப் பெருந்தகையார் தம் திருக்கோவையாரில் ''குற்றாலத்து கோலபிண்டி பொழில் வாய் தடவரை வாயல்லதில்லையிப் பூந்தழையே!'' எனக் குற்றாலத்தை சிறப்பிக்கிறார்.

கபிலரும், அருணகிரிநாதரும், பட்டினத்தடிகளும் இக்குற்றாலத்தை தம் கவிதை மலர்களால் போற்றி உள்ளனர். மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயர் என்பவரால் 1718-ல் 'குற்றாலக்குறவஞ்சி' இசைநூல் இயற்றப்பட்டது. இக்குறவஞ்சியை நாட்டிய நாடகமாக்கி நாட்டிய தாரகை ருக்மணிதேவி 1951ல் இத்திருக்கோவிலில் அரங்கேற்றி உள்ளார்.

ஐந்து சபைகளில் ஒன்றாகிய 'சித்ரசபை' யில் கூத்தர் குற்றாலநாதர் திருவாதிரையில் தீர்த்தமாடி தரிசனம் தருவது இத்தலத்திலேதான்.

ஆனந்தபைரவி ராகம் இசைக்க மத்தளம் முழங்க ஆனந்த தாண்டவம் ஆடும் நடராஜப் பெருமானுக்கு 'தாண்டவ தீபாராதனை' எனும் சிறப்புமிகக பூஜை விழாக்காலங்களிலே நடைபெறுவது இத்தலத்திலே தான்.

அருள்தரும் அம்பிகை குழல்வாய்மொழி (வேணுவாக்வாதனி) இறைவனுக்கு வலப்புறம் அழகான மண்டபத்தில் எழுந்தருளி ஐப்பசி பூரத்தில் மணக்கோலம் கொண்டு மகிழ்கிறாள். இறைவி பராசக்தியாக பூரணமேரு ரூபமாக கொலு வீற்றிருப்பதும் இத்தலமே. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு பிறவிஊமைப் பெண்ணை தன் அருளால் பேசவைத்த புனித இடம் இந்த சக்தி பீடம்.

நவராத்திரியில் நவாபரண பூஜைகொண்டு லட்சுமியாய், துர்க்கையாய், காயத்திரியாய் காட்சி கொடுப்பதை காண நம் இரு கண்கள் போதாது. சித்திரை விஷு, ஐப்பசி விஷு, மார்கழி திருவாதிரை ஆக மூன்று உற்சவங்களை கொண்ட இத்தலத்தில் இது தவிர ஆடி அமாவாசையில் தீப உற்சவமும், புரட்டாசியில் நவராத்திரி விழாவும், ஐப்பசி பூரநாளில் கல்யாணக் காட்சியும், கார்த்திகையில் பவித்ர உற்சவமும் தைமக நாளில் தெப்பத்திருவிழாவும் நடைபெறுகின்றன.

ஆதியில் விஷ்ணுதலமாக இருந்த இந்த இடம் அகஸ்திய மகரிஷியால் சிவதலமாக மாற்றப்பட்டதாக சொல்லப்படுகிறது. சைவராகிய

அகத்தியரை கோவிலில் இருந்த சைவரல்லா தோர் உள்ளேவிட மறுக்கவே தாம் வைணவ வேடம் பூண்டு திருமால் முடியில் தம் கை இருத்தி குறுக குறுக எனக் கூற விஷ்ணுவும் சிவனாக ஆனார்.

அகஸ்தியர் கைப்பட்டு அமுக்கப்பட்டதால் இறைவனுக்குத் தலைவலி உண்டாயிற்றாம். எனவே நாள்தோறும் பல மூலிகை கலந்த தைல முழுக்கு செய்யப்படுகிறது. இறைவ னுக்கு சாற்றிய தைல நிர்மால்யத்தை எடுத்து சேகரித்து பொது மக்களுக்கு விற்பனைக்கு வழங்குகின்றனர். இத்தைலம் தேய்த்து குளிப்பதால் தலைவலி கண்நோய்கள் நீங்கும்.

தார். அதன்பின் செம்புலி சின்னணைஞ்சாத் தேவர் அம்பாள் சன்னிதான முகப்பு மண்டபம் கட்டுவித்தார்.

1660-1721ல் பெரியபட்டம் பெரியசாமி செம்புலி சின்னணைஞ்சாத் தேவர், சின்ன பட்டம் ராஜகோபால தேவர் இருவரும் சித்திர சபைக்கு செப்பேடு வேய்ந்தனர்; கொலு மண்டபம், திரிகூட மண்டபம், தேர் மண்டபம் முதலியன செய்து பெருமை பெற்றனர்.

மூன்றாம் பட்டம் காளத்தி தேவர் 'தேர் களை' செய்து அருள்பெற்றார்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

## மூர்த்தி நாயனாரின் கீர்த்தி

நாயன்மார்கள் அறுபத்து மூவரில் ஒருவரே மூர்த்திநாயனார். இவர் நாள்தோறும் மதுரை சோமசுந்தரப் பெருமானுக்குச் சந்தனக் காப்பிடச் சந்தனம் அரைத்துக் கொடுத்துத் திருப்பணி புரிந்தவர். இவர் காலத்தில் மதுரையை வென்று ஆண்ட கரு நாடக தேசத்தைச் சார்ந்த சமணமன்னன் ஒருவன், இவரைச் சமண சமயத்தில் சேர்க்க விரும்பிச் சந்தனக் கட்டைகளையே கிடைக்காதபடி செய்துவிட்டான். மூர்த்தி நாயனார் சிறிதும் மனம் கலங்காமல் பெருமானிடம் சென்று ''சந்தனக் கட்டைக்கு முட்டு வந்தாலும் கைக்கட்டைக்கு முட்டில்லை'' என்று தமது முழங்கையை வைத்து உள்ளெலும்பு கரையும் வரையில் தேய்த்தார். ''வட்டமூ திகழ்பாறையின் வைத்து முழங்கை தேய்த்தார் கட்டும் புறந்தோல் நரம்பென்பு கரைந்து தேய'' என்று சேக் கிழார் இவர் உள்ள உறுதியை உவந்து கூறுவார்.

இந்நாயனாரின் இத்தகு பக்தியை மெச்சி, இறைவர் இவரே மதுரையின் மன்னன் ஆகுமாறு அருள்புரிந்தார். சமணமன்னன் நாடாளும் வாரிசின்றி இறந்துபட பட்டத்து யானை மூர்த்திநாயனாருக்கு மாலை இட்டு, மதுரையை ஆளும் மாமன்னன் ஆக்கியது. இவர் திருநீறே அபிஷேகப் பொருளாகவும், உருத்திராட்சமே ஆபரணமாகவும், சடை முடியே கிரீடமாகவும் கொண்டு அரசாண்டதால் ''மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவரைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

---

கி.பி. 10 நூற்றாண்டில் சோழநாட்டை ஆண்ட பராந்தகசோழன், இதன் பின் வந்த ராஜராஜன் இவர்கள் காலத்தில் முதலில் கோவில் பழுது பார்க்கப்பட்டுள்ளது. இதன் பின் பாண்டியர் காலத்தில் சுந்தரபாண் டியன் சோழநாட்டை வென்ற பின் (1216-1236) ஆலோசனை சபை நிறுவப்பட்டது. அதன்பின் பரவலாக மாறவர்மன் விக்கிரம பாண்டியன், ஜடாவர்ம சுந்தரபாண்டியன் இவர்கள் காலத்திய கல்வெட்டுக்கள் அவர் களது திருப்பணிகளைச் செப்புகிறது.

இதன் பின் 14ஆம் நூற்றாண்டில் நெல்லை மாவட்டம் வடகரை ஆதிக்கம் சொக் கம்பட்டி மன்னர் அநேக திருப்பணிகள் செய்

பிற்காலத்தில் தேவகோட்டை வி. கரு. சித. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும் அவர்களின் குமாரர் காசி விசுவநாதன் செட்டி யார் அவர்களும் அம்பாள் சன்னிதான பளிங்கு மண்டப வேலையை செய்து முடித்தனர்.

1963-ல் இத்திருக்கோவிலுக்கு கும்பாபி சேகம் நடத்தப்பட்டது.

தலம், தீர்த்தம், மூர்த்தி மூன்றினாலும் பெருமை பெற்றுள்ள குற்றாலம் ஓர் ஆன்மீகத் தலம். அத்துடன் அருவியால் ஓர் ஆரோக்கியத் தலம். மூர்த்தியால் அருள்தலம்.

தலம் வருவீர்! வலம் வருவீர்!
வளம்பெறுவீர்!!

# கிருட்டிணன் தூது

டாக்டர் த. அமிர்தலிங்கம்

(முன் தொடர்ச்சி)

கண்ணபெருமான், குந்திதேவியிடம் கர்ணணின் பிறப்புண்மையை உணர்த்தி அவளிடம் கேட்டுப் பெற்று வரவேண்டிய வரம் என்னவென்பதையும் தெரிவித்து மீண்டும் விதுரரின் அரண்மனைக்கே வந்து, கண் அயரலானார். அத்தினாபுரி முழுவதுமே அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த அந்த இரவு நேரத்தில் துரியோதனன் உறங்கவில்லை. அவன் நம்பிக்கைக் குரிய அவன் கூட்டத்தார் ஒருவரும் உறங்கவில்லை. சபா மண்டபத்தில் தந்தை திருதராட்டிரன், ஆருயிர் நண்பன் கர்ணன், மாமா சகுனி மற்றும் தன்னுடன் பிறந்த சகோதரர்கள் தொண்ணூற்று ஒன்பதின்மர்களுடன் வீற்றிருந்த துரியோதனன், தான் எதற்காக எல்லாரையும் அந்த நேரத்தில் அவசர அவசரமாக வரவழைக்க நேர்ந்தது என்பதைக் கூறுவதைப் போல் அனைவரையும் பார்த்து

''பாதவ வனத்திற் போன பாண்டவர் தம்மை
மீண்டுமேதக அழைத்து நாடு வேண்டுமின்
என்று மூட்டும்
யாதவன் தனித்து வந்தான் என்செய்வது
இயம்பும்''

என்று வினவுகிறான்.

''பாண்டவர்கள் தாமாக அவர்கள் இழந்த நாட்டை கேட்கவில்லை. கேட்குமாறு தூண்டி விடுபவன் இடையன் ஆகிய கண்ணன்; அவன் அத்தினாபுரிக்குத் துணிவாக வந்திருக்கிறான்; தனியாக வந்திருக்கிறான். இந்த நேரத்தில் நாம் என்ன செய்யலாம். சொல்லுங்கள்'' என்று துரியோதனன் கேட்கிறான். அவன் வினாவிற்கு விடையை முதலில் அளிப்பவர் அவனுடைய தந்தை திருதராட்டிரர். 'கண்ணன் தனியாக வந்தனன், என்ன செய்யலாம்'' என்று கேள்வியின் அர்த்தம் விளங்காதபடி தான் வினவுகிறான் துரியோதனன். நமக்கு அர்த்தம் விளங்கவில்லை. ஆனால் பாம்பறியும் பாம்பின் கால் அல்லவா? அதிலும் பாம்பைக் கொடியாகவே கொண்டு விளங்குகின்ற திருதராட்டிரனுக்குத் தன்மகன் கேட்ட கேள்வியின்பொருள் விளங்காமல் போகுமா? விளங்கிவிட்டது. கண்ணனைக் கொல்லுவதற்கே தன் மகன் ஆலோசனை கேட்கிறான் என்பதைத் தெரிந்து கொண்ட திருதராட்டிரன் தன் மகன் எண்ணத்தைத் தவறு எனக் கண்டித்துக் கூறியிருக்கலாம். பாண்டவர்களுக்குரிமை உடைய நாட்டைச் சமாதான முறையிலே வழங்கிவிடத் தன் மகனுக்கு ஆணையிட்டிருக்கலாம் அல்லது அறிவுரையாவது கூறியிருக்கலாம். தான் நல்லதைச் சொன்னால் அதை மந்திரமாகக்கொண்டு தன் மகன் செயல்பட மாட்டான் என்பதனாலோ அல்லது தன் மகன் நினைத்ததுதான் தனக்கும் ஏற்றது என்பதனாலோ தெரியவில்லை. திருதராட்டிரன் தன் மகன் கேட்ட கேள்விக்கு

''இரும்புலி வலையிற் பட்டால் விடுவரோ
எயினர் ஆனோர்
வரம்பில் வெஞ்சேனை யோடும் வளைத்தினி
மாயன் தன்னைக்
கரும்பொழுதகலு முன்னே கொல்வதே கருமம்''
(கிருட்டிணன் தூது 171)

என்று பதிலுரைக்கின்றான்.

''வலிமை வாய்ந்த புலி வலிய வந்தது. வலையில் மாட்டியும் கொண்டுவிட்டது. வேடர்கள் என்ன செய்வோர்களோ அதைத் தான் நாமும் செய்யவேண்டும். எண்ணிலாப் படைகளோடு போய் மாயனை வளைத்துக் கொண்டு கரிய இரவுபொழுது அகலும் முன்பாகவே கரியவனைக் கொன்று விட வேண்டும்' என்று திருதராட்டிரன்-வயதில் மூத்தவன்- அன்பையும் அறத்தையும் போதிக்க வேண்டியவன் இப்படி ஒரு கருத்தைத் தெரிவித்ததைக் கேட்டுக் துரியோதனன் மகிழ்கிறான். சகுனியும் மகிழ்கிறான். துரியோதனின் உடன் பிறந்த தொண்ணூற்றெட்டுச் சகோதரர்கள் மகிழ்கின்றனர். ஏன் கர்ணனும் கூட கேட்டு மகிழ்கிறான். ஆனால் விகர்ணன் என்ற துரியோதனின் சகோதரன் ஒருவன் மட்டும் அதை வெறுக்கிறான். வெறுத்ததோடு அதை மறுத்தும் தன்

கருத்தைத் துணிவாக எடுத்துரைக்கிறான். தந்தை திருதராட்டிரன் ''கண்ணனைக் காரிருள் விடிவதற்குள்ளாகவே கொன்று மாய்க்க வேண்டும்'' என்று கூறியவுடனே அதைக் கேட்டுக் கலகலவெனச் சிரிக்கின்ற விகர்ணன் ''தூதுவராய் வந்த ஒருவரை யார் இதற்கு முன்பு கொன்று இருக்கிறார்கள்? அறிவும் அறமும் இல்லாத இத்தகைய ஆலோசனையை எங்கேயிருந்து கற்றுக்கொண்டீர்கள்'' என்று கேட்டுத்தன் கோபத்தைக் காட்டுகிறான்.

மேலும் விகர்ணன், ''முதியவர்கள், சிறுவர்கள், வேதம் வல்லமுனிவர்கள்,நோயாளிகள் அர்ச்சகர்கள், பெண்கள், தூதர்கள் ஆகியவர்களைக் கொல்வது கொடிய பாவம் ஆகும். அத்தகைய பாவம் செய்த பாதகர்கள் நரகமே அடைவார்கள். பகைவர்களேயானாலும், நாடு தேடி வந்தவர்களைக் கொல்லலாகுமா? அப்படிக் கொல்வது ஆண்மையும் ஆகுமா?'' என்று வினவி இறுதியாக ''அத்தகைய தகாத கருத்தைக் கைவிடுவதே தருமம். அதை மீறிக் கண்ணனைக் கொல்ல முயல்வீர்களேயானால் நான் சொல்வேன், கடலளவு சேனையைத் திரட்டிக் கொண்டு போவீர்களானாலும், கார் மேக வண்ணன் எவருக்குமே அகப்படமாட்டான்'' என்று துணிவாகத் தன் கருத்தை எடுத்துக் கூறித் துரியோதனனின் சதித் திட்டத்தை முறியடிக்க முயற்சி செய்கிறான். ஆனால் விகர்ணனுடைய முயற்சி அங்கே தோற்றுவிடுகிறது. அவனுடைய நியாயமான கருத்தை ஆதரிக்க அங்கே ஒருவர்கூட இல்லை. துரோபதையின் துகிலுரித்த வீரனாகிய துச்சாதனன் உடனே விகர்ணன் மேல் சீறி விழுந்து, ''பொடியர்களை எல்லாம் ஏன் இந்தப் பெரியோர்கள் கூடுகின்ற அவையில் அனுமதிக்கிறீர்கள்?'' என்று கூறி விகர்ணனின் அறிவுரைகளை அலட்சியப்படுத்தி விடுகிறான். ''இந்த இரவு நேரத்திலேயே இப்பொழுதே போய் விதுரன் மாளிகைக்குத் தீயை மூட்டி, கண்ணனோடு, வில்லொடித்துப் போட்ட விதுரனையும் பொசுக்கி விடுவோம். அனைவரும் புறப்படுங்கள்'' என்று ஆலோசனை கூறுகிறான் அவன்.

மறைந்து நின்று, தீமூட்டும் இந்தச் சதியாலோசனை ஏனோ கர்ணனுக்குப் பிடிக்கவில்லை. ''நெருப்பெரிய வைத்துத்தான் கண்ணனைக் கொல்ல வேண்டுமா? ஏன் நானில்லையா? என்னுடைய வில் இல்லையா? ஒரே ஒரு அம்பினாலே நேருக்கு நேர் நின்றே கண்ணனைக் கொன்றுக் காட்டுகிறேன். வாருங்கள் போகலாம்'' என்பதாகத் தன்னுடைய வீரத்தைப் புகழ்ந்துரைத்து துச்சாதனனின் எரிமூட்டும் ஆலோசனையை மறுத்து உரைக்கிறான் கர்ணன். ஆனால் அந்தக் கர்ணனின் ஆலோசனையும் துரியோதனனுக்குப் பொருத்தமான ஆலோசனையாகப் படவில்லை. துரியோதனனுக்குப் பொருந்தக்கூடிய ஆலோசனையை அவ்வப்போது அறிவிக்கின்ற திறமையும் பெருமையும் சகுனிக்கல்லவா இருக்கிறது! சகுனி தன் ஆலோசனையைத் தெரிவிக்கலானான். ''நம்முடைய அத்தினாபுரியிலிருந்து பத்திரமாகக் கண்ணன், பாண்டவர் இருக்கும் இடம் போய்ச் சேருவானேயானால், நிச்சயம் நம்மைப் போரிலே வெற்றி அடைய விடமாட்டான். அவனை வஞ்சித்துத்தான் நாம் வெற்றி கொண்டாக வேண்டும். பெரும்பள்ளம் ஒன்றைத் தோண்டுவோம். இராக்கதர்களையும் மல்லர்களையும் மறைவாக பள்ளத்தில் இருக்க வைப்போம். மேலே ஓர் பொய்யான ஆசனத்தை அமைப்போம். காலையில் கண்ணனை வரவழைத்து ஆசனத்தில் அமருமாறு கூறினால் அமருவான்; குழியிலே வீழ்வான். உடனே விலங்கைப் போட்டுகொடிய சிறையிலேவைத்து விடுவோம். தூதர்களைக் கொல்லுவதுவேண்டுமானால், அறம் அற்றதாக இருக்கலாம். ஆனால் தூதரைச் சிறைவைப்பது அறமானது தான்'' என்கின்ற பொருள்பட சகுனி

''கொல்லுவ தியற்கை யன்று குழிபறித் தரக் கரோடு
மல்லரை யிருத்தி மேலோர் ஆசனம் வகுத்து நாளை
எல்லிடை யழைத்து வீழ்த்தி இகலுடன் விலங்கு பூட்டித்
தொல்லருஞ் சிறையில் வைத்தல் தூதருக் குரிமை''

(கிருட்டிணன் தூது 179)

என எடுத்துரைக்க, அந்த ஆலோசனையையே பொருத்தமானதென ஏற்றுத் துரியோதனன் உடனே படுகுழி அமைக்கும் முயற்சியிலே ஈடுபடத் தொடங்குகிறான்.

படுகுழியைச் சகுனி உரைத்த ஆலோசனைப்படியே அமைத்து துரியோதனன் ஒரு லட்சம் போர் அரக்கர்களை அக்குழிக்குள் இருத்துகிறான். அவர்கள் போதாதென்று மேலும் மல்லர்களில் இரண்டு இலட்சம்பேரையும், பப்பரவர்கள் இரண்டு இலட்சம் பேரையும் படுகுழிக்குள் இருத்தும் துரியோதனன், அவர்களும் போதாதென்று 4 இலட்சம் வில் வீரர்களையும் படுகுழிக்குள் இருத்தி, பல ஆயுதங்களையும் கையாள வல்ல படைவீரர்கள் 40 லட்சம் பேர்களையும் கண்ணனைச் சிறைபிடிப்பதன் பொருட்டு அக்குழிக்குள்ளேஇருத்துகின்றான். கண்ண பெருமான் ஒருவரை மட்டும் சிறை பிடிக்கத் துரியோதனன் படுகுழிக்குள் இருத்திய வீரர்களின் மொத்த எண்ணிக்கை மட்டும் 49 இலட்சங்கள். ஒரு படுகுழிக்குள் 49 இலட்சம் போர் வீரர்களைமறைத்து வைக்கத்தக்க அளவிற்கு பூபாரம் மிகுந்து போயிருந்த நேரத்தில், போர் மூலமே பூபா

ரத்தைத் தீர்க்க முடியும் என்று கண்ணபெருமான் எண்ணியிருக்கிறார் என்பதை எண்ணும் போது எல்லாம் வல்ல அவர் திருவருளை நியாயமானதாகவே போற்ற வேண்டியிருக்கிறது.

கொடியவனான துரியோதனன், கண்ணனுக்குத் தெரியாமல் படுகுழி அமைத்துவிட்டதாக எண்ணி மகிழ்ந்திருக்கிறான்; 49 லட்சம் போர் வீரர்களும் பாய்ந்துபோய் கண்ணனை அசையவொட்டாமல் அமுக்கிப் பிடித்து, அவர் கைகளிலே விலங்கை மாட்டுவதும் உறுதி என்பதாக எண்ணி இனி தன்னை வெல்ல யாருமில்லை என்பதாக அவன் இறுமாந்திருக்கிறான். அவனுடைய தூதுவர்களும்போய் இரவுமுடிந்த காலை நேரத்திலே கண்ணபெருமானைத் துரியோதனன் அவசரமாகக் காண விழைவதாகத் தெரிவிக்கிறார்கள். படுகுழி வெட்டப்பட்டதும், அதனுள் லட்சகணக்கான போர் வீரர்களை இருத்தியிருப்பதும் மேலே அலங்காரப் பொய்யாசனம் அமைத்திருப்பதும் எல்லாம் அறிந்திருப்பவராகிய கண்ணபெருமான் 'துரியோதனா! என்னிடம் செல்லாதடா உன் மாயை; நான் வென்று காட்டுகிறேன். உன் ஆணவப் பேயை'' என்று கூறுவதைப் போல் புன்முறுவல் பூத்த வண்ணமே போய், துரியோதனன் கை காட்டிய பொய்யாசனத்தில் அமர்கிறார். ஆசனமும் நெறுநெறுவென்ற சப்தத்தோடு சிதைகிறது. கண்ணபெருமானும் படுகுழிக்குள் தொப்பென்ற ஓசையுடன் விழுகிறார். 'அகப்பட்டான் கண்ணன்'' என ஆர்ப்பரிக்கின்றனர் துரியோதனனும், அவன் கூட்டத்தார்களும். ஆனால் அதே நொடியில் மண்ணுக்கும் விண்ணுக்குமாக மாபெரும்வடிவம் எடுத்து, கண்டார் அஞ்சத்தக்க கோபத்தின் வடிவமாகக் காட்சியளிக்கிறார் கண்ணபெருமான்.

இடிகள் முழங்குவதைப் போன்ற பேரோசைகள் அங்கே தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கின்றன. அவை அனைத்தும் கண்ணபெருமான் காலால் அரக்கரை உதைக்கும் இடிஓசைகளே. கடலலைகள் ஊழிக்காலத்தில் ஒலிப்பதைப் போன்ற கொடிய ஓசைகள் அங்கே தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கின்றன. அவையும் கண்ணபெருமான் தம் கால் விரல் நகங்களால் பப்பரவரையும் மல்லரையும் தூக்கிப் பந்தாடுவதால் உண்டாகும் ஓசைகளே. ஆயுதங்களோடு 49 லட்சம் வீரர்கள் கண்ணன் மேல் பாயக் கண்ணபெருமானோ துரியோதனனுக்கு எதிராக ஆயுதம் எடுக்கமாட்டேன் என்று செய்து தந்திருந்த உறுதிமொழி தவறாமல், ஆயுதம் ஒன்றும் ஏந்தாமலே—ஆயுதம் ஒன்றும் தேவைப்படாமலே தம் கால்களையே ஆயுதமாகக் கொண்டு கால்களால் உதைத்தே வஞ்சகர்களின் தலைகளை வானிலே சிதறுமாறும், பாதாளம் நோக்கிப் பாயுமாறும் உதைத்து வதைக்கிறார். அவருடைய சீற்றத்தின் முன் 49 லட்சம் வீரர்களும் சிற்றெறும்புகளாகி நசுங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதனை கண்டு பாதாளத்தில் வாழும் நாகர்கள் நடுங்குகின்றனர். மேல் உலக வானவர்களும் கண்ணனை நோக்கி கைகூப்பி கோபத்தில் தங்களுக்கு ஏதும் துன்பம் செய்துவிட வேண்டாம் என்பதைப்போல வணங்கி வேண்டி நிற்கின்றார்கள். காத்தல் தொழிலுக்குக்கடவுள் ஆகிய கண்ணபெருமானே, விசுவரூபம் பூண்டு அழிக்க முற்பட்டால், எந்த மலை நிற்கும்? எந்தக் கடல் தங்கும்? எந்த உலகம் தான் வாழும் என்று தேவர்களும் முனிவர்களும், வேதங்களைச் சொல்லிக் கண்ணபெருமானை நோக்கி கோபம் நீங்கவேண்டுமெனக் கும்பிட்டுக் குறையிரக்கின்றார்கள்.

''ஆரணனே யரனே புவனங்கள்அனைத்தையும்
அன்றுதவும்
காரணனே கருணாகரனே கமலாசினி
காதலனே
வாரணமே பொதுவேயொரு பேரிடவந்தருளும்
புயலே
நாரணமே முனியேல் முனியேல் என நாகர்
பணிந்தனரே''

(கிருட்டிணன் தூது. 209)

''மாதவனே முனியேல்எமை ஆளுடைவானவனே
முனியேல்
யாதவனே முனியேல் இதயத்தில் இருப்பவனே
முனியேல்
ஆதவனே முனியேல் மதிவெங்கனல் ஆனவனே
முனியேல்
நீதவனே முனியேல் முனியேல் என நின்று
பணிந்தனரே''

(கிருட்டிணன் தூது 210)

இவ்வாறு நாகர்கள், வானவர்கள், முனிவர்கள் வணங்கிக் கண்ணனை நோக்கி வேண்ட, துரியோதனின் சதியிலே பங்குகொண்டிருந்தவர்களாகிய திருதராட்டிரன், கர்ணன் அவனுடைய தம்பிகள் பலரும்கூட தங்கள் பாவத்தைப் பொறுத்துச் சினம் தவிர வேண்டுமெனக் கண்ணபெருமானின் பாதகமலங்களை வணங்கி வேண்டுகிறார்கள்.

''கண்ண பொறுத்தருள் வெண்ணெய்
அருந்தியகள்வ பொறுத்தருள்கார்
வண்ண பொறுத்தருள் வாமா பொறுத்தருள்
வரதபொறுத்தருள்நீ
திண்ணமனத் துணர்வொன்று மிலாதவர்செய்த
பெரும்பிழை யென்று
அண்ணல் மலர்க்கழல் சென்னியில் வைத்தெதிர்
அன்று துதித்தனரே''

(கிருட்டிணன் தூது 212)

''என் வில்லின் கொடுங்கணையால் கண்ணனை மாய்ப்பேன்'' என்று இரவு சதியாலோசனை கூட்டத்தில் வீரம் பேசிய கர்ணனும், 'இரும் புலி வலையிற் பட்டால் விடுவரோ எயினரா னோர்'' என்று சதி ஆலோசனை கூறிய திருத ராட்டினனும் மற்ற மற்ற துரியோதனனின் வஞ்சக் கூட்டணியினரும் இவ்வா 'பொறுத்த ருள் பொறுத்தருள்'' எனக் கால் வீழ்ந்துவணங் கிக் கண்ணபெருமானைச் சாந்தப்படுத்துகிறார் கள். அவ்வாறு சாந்தப்படுத்தியிருக்கா விட் டால், பதினெட்டு நாட்கள் நடைபெற்று முடிய வேண்டிய பாரதக் கொடும்போருக்குவாய்ப்பே இல்லாமல் துரியோதனர்கள் கூட்டம் அன்றே- அப்பொழுதே அழிந்துபட்டிருக்கும். ஆனால் இவ்வளவு நடந்தும், விண்ணுக்கும் மண்ணுக்கு மாக கண்ணபெருமான் கொண்ட விசுவரூபத் தைப் பார்த்தும், அங்கே தன் கண்ணெதி ராகவே 49 லட்சம் போர் வீரர்கள் தலைசிதறு கைகால்கள் தனித்தனியே சிதறி இரத்தக் கடலில் துடித்ததைப் பார்த்தும்கூட துரியோத னன் ஒரு சிறிதும் மனஞ்சலிக்கவில்லையாம். எனில் அவன் அரக்கமனத்தின் தன்மையை எப்படி எடுத்துரைப்பது? துரியோதனுடைய விபரீதக் காலக்கொடுமையே அவன் கண்ண பெருமானை வணங்கவும், பிழையைப்பொறுக்கு மாறு வேண்டவும் முயலாதவாறு அவனைத் தடுத்தது போலும்!

விசுவரூபம் அடக்கி, தம் மானிட வடிவை மீண்டும் கொண்ட கண்ணபெருமான், ''துரி யோதனா! நீ உன் தீய அறிவினாலேஎன்னைக் கொல்ல முயன்றாய். ஆனால், நான் எண்ணி யிருப்பேனேயானால், உன்னுடைய வம்சம் முழுதும் அழிந்து ஒழியுமாறு ஒரே நொடி நேரத்தில் பொடி பொடியாக்கியிருப்பேன். ஏன் நான் அப்படி செய்யவில்லை தெரியுமா? போரில் உனக்கெதிராக ஆயுதம் ஏந்த மாட் டேன் என்று என்னால் உனக்குத் தரப்பட்ட உறுதிமொழியைக் காப்பதற்காகத் தான். அது மட்டுமல்ல; நானே உன்னையும், உன் கூட்டத் தையும்அழித்துவிட்டால் அன்றைக்குப் பாண்ட வர்கள் உங்களை அழிப்பதாகச் செய்திருக்கிற சபதத்தை நிறைவேற்ற வழியில்லாமல் போய் விடும். ஆகவே தான் உன்னை அழிக்காமல் இப்பொழுது விட்டுப் போகிறேன்'' என்பதாகக் கூறி, இனியும் அங்கே நிற்பதில் யாதொரு அர்த்தமும் இல்லை என்பதாகத் துரியோதன னின் அரண்மனையைவிட்டுப் புறப்படலானார். அப்பொழுது கண்ணபெருமானை வணங்கியவர் களாக நின்ற கர்ணன் உள்ளிட்ட அவ்வவையில் இருந்த அனைவருமே, கண்ணனை வழியனுப்ப ஒதுங்கி வழி விட்டு வாசல்வரை உடன் வந் தார்கள். உடன் வந்த கர்ணனை மட்டும் தம் மருகே வரவழைத்த கண்ணன், ஒரு சில வார்த் தைகளிலே அவனுடைய பிறப்பின் இரக சியத்தை அவனுக்குத் தெளிவுபடுத்துகிறார்.

''அந்தணன் முன தரு மந்திரம் ஐந்தினில்
அறுவரையும் கடவுள்
குந்தி பயந்தனள் யானினி யென்பல கூறுவது
உங்களில் நீர்
இந்த நிலம்பெறுவீர் தவிர்கிற் பெற யாரினி
வேறுரியார்
வந்தினி நும்பியர் தம்மொடு சேர்கென மாயன்
மொழிந்தனனே''

(கிருட்டிணன் தூது.220)

தீயவர்களுக்குத் துணைபோய், தூய கர்ணன் பாவத்தில் பங்குகொண்டுவிடக்கூடாது என்று எண்ணிய கண்ணபெருமானின் திரு வருளே இவ்வாறு 'பாண்டவர்களுடன் வந்து சேர்க' எனக் கர்ணனை நோக்கி அறிவுறுத்து கின்றது! ஆனால் அதுநாள் வரையிலும் தன்னைப் பெற்றவர் யார் என்று தெரியாமல் திகைத்து இருந்தவனாகிய கர்ணன், குந்தியே தன் தாய்என்பதை அறிந்து மேலும் திகைப் பிற்குஆளானதாலும், செஞ்சோற்றுக் கடனைத் தருமமாக அவன் மதித்ததனாலும், கண்ண னைப் பணிந்தவனாய்,

''கன்றால் விளவின் கனியுகுத்தும்
கழைஆநிரையின் கணம் அழைத்தும்
குன்றால் மழையின் குலம் தடுத்தும்
குலவும் செல்வக்கோபாலா
இன்றால் எனது பிறப்புணர்ந்தேன்
என்றன்புருகி எம்பியர்பால்
சென்றால் என்னை நீயறியச்
செகத்தார் என்றும் சிரியாரோ''

(கிருட்டிணன் தூது. 221)

''ஆரென் றறியத் தகாதவெனை
அரசுமாக்கி முடி சூட்டிச்
சீரும் திறமுந் தனது பெருந்திருவும்
எனக்கே தெரிந்தளித்தான்
பாரின் றறிய நூற்றுவர்க்கும் பழிதீர்
வென்றிப் பாண்டவர்க்கும்
போரென் றறிந்துஞ் செய்ந்நன்றி
போற்றா தவரிற் போவேனோ''

(கிருட்டிணன் தூது. 222)

என்று பதில் இறுக்கின்றான்.

கர்ணன் இவ்வாறே பதிலுரைப்பான் எனபதும் கண்ணபெருமான் தம் திருவருளால் ஏற்கெனவே அறிந்து வைத்திருந்ததுதான். குந்தியிடம் கர்ணனின் பிறப்புண்மையைத் தெரிவித்து வரம் கேட்டுப் பெறக் கூறிவிட்டு, இப்போது கர்ணனிடம் அவன் தாய் யார் என் பதை ஏன் தாமும் தெரிவித்தருளுகின்றார் என் றால், கர்ணன் சிந்தித்துப் பார்ப்பதற்கு அது வாய்ப்பாக அமைய வேண்டும் என்ற கருத்தி னால் தான். ஆகவே தான் ''குந்தி உன்னைத்

தேடிவந்து வரம் கோருவாள்'' என்பதாக எதுவுமே கூறாமல், கர்ணன் தன்னுடைய மனக் கருத்தைத் தெரிவித்தபின், அதன்மேல் தன் கருத்தொன்றையும் கூறாமல் கண்ணபெருமானும் கர்ணனுக்கு விடை கொடுத்தனுப்பிவிடுகிறார். ''தன்னைப் பெற்றவள் குந்தியே, பாண்டவர்கள் தம் தம்பிமார்களே; போரோ வந்து விட்டது, கண்ணனோ பாண்டவருடன் சேருக என்கிறார். நாமோ துரியோதனனின் உப்பை உண்டு விட்டோம்., செஞ்சோற்றுக்கடனே கடன்'' என்பதாகப் பல்வேறு எண்ணங்கள் வந்து மோத, கர்ணனும் கண்ணனிடம் விடை பெற்றுச் செல்கிறான்.

அரண்மனை வாயிலைத் தாண்டிவெளியே வந்த கண்ணபெருமான் தன்னருகே வருமாறு, அடுத்து அசுவத்தாமாவை அழைத்தார். அசுவத்தாமா மாபெரும் வீரன். பாண்டவர், கௌரவர் ஆகிய இருசாராருக்கும் குருவாக விளங்கும் துரோணரின் ஒரே மகன். சிவ பெருமானின் வரத்தாலே பிறந்தவன். அவன் போர்க்களத்தில் எதிர் நிற்பானேயானால், எவ்வளவு கோடிப் படை வீரர்கள் வந்தாலும் ஒரே பகலில் வெல்லக்கூடிய ஈடு இணையற்ற படைக்கலப் பயிற்சிகளைப் பெற்றவன். அத்தகைய மாபெரும் வீரன், துரியோதனனின் படைத்தலைமையை ஏற்று விட்டால் பாண்டவர்கள் வெற்றி பெறுவது எளிதல்ல என்பதை அறிந்திருந்தவராகிய கண்ணபெருமான், அசுவத்தாமாவின் பேரில், துரியோதனன கொண்டிருக்கும் நம்பிக்கையைக் குலைக்க ஒரு நாடகம் நடத்தியாக வேண்டும் என்பதாகத் திருவுள்ளம் பாலித்தே அசுவத்தாமாவைத் தம் மருகே வருமாறு அழைத்தார். தம் கை விரல் மோதிரம் தானாக நழுவித் தரையிலே விழுவதைப்போல செய்தார். அசுவத்தாமா கண்ணனின் சூழ்ச்சி புரியாமல், கண்ணபெருமானின் மோதிரத்தைக் கீழே குனிந்து எடுத்துத்தர, அதை உடனே வாங்கிக் கொள்ளாமல், ஆகாயத்தை அசுவத்தாமாவிடம் காட்டிச் ''சூரியனை ஊர்கோள் சூழ்ந்திருப்பதைப் பார்த்தாயா?'' என ஒரு கேள்வியையும் கேட்டு, அதற்கு அசுவத்தாமாவும் தலையசைக்க, பிறகே தம் மோதிரத்தை வாங்கிக் கை விரலில் அணிந்து கொண்டார். இவற்றையெல்லாம் வைத்தகண் வாங்காமல் தன்னுடைய ஆசனத்திலிருந்தே பார்த்துக்கொண்டிருந்த துரியோதனன் ''ஆ! அசுவத்தாமாவும் எனக்குத் துரோகம் செய்துவிட்டான். கண்ணனின் மோதிரத்தை வாங்கிச் சூரியன் சாட்சியாக கண்ண பெருமானுக்கு சத்தியம் செய்து தந்து விட்டான். இனி அவனை நம்பவோ, அவனைப் படைத் தளபதி ஆக்கவோ நானொன்றும் ஏமாளி அல்ல. அதோ அங்கே பாருங்கள்!'' என்பதாகத் துரியோதனன் சப்தமிட, அசுவத்தாமாவும் அப்போது தான் கண்ணன் நடத்திய ஒரு நாடகத்தால் துரியோதனன் தன்மீது நம்பிக்கை இழந்துவிட்டதை உணர்ந்து வருந்துகின்றான். மோதிரத்தைக் கையில் வாங்கிச் சூரியன் சாட்சியாகச் சத்தியம் செய்வது அக்காலப் பழக்கமாகும்.

விதுரனின் வில்லொடிக்க அவர் வீட்டில் விருந்தாளியாக தங்கிய கண்ணபெருமான், அது நாள் வரை சொல்லாமல் வைத்திருந்து குந்திக்கும், கர்ணனுக்கும் அவர்களைப் பற்றிய இரகசியம் தெரிவித்த கண்ணபெருமான், இப்போதும் அசுவத்தாமாவின் வீரம் துரியோதனனுக்குப் பயன்படாமல் போவதற்காக விரலாழியை நழுவவிட்டு ஒரு நாடகம் நடத்தி வெற்றியே கண்டார் என்றால் தருமத்தை நிலைநிறுத்த அவர் ஆற்றிடும் தந்திரங்களின் சிறப்பை எப்படி எடுத்துரைப்பது? 'நாடகமே உலகம், மாந்தர் எல்லாம் நடிகர்கள்' என்று மகாகவி சேக்ஸ்பியர் தம் காவியத்தில் வரைந்திருக்கிறார். ஆனால் நம்முடைய தமிழ்ச் சமயச் சான்றோர்கள் தான் ஆண்டவனையே நடிகனாக, மாந்தர் வாழ்க்கையெல்லாம்இறைவன் திருவிளையாடல்களாக வருணித்திருக்க்கிறார்கள்.

> ''உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
> நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
> அலகு இலா விளையாட்டு உடையார் அவர்
> தலைவர், அன்னவர்க்கே சரண்
> நாங்களே''

என்று கவிச்சக்கரவர்த்திக் கம்பரும் இறைவனையே நாடகத் தலைவராகக் காட்டுவார். மகாபாரதக் காவியம் முழுதுமே கண்ணபெருமானின் திருவிளையாடல்களைக் காட்டுவது தான். கண்ணபெருமான் அசுவத்தாமாவிடம் ஆடிய இந்தநாடகத்திற்குப் பிறகு இமையவர் வேந்தனாகிய இந்திரனை உடனே தாம் இருக்குமிடம் வருமாறு அழைக்கிறார். இந்திரனும் வந்து வணங்கி நிற்கிறான். ''நீ செய்து முடிக்க வேண்டிய வேலை ஒன்று இருக்கிறது. நான் சொல்வதைப்போல் செய்'' என்று இந்திரனுக்கு ஆணையிட்டருளுகிறார் கண்ண பெருமான். இந்திரனைக் கண்ணபெருமான் என்ன வேலை செய்து வர ஏவுகிறார்? அவ் வேலையும் கண்ணபெருமானின் மனம்போலவே நடந்துமுடிகிறதா? என்பனவற்றையெல்லாம் இனிவரும் இதழில் காண்போம்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சாதனைகளை விவரிக்கும்

# "அண்ணா வழியில் ஆர். எம். வீ."

## நூல் மதிப்புரை

—செவ்வேள்.

அறநிலையத்துறையின் அண்மைக்காலச் சாதனைகளைப் படம் பிடித்துக் காட்டும் மிகச் சிறந்த நூலே ''பேரறிஞர் அண்ணா வழியில் அமைச்சர் ஆர்.எம். வீ.'' என்ற இந்நூலாகும். பேரறிஞர் அண்ணா அவர்களும், தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களும் ஆலயங்களைப் பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்கள் என்ன? அக்கருத்துக்களின் வழியே மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் என்னென்ன சாதனைகளை ஆற்றி வருகிறார் என்பன வற்றையெல்லாம் விரிவாகப் பேசும் இந்நூல் காலத்தால் மறையாத வரலாற்றுப் பெட்டகம் ஆகும்.

ஆலயங்களை அண்ணா மறுக்கவில்லை, ஆலயங்கள் மேற்கொண்டாக வேண்டிய சமுதாயப் பணிகளைத்தான் அவர் வற்புறுத்தியிருக்கிறார் என்று கூறும் நூலாசிரியர்

''கோயில்களில் உள்ள பணத்தைக் கொண்டு கோயில் அதிகாரிகள்தொழுநோயாளிகளுக்காக ஏன் ஓர் ஆஸ்பத்திரி அமைக்கக் கூடாது? ஏழை-பஞ்சை மக்களைக் காப்பாற்றும் பொறுப்பை, ஏன் கோயில் அதிகாரிகள் எடுத்துக் கொள்ளவில்லை. வரதராஜர் ஏழைகள் விடுதி என்று ஏன் அந்தக்கோயில் தருமகர்த்தாக்கள் வருடந்தோறும்கோயிலுக்கு வரும் பணத்தைக் கொண்டு நடத்தக் கூடாது?'' (பக். 24—25)

என்று அறிஞர்அண்ணா அவர்கள் சிந்தியுள்ள கருத்து முத்துக்களை எடுத்துக் காட்டிஅண்ணா வழியில் மாண்புமிகு அமைச்சர் ஆர். எம். வீ. அவர்களும் மாண்புமிகு தமிழக முதல்வரின் ஆணையின் பேரில் ஆலயங்களில் ஆண்டு தோறும் சிறப்புத் திருமணங்கள், பொது விருந்து மற்றும் சிறப்பு வழிபாடு நிகழ்ச்சிகள் நடத்துவதையும் விவரித்திருக்கிறார். சொல்லப் போனால் அண்ணா அவர்கள் சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை ஆலயங்கள் ஆற்ற வேண்டியதை மட்டுமே வற்புறுத்தியிருக்க, டாக்டர் எம். ஜி. ஆர். தலைமையிலான தமிழக அரசோ அரிசனரையும் அர்ச்சகராக்குவது உட்பட எண்ணற்ற சமுதாய நலத் திட்டங்களை ஆற்றுவதோடு ஆலயம்தோறும் தங்கத் தேர்கள் அமைப்பது, ஆலய விக்கிரகங்கள் நகைகளைப் பாதுகாப்பது, ஆலயங்களைத் திருப்பணிகளால் புதுப்பிப்பது முதலான பல ஆலய மேம்பாட்டுத் திட்டங்களோடு ஏழு கோடித் திட்டம் என்ற மகத்தான ஆலய மேம்பாடுதிட்டத்தை அறிவித்து நடத்துவதையும் எளிய இனிய நடையில் ஆசிரியர் விவரித்திருப்பதையெல்லாம் எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை.

மாண்புமிகு தமிழக முதல்வரின் சத்துணவுத் திட்டத்திற்கு ஆலயங்களின் பெயரால் 158 சத்துணவுக் கூடங்கள் அமைக்கப்படுவதற்குச் சிலர் எதிர்ப்பு தெரிவிப்பதையும், அதற்கு மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர், ''அந்த உணவுக் கூடங்கள் அருள்மிகு கற்பகாம்பாள் உணவுக் கூடம், அருள்மிகு தேவிகருமாரி அம்மன் உணவுக் கூடம், அருள்மிகு வடபழநி ஆண்டவர் உணவுக் கூடம் என ஆங்காங்குள்ள தெய்வங்களின் பெயரால் அமைக்கப்படவுள்ளன. இவ்வுணவுக் கூடங்களில் எல்லாம் நம்முடைய ஏழைக்குழந்தைகள் தான் சாப்பிடுகின்றார்கள். சாப்பிடப் போகிறார்கள். ஒரு சிறுவனை 'உனக்கு எங்கே சாப்பாடு?'' என்று கேட்டால் 'கற்பகாம்பாள் உணவுக் கூடத்தில் சாப்பாடு, கருமாரியம்மன் கூடத்திலே சாப்பாடு' என்று நம்முடைய தெய்வங்களின் பெயர்களைக் கூறுவான். குழந்தைகளின் உள்ளங்களிலெல்லாம் தெய்வத்தின் திருப்பெயர்கள் நன்கு பதியும். தமிழகப் பள்ளிகளில் பயில்கின்ற இசுலாமியச் சிறுவனும் கிறித்துவப் பையனும்கூட. இதன் மூலம் நம் தெய்வங்களின் பெயர்களைச் சொல்லுவார்கள். ஆலய நிதிகளின் மூலம் மதப்பிரச்சாரம்தான் நடக்க வேண்டும். ஆலய நிதியை மத வளர்ச்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | டாக்டர் த. அமிர்தலிங்கம் |
| நூல் வெளியீடு | : | டாக்டர் வலம்புரிஜான் M.P.<br>கவிதாபானு,<br>122, பெரியார் பாதை,<br>சூளைமேடு,<br>சென்னை-600 094 |
| விலை | : | ரூ. ஆறு மட்டும் |



சத்துணவு தந்து சரித்திரப் புகழ்கொண்ட
மாண்புமிகு தமிழக முதல்வர்

சிக்குத் தான் பயன்படுத்த வேண்டும் என்று சிலர் கூக்குரல் இடுகின்றனரே! இதைவிட ஒரு சிறந்த சமயப் பிரச்சாரம் வேறு என்ன இருக்க முடியும்? '' என்று பொன்னெழுத்துக்களில் பொறிக்கத்தக்க விளக்கம் தந்திருப்பதையும் விவரித்திருப்பது, பொருத்தமாகவும் அருமை யாகவும் இருக்கிறது.

ஆலயங்களின் பெயரில் சத்துணவுக் கூடங்கள் அமைக்கப்படுவதன் சிறப்பை இவ் வாறு எடுத்துக் காட்டியுள்ள ஆசிரியர் சத் துணவுத் திட்டத்தின் சிறப்பையும் கற்பார் மனம் நெகிழத் தம் வாழ்க்கை நிகழ்ச்சியைச் சான்று காட்டி விவரித்திருப்பதையும் இங்கே சுட்டாமல் இருக்க முடியவில்லை. அந்தச்சிறப்பு மிகு பகுதியை நீங்களும் படித்துப் பாருங்கள்.

''சேலத்தில் வயிற்றுக் குழிக்காய் தறியின் குழியில் கஷ்டப்பட்டும் சுகம் காணாத கைத் தறி நெசவாளியின் மகன் ஒருவன் இருந்தான். அவன் 6, 7, 8 ஆம் வகுப்புகளில் படித்து வந்த போது அவனுக்குப் பெருந்தலைவர் காமராஜ ரின் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் மதிய வேளைகளில் உணவுப் பொட்டலம் கொடுக்கப் பட்டு வந்தது.

காமராசரை வாழ்த்தியபடி அவனும் பசி யாறிப் படிப்பினில் வகுப்பிலேயே முதல் மாணவனாய் விளங்கி வந்தான். அம்மாணவன் ஒன்பதாம் வகுப்பிற்குச் சென்றபோது, அன்று வரையிலும் அவனுக்கு வழங்கப்பட்டு வந்த மதிய உணவுப் பொட்டலம் அவனுக்குக் கிடைக்காதபடி இடையூறு ஒன்று நேர்ந்து விட்டது.

காமராஜரின் மதிய உணவு ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு மாணவருக்கு மட்டுமேஅவன் படித்த சேலம் நகராட்சிப் பள்ளியில் வழங்கப் பட்டு வந்தது. அவனுடைய 9-ஆம் வகுப் பிற்குக் கால் ஊனமுற்ற புதிய மாணவன் ஒருவ னும் அந்த வருடம் வந்து சேர்ந்திருந்தான். மதிய உணவுப் பொட்டலம் கைத்தறி நெச வாளியின் மகனுக்கா? அல்லது உடல் ஊன முற்ற புதிய மாணவனுக்கா என்ற கேள்வி எழுந்தபோது, கைத்தறி நெசவாளியின் பிள்ளையே களத்தில் தோல்வி கண்டான்.

அவனைப் பற்றி நன்கு அறிந்திருந்த அவ னுடைய வகுப்பாசிரியர் திரு ஆர். சந்திர சேகர் அவர்கள் தாமே மனமுவந்து மதிய உணவுப் பொட்டலத்திற்குத் தேவையான பணத்தை அவன் 9, 10, 11 ஆம் வகுப்புகள் முடிய படிக்கும் வரையிலும் கொடுத்து உதவிய காரணத்தால்தான் அவன் எஸ். எஸ். எல். சி. படித்து, பி. யு. சி. முடித்து பி.ஏ., படித்துப் பின் எம். ஏ. வும் முடித்து, டாக்டர் பட்டமும் வாங்கக் கூடிய அளவிற்கு உயர முடிந்தது.

ஆம்! காமராஜரின் மதிய உணவால் மதியை வளர்த்த கைத்தறி நெசவாளியின் பிள்ளை வேறு யாருமில்லை. இந்நூலாசிரியன் தான். ஒரு வகுப்பில் ஒரு மாணவருக்குமட்டுமே அல்லது ஒரு சில மாணவர்களுக்கு மட்டுமே- காமராஜர் மதிய உணவு தந்தபோதும்கூட, கைத்தறி நெசவாளர் குடும்பத்தில் ஒருவன் உயர்பட்டம் பெற முடிந்தது என்றால், கல்வி கற்கும் அனைவருக்குமே சத்துணவு வழங்கும் பொன்மனச் செம்மலின் சத்துணவுத் திட்டத் தினால் எத்தனை இலட்சம் குழந்தைகள் உயர் பட்டம் பெற முடியும் என்பதை எண்ணிப் பாருங்கள்'' (பக். 28—29).

இத்தகைய மனம் நெகிழ வைக்கும் சிறந்த பகுதிகளைக் கொண்டுள்ள இந்நூலைப் படைத்த ஆசிரியரை எவ்வளவு பாராட்டினா லும் தகும். பரம்பரைத் தருமகர்த்தாக்களின் பொறுப்பில் உள்ள ஆலயங்கள், மடாதிபதி களின் அதிகாரத்தில் உள்ள ஆலயங்கள், தில்லை தீட்சிதர்களின் கைவசம் உள்ள சிதம் பரம் ஆலயம் அனைத்தும் அரசின் நேரடி நிர் வாகத்தில் வருவதற்காக மாண்புமிகு அறநிலை யத் துறை அமைச்சர் திருமிகு ஆர். எம். வீ. அவர்கள் மேற்கொண்டுள்ள பணிகளை இந் நூல்ல்அலசிக் காட்டும் ஆசிரியர், அமைச்சரின் சீரிய எண்ணம், கைகூட வாழ்த்தினைத் தெரிவித்து நூலைச் சிறப்பாக முடித்திருக்கி றார். மாண்புமிகு ஆர். எம். வீ. அவர்களின் முயற்சிகள் வெல்ல நாமும் நம்முடைய நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்போமாக!

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



தஞ்சையில் இராஜராஜன் முடிசூடிய ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியின் போது "இராஜ ராஜேஸ்வர விஜயம்" நாட்டிய நாடகம் அரங்கேற்றமாகியது. கலைக் குழுவினருடன் மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் வீற்றிருக் கும் காட்சி.

"இராஜராஜேஸ்வர விஜயம்" நாட்டிய நாடகக் குழுவின் தலைவி திருமதி சுந்தரி சந்தானம் அவர் களுக்கு மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் பரிசு வழங்கிய போது எடுக்கப்பட்ட படம்.






காந்தி கிராமப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. அறம் அவர்கள் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்குகிறார்.

பதிவு எண். எம் 7039